எஜமானின் சாயல்

சகரியா பூணன்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

எஜமானின் சாயல்

சகரியா பூணன்....

களிமண் நான்,

குயவனே .... எஜமானின் சாயல் என்னில் வனைவீரே !

© ZAC POONEN 1999

பொருளடக்கம்

		பக்கம்
1.	வேரின்மீது கோடாரி வீசப்படுவதாக	1
2.	குணப்பட அழைத்திடும் தேவதயவு	16
3.	தேவா, தாழ்மை எமக்கு வேண்டும்	17
4.	நான் கற்ற 16 - முக்கிய சத்தியங்கள்	29
5.	பிதாவே உம் நாமம் மகிமைப்படுவதாக	43
6.	தேவையான ஒன்று, தாழ்மையே	44
7.	ஒளிமய மணவாழ்க்கை	45
8.	தனக்கானதைத் தேடுவோர் ஆவிக்குரியவர்கள் அல்லர்	53
9.	அன்பின் தயை நிறைந்த நாவு	61
10.	அந்நியபாஷை பேசுவதைக் குறித்த சத்தியங்கள்	69
11.	நாம் மரித்தபின்பு நம்மை சூழ்ந்துகொள்ளும் ஞாபக நினைவுகள்...!	85
12.	அறியாது போனேனே	89
13.	கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் !?	90
14.	நிறைவான சந்தோஷம்	91

இது ஒரு ''பரலோக பொக்கிஷங்கள்'' வெளியீடு

ஆசிரியர் முகவரி :

ZAC POONEN, 16-DACOSTA SQUARE, BANGALORE - 560 084.

சீஷன் குருவைப்போலவும், வேலைக்காரன் எஜமானைப்போலவும் ஆவான்! எனக்கூறிய எம்பெருமான் இயேசுவே!! இவ்வித அழைப்பை இவ்வுலகில் எந்த எஜமானும், எந்த குருவும் கூறியதில்லையே!!

உம்மை எங்கள் குருவாய் பெற்றது எங்களுக்கு கிட்டிய மாபெரும் பாக்கியம்!!

எம் வாழ்க்கையானாலும், ஊழியமானாலும், குருவே .... உம் அடிச்சுவட்டை உற்றுநோக்கி பரவசத்துடன் பின்பற்ற எம்மை உமக்குத் தந்திட்டோம்!!

''எஜமானின் சாயல்'' எம்மில் நீர் வனையும் வரை, குயவனே உம்கையில்''களிமண்ணாய்'' அடங்கியிருக்க எமக்கு அருள்புரிவீராக!!

1

வேரின்மீது கோடாரி வீசப்படுவதாக!

(AN AXE TO THE ROOT)

ஒரு பறவைக்கு இரண்டு செட்டைகள் இருப்பதைப்போலவே தேவனுடைய சத்தியமும் இருக்கிறது! ''இப்படி எழுதப்பட்டிருக்கிறதே'' என்பது ஒரு செட்டையாகவும், ''இப்படியும் எழுதப்பட்டிருக் கிறதே'' என்பது இன்னொரு செட்டையாகவும் இருக்கிறது. நீங்கள் ஒரு ''செட்டையை'' மாத்திரமே யுடையவராயிருந்தால் அதை வைத்து தொடர்ச்சியாய் ஒரே வட்டத்திற்குள் மாத்திரமே சுற்றி வந்து கொண் டிருப்பீர்கள்... அநேகமாய், பாதை மாறியும் சென்றுவிடுவீர்கள்! ஆனால், உங்களுக்கு வேதம் கற்றுத்தரும் இரண்டு செட்டைகளும் இருந்தால், தடையேதுமின்றி முன்னோக்கிப் பறந்து கொண்டேயிருப்பீர்கள்.

உதாரணமாய், ''கிறிஸ்து சிலுவையில் ஏன் மரித்தார்?'' என்ற கேள்வியைக் கேட்டுப்பாருங்கள். பொதுவாய் இக்கேள்விக்கு கிடைக்கும் உடனடியான பதில், வேதத்தில் எழுதியிருக்கிறபடி ''கிறிஸ்து நமது பாவங்களுக்காக மரித்தார்'' (1கொரி 15:3) என்றே அனேகர் கூறுவர். ஆனால், அது பாதி சத்தியம் மாத்திரேமே! வேதத்தில், ''பிழைத் திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி அவர் எல்லாருக் காகவும் மரித்தார்'' (2கொரி 5:15) என இப்படியும் எழுதப்பட்டிருக் கிறதே.... இதை நீங்கள் கண்டீர்களா? இவ்வாறு இந்த இரண்டு வேத வாக்கியங்களையும் ஒன்றாய் சேர்க்கும்பொழுதுதான் நாம் சத்தியத்தின் இரண்டு சிறகுகளையும் பெறுகிறோம்.

கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் என்று நாம் வாசிக்கும் பொழுது, ''பாவம் என்றால் என்ன?'' என்பதை நாம் நன்கு அறிந்தவர்களாய் இருக்கவேண்டும். இதைச் சரியாய் அறிந்து கொள்வதற்கு வேத வாக்கியங்கள் நமக்கு உதவி செய்கிறது. ''நமக்காக வாழும் ஒரு வாழ்க்கையே'' பாவம் என வேதம் சுட்டிக்காட்டுகிறது (2கொரி 5:15). ஆனால், இந்த வேதத்தின் விளக்கத்தை அநேக விசுவாசிகள் அறியவேயில்லை!

''இனிமேல் நான் பாவம் செய்யவிரும்பவில்லை'' எனக்கூறும்

நீங்கள் உண்மையிலேயே ''இனி எனக்காக நான் வாழ விரும்ப வில்லை'' என்ற பொருளோடுதான் மெய்யாகவே கூறுகிறீர்களா?

நாம் தேவனையும் அவருடைய வேதவாக்கியங்களையும் நெருக்கமாய் அறிந்திருந்தால், பாவம் என்பது கொலையோ; விபச்சாரமோ; திருடோ அல்ல என்பதையும்.... நமக்காக வாழும் வாழ்க்கைதான் பாவம் என்பதையும் நாம் நன்றாய் விளங்கியிருக்க முடியும். ஆம், நாம் நமக்காகவே வாழ்ந்து கொண்டிருந்தால், நாம் எவ்வளவு பெரிய கெட்ட பழக்க வழக்கங்களை விட்டிருந்தாலும் நாம் இன்னும் பாவத்தில்தான் ஜீவித்துக் கொண்டிருக்கிறோம்!

''ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான், பழயவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின'' *(2 கொரி 5:17)* என வேதம் கூறுகிறது. அதாவது, நம்முடைய பழைய மனப்பான்மை மாறுதல் அடைந்துவிட்டது என்பதே இந்த வசனத்தின் பொருளாகும். இன்னும் தெளிவாய் கூறவேண்டுமென்றால் ''இவன் தனக்காக வாழும் வாழ்க்கையை நிறுத்திவிட்டான்'' என்பதேயாகும். இவன் இன்னமும் கிறிஸ்துவைப்போலாகும் இலக்கை அடையவில்லைதான். இருப்பினும் இவன், தன் பழைய நிலையிலிருந்து திரும்பி இப்போதோ தேவனுடைய மகிமைக்காக ஜீவிப்பதை நாடுகிறான். இதுதான்... இதுமாத்திரமேதான், உண்மையான மனந்திரும்புதல்!

நீங்கள் ஒருவேளை சூதாடுவதையும், புகைபிடிப்பதையும், குடிப்பதையும் நிறுத்தியிருக்கலாம். இருப்பினும், இந்த எல்லா பாவங்களுக்கும் வேர்போல இருக்கும் ''உங்களுக்காக வாழும்'' வாழ்க்கையிலிருந்து நீங்கள் உண்மையாய் மனந்திரும்பவேயில்லை. ஆனால் இன்றைய பிரசங்கிகளில் அநேகர் உங்களை மகிழ்வூட்டுவதற்காக ''நீங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டீர்கள்'' எனக்கூறுவார்கள். இப்படிப்பட்ட பிரசங்கிகளுக்கு, நீங்கள் அவர்களுடைய கூட்டங்களுக்கு ஒழுங்காகச்சென்று, காணிக்கை பெட்டியில் பணம்போட்டால் அதுவே அவர்களுக்குப் போதுமானதாய் இருக்கும். இது சாத்தானுடைய கொடிய வஞ்சகமாகும். அதாவது ''ஒருவன் இன்னமும் தனக்காக வாழ்ந்துகொண்டே'' தான் இரட்சிக்கப்பட்டு விட்டதாகவும், முடிவில் பரலோகம் சென்று விடுவோம் என்றும் அவர்களை விசுவாசிக்க வைத்திருப்பது கொடிய வஞ்சகம் அல்லவா?

ஒருமனிதன் தன் ஜீவியத்தைப் பாழ்படுத்தும் தீயபழக்கங்களை விட்டுவிட்டுத் திரும்பி இருக்கலாம். ஆனால் அதுவும் அவன் இப்பூமியில் உள்ள தன் வாழ்க்கையைப் பாதுகாத்துக் கொள்வதற்காக எடுத்துக்கொண்ட முயற்சிதான் என்பதையே சுட்டிக்காட்டுகிறது. சிகரெட் பெட்டிகளில், சட்ட பூர்வ எச்சரிக்கை : ''புகைபிடிக்கும் பழக்கம் உடல் நலத்திற்கு கேடு'' என எழுதப்பட்டிருக்கும். ஆகவேதான், சிலர் புகை பிடிப்பதில்லை. இதே காரணத்திற்காகவே ஜனங்கள் குடிக்காமலும், சூதாடாமலும் இருக்கக்கூடும். தங்களுக்கு ''எய்ட்ஸ்'' நோய் வந்து விடுமோ என்ற பயத்தினிமித்தம் இன்று அனேகர் விபச்சாரமும் செய்வதில்லை. ஆனால் வேதப்புத்தகம் திட்டமும் தெளிவுமாய் கூறுகிறபடி

இதுபோன்ற ஜனங்களில் ஒருவரும் ''தங்கள் பாவத்தை விட்டு'' மெய்யாய் மனந்திரும்பவேயில்லை.

நாம் தேவனுடைய மகிமைக்காய் வாழும்படியே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம். இவ்வாறு வாழாமல் நாம் நம்முடைய வசதிக்காகவும், சுய பெருமைக்காகவும் வாழுவோமென்றால் நாம் உண்மையாய் மனந்திரும்பவுமில்லை, இரட்சிக்கப்படவுமில்லை. எனவேதான், இவ்வித நமக்காக வாழும் பாவ வழியிலிருந்து நம்மை மீட்பதற்காகவே இயேசு மரித்தார். உதாரணமாய், ஒருவன் தன்னை சபையில் மதிக்கப்படத்தக்க பெரியவனாய் இருக்க விரும்பினால் அல்லது மற்றவர்கள் தனக்கு மரியாதை செலுத்தவேண்டும் என விரும்பினால்... இவன் தனக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கிறான் என்பதில் ஒருதுளியும் சந்தேகமில்லை. இவன் வேண்டுமானால் ஏதோ மார்க்க விஷயத்தில் தன்னை ''வெள்ளையடித்து'' வைத்திருக்கலாம். ஆனால் அடிப்படைபூர்வமாய் அவனிடம் எந்த மாறுதலுமில்லை. இவன் ஒருவேளை ''மறுபடியும் பிறந்தேன்'' போன்ற கிறிஸ்தவ மொழிகளையும் பேசிக்கொண்டிருக்கலாம். ஆனால் அவனுடைய உள்ளான மனிதனோ இன்னும் அப்படியேதான் இருக்கிறான்.

மெய்யான மனந்திரும்புதலின் சத்தியம் இவ்வாறிருக்க, இதை ஏன் இன்று பிரசங்கிகள் பிரசங்கிப்பதில்லை? அதற்கு விடை ''பளிச் சென்று'' தோன்றத்தான் செய்கிறது. ஆம், இவ்வாறு உண்மையாய் பிரசங்கித்தால் அவர்களின் சபைக்கூட்டம் பாதிக்குமேல் குறைந்துவிடும்! அவர்கள், ஒவ்வொரு வருடமும் கன்வென்ஷன் கூட்டங்களுக்கு வரும்படி அழைக்கப்படவும் மாட்டார்கள்! இவைகள்தான் காரணம்!!

இன்று நம்முடைய ''மறைவான பொக்கிஷங்கள்'' பத்திரிக்கையை அநேக பிரசங்கிகள் பலவருடங்களாய் வாங்குகிறார்கள். அதன் ஒரே நோக்கம், பிரசங்கக் குறிப்புகளைப் பெறுவதற்காக மாத்திரம்தான்! பரவாயில்லை, ஆனால் இவர்களோ நம் செய்தியின் கடின பகுதிகளையெல்லாம் மிக கவனமாய் தூக்கி எறிந்துவிட்டுப் பிரசங்கிக்கிறார்கள்... தங்கள் பிரபல்யத்தையும் பாதுகாக்கிறார்கள்!!

நான் உங்களுக்கு மிகுந்த ஆணித்தரமாய் ஒரு உண்மையைச் சொல்லுகிறேன் : ஒரு பிரசங்கி தேவனுடைய முழு ஆலோசனையையும் செம்மையாய் பிரசங்கித்து, ஒருவன் தனக்காக வாழ்வது பாவத்தில் ஜீவிப்பதென்றும், ஒருவன் பணத்தை நேசித்தால் தேவனை நேசிக்க முடியாது என்றும் சுமார் 6 மாதங்கள் பிரசங்கித்துக் கொண்டேயிருந்தால்... ஒன்று அவன் தன்னுடைய 'பாஸ்டர்' வேலையை இழந்துவிடுவான்... அல்லது அவனுடைய சபையிலிருந்து 75% ஜனங்கள் சபையைவிட்டு வெளியே சென்றுவிடுவார்கள்!!

தேவன் நம்முடைய இருதயத்தையே பார்க்கிறார். ஆகவே, நம்முடைய ஜீவியத்தின் அடித்தள நோக்கம் மாறவில்லையென்றால், நாம் ரட்சிக்கப்படவேயில்லை! ஆனால் இன்றைய விசுவாசிகளிடம் நாம் காணும் ஒரே மாறுதல் யாதெனில்: இவர்கள் முதலில் ''எந்த மார்க்க

வெள்ளையடிப்புமில்லாமல்'' தங்களுக்காக வாழ்ந்தார்கள்... இப்போதோ ஏராளமான ''மார்க்க வெள்ளைபூச்சோடு'' தங்களுக்காக வாழுகிறார்கள்!! அவ்வளவுதான். முதல்நிலை எவ்வளவோ தேவலாம்-ஏனெனில் அந்நிலையில் தாங்கள் பாவிகள்தான் என நன்கு அறிந்திருந்தார்கள். ஆனால் இந்த இரண்டாவது நிலையில், இவர்கள் தங்களைப் பரிசுத்தவான்கள் என்று எண்ணிக்கொண்டு தங்களையே ஏமாற்றிக் கொள்ளுகிறார்கள்.

விபச்சாரத்தில் பிடிபட்ட ஸ்திரீயை இயேசுவிற்கு முன்பாக கொண்டுவந்தபோது அவளை அவர் ஆக்கினைக்குள்ளாய் தீர்க்கவில்லை என்ற உண்மையை நீங்கள் கவனித்தீர்களா? இயேசு ஒரு நூதனமான நீர்க்கதரிசி! விபச்சாரத்தில் பிடிபட்டவளை, ஒருவார்த்தைகூட கடிந்து கொள்ளாமல் தலை நிமிர்ந்து செல்லும்படி விடுவித்துவிட்டார். ஏனென்றால், அவளுடைய மனந்திரும்புதலை அவர் கண்டபடியால் அவளை மன்னித்துவிட்டார். அதற்குப்பிறகு, ரோம அரசு சிலுவையில் அறையத் தீர்மானித்த கொடிய கொலைகார குற்றவாளியை, அவன் தன் பாவங்களை ஒத்துக்கொண்டு அறிக்கை செய்ததினிமித்தம், இயேசு அவனை மன்னித்தது மாத்திரமல்லாமல், அவனைப்பரதீசிக்கும் அழைத்துச் சென்றார். பாருங்கள், இவன் தன் முழுவாழ்நாளிலும் ஒரு சிறு நன்மையைக்கூட செய்ததில்லை. அவன் செய்த அனைத்தும் கொலை, திருட்டு, தீமையும்தான். ஆனால் அவன் மரித்தபோதோ அவனை இயேசு பரதீசில் வரவேற்றார். இது ஆச்சரியம் இல்லையா?!

ஆனால்.... கையில் பைபிளோடு ஒவ்வொரு ஓய்வுநாளும் ஆலயத்திற்குச் சென்ற பக்தகோடிகளை ''விரியன் பாம்புக்குட்டிகளே, வரும் கோபாக்கினைக்கு எப்படித் தப்பித்துக்கொள்வீர்கள்'' என இயேசு கடிந்து பேசினார். இது என்ன, இயேசுவின் பிரசங்கம் தலைகீழாய் இருக்கிறது? இன்று அநேக பிரசங்கிகள் கொலையாளிகளும், விபச்சாரக்காரர்களும்தான் நரகத்திற்குப் பாத்திரர்கள் என்று பிரசங்கிக்கும் பொழுது, இயேசுவோ வெளித்தோற்றத்தில் பக்தகோடிகளாய் காணப்பட்டவர்களை நரகாக்கினைக்கு உரியவர்கள் என பிரசங்கிக்கிறாரே?

இவ்வாறு இயேசு ஏன் பிரசங்கித்தார்? ஏனென்றால் கொலையையும், விபச்சாரத்தையும்விட மாய்மாலமும், ஆவிக்குரிய அகங்காரமுமே பலடிகோடிமடங்கு தேவனுடைய பார்வையில் மோசமானது என்பதை இயேசு திட்டமாய் அறிந்திருந்தார்.

ஆம், இயேசு ஜனங்களின் இருதயத்தைதான் பார்த்தார், அவர்களிடமிருந்த வெளித்தோற்றமான மார்க்க வெள்ளையடிப்புகளைக் குறித்து ஒரு துளியும் அக்கறை காட்டவேயில்லை. நம் ஆண்டவர், நாம் பேசும் ''பாவத்தின் மேல் வெற்றி'' ''பூரணத்தை நோக்கி கடந்து செல்லுவோமாக'' போன்ற நம்முடைய ஆவிக்குரிய வசனிப்புகளைக் கேட்டு ஒரு துளியும் கவர்ச்சிக்கப்படுவதேயில்லை! ஒரு மனிதன் இன்னமும் தனக்கானதையே தேடிக்கொண்டு தன்னை ''மறுபடியும் பிறந்தவன்'' என கூறிக்கொண்டால் அவனை ஆண்டவர் ''வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை'' என்றும் ''விரியன்பாம்பு'' என்றுமே இன்றும் அழைப்பார்!

இன்று ஆண்டவர், தங்களுடைய ஆவிக்குரிய உன்னத நிலையைப் பேசிக் கொண்டிருப்பவர்களுக்காக நோக்கமாயில்லை! ஆனால், தங்களுடைய பாவங்களுக்காய் மனம்வருந்தி இருதயத்தில் நொருங்குண்ட ஜனங் களுக்காகவே நோக்கமாயிருக்கிறார்! பவுல் தன் ஜீவகாலமெல்லாம் பரி சுத்தமாய் வாழ்ந்து, தன் ஆண்டவருக்காய் பல வருடங்கள் ஊழியம் செய்த பின்பும் தன்னை இந்த பூமியில் ''பாவிகளுக்கெல்லாம் பிரதான பாவி நான்'' என்றல்லவா குறிப்பிட்டார்!

பார்த்தீர்களா, நமது ஆண்டவர் யாரெல்லாம் மெய்யான விருப்பத் தோடு தங்கள் சுயநலமான ஜீவியத்திலிருந்து திரும்பிவந்து, தங்களுடைய தோல்வியை நேர்மையாய் ஒத்துக்கொண்டு, வேறு யாரையும் குற்றம் சாட்டாமல் தங்கள் பாவங்களைை மாத்திரமே காணும் யாவருக்கும் அவர் இரக்கத்தையும், மன்னிப்பையும் அருளுவதற்கு ஐசுவரியமுள்ளவ ராயிருக்கிறார். இதன் தொடர்பாய், விபச்சாரத்தில் பிடிபட்ட ஸ்திரீ யையே சற்று சந்தித்துப் பாருங்கள். அவளிடத்தில் என்ன தகுதி காணப் பட்டது? அவளுடைய ஊரில் அவளைக்குறித்து ஏதாவது ஓர் நற்சாட்சி இருந்ததா? அப்படி எதுவுமேயில்லை. ஆனால்.... அவள் நேர்மையுள்ள வளாய் இருந்தாள்! அவள், தான் நிரபராதி என்றும் மற்றவர்கள் எல்லாம் தன்னைத் தவறாய் குற்றம் சாட்டுகிறார்கள் என்றும் பாசாங்கு செய்ய வில்லை. உண்மையில், அச்சூழ்நிலையில் தன் வாயைக்கூட திறக்காமல் தன் பாவங்களை மௌனமாய் ஒத்துக்கொண்டாள். ஆகவேதான் அவளுக் கென்று ஏராளமான நம்பிக்கைக்கு வழி ஏற்பட்டது.

ஆனால், தங்கள் பார்வைக்கு யாரெல்லம் நீதிமான்களாய் இருக் கிறார்களோ, அவர்கள் இரட்சிப்பை கண்டடைவது அரிதிலும் மாஅரிது!

அந்த பரிசேயர்கள், அந்த ஸ்திரீயின் மீது கல்லெறிய ஆயத்தமாய் இருந் தார்களேயொழிய, அச்சமயத்தில் அவர்களுடைய சொந்த இருதயத்தில் குடிகொண்டிருந்த பாவங்களில் எதையுமே அவர்கள் பார்க்கவில்லை!

மனம் திரும்புதல் என்பது ''ABOUT TURN – அதாவது முற்றிலுமாய் திரும்புதல்'' என்பதே பொருளாகும். நம்முடைய முதுகை நமக்காக வாழும் வாழ்க்கைக்கு திருப்பிவிட்டு, தேவனுக்காக மாத்திரம் வாழத் தீர்மானிப்பதே மனம் திரும்புதல் ஆகும். இதற்குப் பொருள், நீங்கள் முழுநேர ஊழியராய் மாறவேண்டுமென்பதல்ல. சுமார் 1000 விசுவாசி களில் ஒரு நபரைத்தான் முழுநேர ஊழியராய் தேவன் அழைக்கிறார். மற்ற அனைத்து பிள்ளைகளும் உலக அலுவல்களில் இருப்பதற்கே தேவன் விரும்புகிறார். இவ்வாறு தங்கள் பிழைப்பிற்கடுத்த சம்பாத்தியத் தைப் பெற்றுக்கொண்டே, அதே சமயம் ஒருவன் தனக்காக ஜீவிக்காமல் தேவனுடைய மகிமைக்காக மாத்திரமே ஜீவிக்கமுடியும்.

இவ்வித தனக்காக வழ்வதிலிருந்து அடையும் மனம்திரும்புதலை ''விக்கிரகங்களை விட்டு தேவனிடத்திற்கு மனம் திரும்புதல்'' என 1தெச 1:9 கூறுகிறது. இன்று அநேக விசுவாசிகள் தங்கள் விக்கரகங்களைவிட்டு தேவனிடத்திற்கு திரும்பவேயில்லை. நம் இந்திய தேசத்தில் அநேக

புறஜாதி மக்கள் கிறிஸ்துவைத் தங்கள் தெய்வமாக ஏற்றுக்கொள்ள மகிழ்ச்சியாயிருக்கிறார்கள். ஆனால், இவர்கள் ஏற்கனவே ஆராதித்துக் கொண்டிருக்கும் மற்ற தெய்வங்களோடு ஒரு தெய்வமாக மாத்திரமே கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள விரும்புகிறார்கள். இவ்வாறு இருப்பது ஒருக்காலும் சாத்தியப்படாது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஆம், கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள விரும்பும் ஒருவன் மற்ற எல்லா தேவர்களையும், விக்கிரகங்களையும் கண்டிப்பாய் விட்டுவிடத்தான் வேண்டும்.

விசுவாசிகளாகிய நம்மைப் பார்த்து பரிசுத்தாவியானவர் கூறும் போதுதான், ''பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி உங்களைக் காத்துக்கொள்வீர்களாக'' (1யோ 5:21) எனக்கூறினார் என்பதைப் பார்த்தீர்களா? ஒரு புறஜாதிமனிதன் தான் ஏற்கனவே வணங்கும் தெய்வங்களோடு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள விரும்புவதற்கும்... தன்னை விசுவாசி என அழைத்துக்கொள்பவன் தொடர்ந்து பணத்தை நாடிச்சென்று கொண்டு (இதுதான் இவனுக்கு இப்போது விக்கிரக தெய்வம்) கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள விரும்புவதற்கும் எந்த வித்தியாசமும் இல்லை! இதெப்படியெனில், ஏற்கனவே திருமணம் செய்துகொண்ட பெண் ஒருத்தி இப்போது இரண்டாவதாக ஒரு புருஷனைத் திருமணம் செய்ய விரும்புவதற்கு ஒப்பாகும்! இதுபோன்ற திருமணத்தை இயேசு கிறிஸ்து ஏற்றுக்கொள்வார் என விசுவாசிகள் எண்ணி தங்களையே வஞ்சித்துக் கொள்வது நமக்கு மிகுந்த ஆச்சரியத்தை உண்டாக்குகிறது. நம்மில் எத்தனை பேர் ஏற்கனவே வேறொரு மனிதனை திருமணம் செய்த ஒருவளை மனைவியாய் ஏற்றுக்கொள்ள விரும்புவோம்? இருப்பினும் நீங்களோ, இன்னும் உலகத்தின் மீது கொண்ட சிநேகத்தையும், அதன் கனத்தையும், அதன் இன்பத்தையும், அதன் செல்வத்தையும் வெறுத்துத் தள்ளாமலே கிறிஸ்து உங்களைத் திருமணம் செய்துகொள்வார் என எதிர் பார்ப்பது நியாயம்தானா?

நாம் காணக்கூடிய மரம், கல் போன்ற விக்கிரகங்களைவிட, நாம் காணகூடாத ''பணம், புகழ்ச்சி....'' போன்ற விக்கிரகங்களே அதிக வஞ்சனையுள்ளது!

ஏனென்றால் ஒருவன் வெளித்தோற்றமான விக்கிரகங்களை வணங்குவதை விக்கிரக ஆராதனை எனத் தெளிவாய் கண்டுகொள்ள முடியும். அதாவது, ஒரு மனிதன் ஒரு அறைக்குச் சென்று புறஜாதி விக்கிரக சிலையை வணங்கிவிட்டு, அடுத்த அறைக்குச் சென்று இயேசு கிறிஸ்துவிடம் ஜெபம்பண்ணினால் அவனை கிறிஸ்தவன் என நீங்கள் ஏற்றுக் கொள்ளமாட்டீர்கள்! ஆனால் வாரம் முழுவதும் பணம், புகழ்ச்சி, உலக அந்தஸ்து போன்ற விக்கிரகங்களை ஆராதித்துவிட்டு ஒருவன் ஞாயிற்று கிழமை கிறிஸ்தவ சபைக்கு வந்து இயேசுகிறிஸ்துவை ஆராதித்தால், அதை இன்றைய கிறிஸ்தவம் ஏற்றுக்கொள்வது கொடுமையல்லவா? இதுபோன்ற ஒரு இழிவான ''விசுவாசியைவிட'' புத்தரை ஆராதிப்பவன்மேல் நாம் அதிக நம்பிக்கை வைக்கமுடியுமென்றே நான் எண்ணுகிறேன். ஏனென்றால் ''இந்த விசுவாசி'' ஞாயிற்றுகிழமை சபையில் வந்துபாடும்பொழுது :

''என் பொன்னும் வெள்ளியும் உமக்கே!
அதில் ஒரு சல்லியும் எனக்கல்ல
அர்பணித்தேன் முழுமையும் உமக்கே''

எனப்பாடுகிறான். அதாவது, இவன் தேவனிடம் பொய் சொல்லுகிறான். இன்று இப்படித்தான் கிறிஸ்தவர்கள் வாரத்தில் வேறு எந்த நாட்களை விட, ஞாயிற்றுகிழமைகளில் தேவனிடத்தில் அதிகமான பொய் சொல்லு கிறார்கள். அன்று இவர்கள் ''அர்ப்பணித்தேன், எங்கு சென்றாலும் பின் பற்றுவேன்...'' என்றெல்லாம் தேவனிடம் பாடல்பாடி, பொய் சொல்லு கிறார்கள். தேவன் இவை எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருக்கிறார். ஆனால் அவரோ ஒரு நாளும் வஞ்சிக்கப்படுவதேயில்லை.இதை தேவன் குறிப்பிடும்போது, ''அவர்கள் தங்கள் வாயினாலே இன்பமாய் பேசு கிறார்கள், அவர்கள் இருதயமோ பொருளாசையைப் (விக்கிரகத்தைப்) பின்பற்றிப் போகிறது'' (எசே 33:31) எனக் கூறினார். இவ்வாறு விசுவாசிகள் பாடுகிற பாடலை கவனிக்கும்போது, இவர்கள்தான் இந்த பூமியல் மகா பரிசுத்தவான்கள் போல் எண்ணத்தோன்றுகிறது. ஆனால் இவர்களில் பெரும்பாலானோர் மிகப்பெரிய மாய்மாலக்காரர்களாகவே இருக்கிறார்கள். ஆனால் தேவனையோ ஒருவனும் ஒருநாளும் ஏமாற்ற வே முடியாது!!

ஒருவன் தனக்காகவே வாழும் ஓர் வாழ்க்கை, ஒரு மிருகத்தைப் போல் வாழ்வதற்கே ஒப்பாகும். ஏனெனில், எல்லா மிருகங்களும் தங் களுக்காகவும் தங்கள் குட்டிகளுக்காகவுமே வாழுகின்றன. இதுபோன்ற வர்கள், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தங்களுக்கு எந்த அளவு அதிக ஆதாயம் கிடைக்குமென்றே தேடுகிறார்கள். ஒரு காட்டில் வாழும் சிங்கம், ''நான் இந்த மானைக்கொன்றால் அது எனக்கு உணவாகுமா? அப்படியானால் அதைக் கொல்லுவேன்'' என்றே கூறுகிறது. இவ்வாறாக, எந்த மிருகம் வலிமைகொண்டதோ அந்த மிருகமே பிழைத்து வாழ முடியும். ஆனால் நாம் மிருகங்கள் அல்லவே? நாயைப் போலவும், பன்றியைப் போலவும் புசித்து; குடித்து; உறங்கி; பிள்ளைகளைப் பெற்றெடுத்து.... பின் மரிப்பதற்கென தேவன் நம்மை சிருஷ்டிக்கவே யில்லை. ஆம், மனுஷன் தன் முழு வாழ்க்கையிலும் தேவனுடைய மகிமைக்காக வாழும்படிக்கே சிருஷ்டிக்கப்பட்டான்.

தங்கள் பணியிலிருந்து ஓய்வுபெற்ற சிலரிடமிருந்து நான் கடி தங்கள் பெறுவதுண்டு. அவர்கள் தங்கள் ஓய்வு வருடங்களைத் ''தேவனுடைய ஊழியத்திற்கென'' அர்ப்பணிக்க விரும்புவதாக எனக்குக் கடிதம் எழுதுவார்கள். இது எப்படியெனில், ''ஒரு கனவான் உங்கள் வீட்டிற்கு வந்தபோது, அவருக்கு முன்பாக தேனீர் அருந்திக்கொண் டிருக்கும் நீங்கள், முடிவில் டீ கப்பிலிருக்கும் மண்டியை அவருக்குத் தருவதற்கே'' ஒப்பாகும்! இவ்வாறாகத்தான், இன்று ஜனங்கள் தேவனுக்குச் செய்கிறார்கள். இந்த உலகத்தில் பணம் சம்பாதிப்பதற் கென்றே தங்கள் முழு ஜீவியத்தையும் செலவழித்துவிட்டு, இப்போதோ தங்கள் வாழ்வில் எஞ்சிய ''மண்டியை'' தேவனுக்குத்தர விரும்பு கிறார்கள்.... இது எத்தனை கொடிய அவமரியாதை!!

நாம் வாலிபமாய் இருந்த நாட்களில் நம்முடைய ஜீவியத்தைத் தேவனுக்கு அர்ப்பணித்திருக்க வேண்டும். இவ்வாறு முழு ஜீவியத்தையும் அவரிடம் அர்ப்பணித்துவிட்டு, இப்போது அவர் என்ன கட்டளையிடுகிறாரோ அதற்குப் பிரியமாய் வாழ்வதே உத்தமமானதாகும்! நீங்கள் மெய்யாகவே உங்கள் ஜீவியத்தில் இவ்விதமாய் உங்களுக்காவதைத் தேடுவதிலிருந்து திரும்பிவிட்டீர்களா? ஆண்டவராகிய இயேசு திரும்பவருகையில், எண்ணற்ற விசுவாசிகள் மிகப்பெரும் அதிர்ச்சிக்குள்ளாவார்கள் என்பது திண்ணம். இவர்கள் பூமியில் சம்பாதித்துக் குவித்த பணம் முழுவதும், சிறுபிள்ளைகள் தாங்களாகவே ''10-லட்சம்'' ''10-கோடி'' என பேப்பரில் எழுதி ''பிஸினஸ்'' விளையாட்டில் சேர்த்த பேப்பர் பணத்திற்கு ஒப்பாகவே எந்த மதிப்பும் இல்லாதிருப்பதை அந்நாளில் கண்டு திகைப்பார்கள்! ஆனால், இப்போது என்ன செய்ய முடியும்? 'வாழ்க்கையின் பந்தயமோ' முடிவடைந்துவிட்டது! தாங்கள் சேர்த்துக் குவித்த பிரயோஜனமற்ற குவியல்களைத் தவிர, இவர்களோ ''நித்திய மதிப்புடைய'' எதையும் சேர்த்துவைக்கவில்லையே! மேலும், இவர்கள் பூமியில் தேடி நாடியதெல்லாம் ''புகழ்ச்சிக்காகவே'' இருந்தால், அவையாவும் நித்தியத்தின் பிரகாசிக்கும் வெளிச்சத்தில் கணப்பொழுதில் ''ஆவியாய்'' மறைந்து போவதைக் காணும்போது, இவர்களின் ஏமாற்றம் சொல்லி முடியாததாய் இருக்குமே?!

ஆனால், தங்கள் ஜீவியத்தில் தேவனுடைய சித்தத்தைச் செய்யும்படியாக ஜீவித்து, தேவனுடைய மகிமைக்காகவே வாழ்ந்தவர்களோ, அந்நாளில் சொல்லிமுடியா மகிழ்ச்சியில் திளைத்திருப்பார்கள்!!

(இதன் தொடர்ச்சி அடுத்தப்பக்கம்)

2

வேரின்மீது கோடாரி வீசப்படுவதாக!

(AN AXE TO THE ROOT)

(........... தொடர்ச்சி)

உலகப்பொருட்கள் நம்முடைய உபயோகத்திற்காக மாத்திரமே இப்பூமியில் நமக்குத் தரப்பட்டிருக்கிறது. இதைத்தவிர இவ்வுலகப் பொருட்களுக்கு எவ்வித முக்கியத்துவமும் இல்லை. இவைகளை நாம் உபயோகப்படுத்தும்வரை அதில் எவ்வித தவறும் இல்லை. ஆனால் இவைகள் நமக்கு ஒருக்காலும் எஜமானாய் மாறுவதற்கு அனுமதிக்கவே கூடாது. ஆகவே பணத்தை உபயோகிப்பது என்பது ஒன்று.... அவை களால் நாம் ஆளுகை செய்யப்படுவது முற்றிலும் மாறான வேறொன்று! ஆம், பணம் ஒரு சிறந்த வேலைக்காரன். ஆனால், பயங்கரமான எஜமான்! உதாரணமாய், ஒரு ஸ்திரீ மிகச் சிறந்த ஒரு மனிதனை திருமணம் செய்து கொண்டாள். ஆனால் அவளோ, தன் புருஷனைக் காட்டிலும் தன்னுடைய கார் டிரைவரை (வேலைக்காரனை) அதிகமாய் நேசித்து தன்னுடைய அதிகமான நேரத்தையும் அவனோடு செலவழித்தாள். இதுபோன்ற ஒரு ஸ்திரீயை நீங்கள் எவ்வாறு எண்ணுவீர்கள்? இதற்கு ஒப்பாகவே, எவ்வளவு அதிகமாய் தன் ஆண்டவருக்கு வலிமை கொண்டவனாய் மாற முடியும் என சிந்திப்பதற்குப் பதிலாய், தன்னுடைய அத்தியாவசிய தேவைக்கு மிஞ்சி இன்னும் அதிகம் பணம் சம்பாதிப்பதையே எப்போதும் எண்ணிக்கொண்டிருக்கிற ஒரு விசுவாசியும் இருக்கிறான்.

தேவன் ஆதாமை சிருஷ்டித்தபோது, முழு பூமியையும் அவன் ஆண்டு கொள்ளும்படி கூறினார். ஆனால் ஆதாமோ ஒரு அடிமையாய் மாறிவிட்டான் என்பதை நாம் யாவரும் அறிவோம். கிறிஸ்துவோ, நம்மை மீண்டும் ராஜாக்களாய் மாற்றும்படிக்கே இப்பூமிக்கு வந்தார். இப்பூமியில் நாம் அனுபவிப்பதற்கென ஏராளமானவைகளைத் தேவன் நமக்குத் தந்திருக்கிறார். ஆனால் அவைகளில் யாதொன்றும் நம்மை ஆளுகை செய்துவிட்டால், இப்போது நாம் அவைகளுக்கு அடிமைகளாய் மாறிவிட்டோம். இப்போது நாம் ராஜாக்களா? இல்லவே இல்லை. ஆம், தேவன் நம்மைக் குறித்து கொண்ட விருப்பத்தை நாமே குலைத்து விட்டோம்!

ஏதேன் தோட்டத்தில் தேவன் சர்ப்பத்தைப் பார்த்து ''நீ மண்ணை தின்பாய்'' என சர்ப்பத்தின் உணவாக மண்ணைக் கூறினார். காரியம் இவ்வாறாக இருப்பதால், நீங்கள் மதிப்பிடுகிற தங்கம் உண்மையில் என்ன தெரியுமா? அதுவும் தேவன் இந்த பூமியில் சிருஷ்டித்த மண்ணின் ஒரு பகுதிதான் . ஒருவேளை அது சற்று கட்டியாகவும், சாதாரண மண்ணைவிட சற்று அரிதாய் கிடைப்பதாயும் இருக்கலாம்..... எப்படி இருந்தாலும், அது மண்தான்! ஆனால் இன்று மனிதன் இந்த பிசாசின் உணவிற்க்குப் பின்னால் ஓடிக்கொண்டிருக்கும் துயரமான காட்சியைத் தான் இன்று நாம் காண்கிறோம். இவ்வாறு உலகில் எங்கு பார்த்தாலும் மனிதர்கள் ''தங்க - மண்ணிடம்'' அடிமைப்பட்டு சுருண்டு கிடப்பதையே நாம் பார்க்கிறோம்.

ஒரு மனிதனை ஏதேனும் கெட்டபழக்கத்தின் மூலமாய் தனக்கு அடிமையாய் மாற்ற முடியாததை காணும் பிசாசானவன், வேறு சில ''நடுநிலையானவைகள்'' மூலமாய் அவனைத் தனக்கு அடிமைப்படுத்து கிறான். அவைகள் ஒருவேளை ''ஒரு நல்ல'' பாதிப்பில்லாத டெலிவிஷன் நிகழ்ச்சியாயிருக்கக் கூடும்! இவ்வாறு தீமையல்லாததுபோல் தோன்றுகிற காரியங்கள் மூலமாய் அவர்களை அடிமைப்படுத்தி, தேவனைத் தேடுவதற்கும்; வேதம் வாசிப்பதற்கும்; ஐக்கியம் கொள் வதற்கும் அவர்களுக்கு நேரம் இல்லாதபடி செய்து விடுகிறான். இவ்வாறு, தாங்கள் விரும்பும் களியாட்டுகள்; தங்கள் சொந்த லாபங்கள் போன்ற தங்களுக்கானவைகளைத் தேடும் விசுவாசிகளை சாத்தான் மிக எளிதில் வீழ்த்திவிடுகிறான். இவ்வாறாக, ஒரு மனிதனை தேவனை விட்டு தூரமாய் விலக்கி வைப்பதற்கு சாத்தானிடத்தில் நூற்றுக்கணக்கான வழிகள் உள்ளன! எனவேதான் நாம் பாவத்தை, குடிப்பது; சூதாடுவது; விபச்சாரம் செய்வது; கொலை செய்வது போன்று சாதாரணமாய் எடுக்காமல் ''நாம் நமக்காக ஜீவிப்பதை'' பாவம் என காண்பதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும். நமக்குப்பிரியமானதை நாம் செய்வதுதான் பாவம். அதுவே, நாம் நம்முடைய ''சுயசித்தத்தை'' செய்வதாகும். இந்த வேரிலிருந்து தான் ஏராளமான பாவக்கனிகள் தோன்றுகின்றன. இக்கொடிய நிலையிலிருந்து நம்மை இரட்சிப்பதற்காகவே இயேசு நமக்காக மரித்தார்.

இயேசு வரும்போது, அவர் கோடரியை வேரின்மீதே வீசுவார் என யோவான் ஸ்நானகன் கூறினான். அவ்வாறு இயேசு கோடாரி கொண்டு தகர்க்க விரும்பிய வேர் ''நாம் நமக்காக வாழ்ந்து, நம் சுயசித்தத்தை செய்திட விரும்பும்'' விருப்பமேயாகும். நாம் யாவருமே, அவ்வப்போது மரத்திலிருந்து தோன்றும் 'கெட்ட பழங்களைப்' பிடுங்கு கிறவர்களாய் இருக்கிறோம். ஆனால் அவ்வாறு செய்வதால் பிரச்சனை தீர்வதேயில்லை. இவ்வாறு மற்றவர்கள் காணும்படியான ''கெட்ட பழங்கள்'' பிடுங்கப்பட்டுவிட்டதால், நம்முடைய ஜீவியம் மிகவும் நேர்த்தியாய் இருப்பதுபோல் காட்சி தரலாம். ஆனால், இன்னமும் ''மரம்'' மாறவில்லையே! மரம் நல்ல மரமாய் மாறினால் ஒழிய, ஒருக்காலும் கனி நல்லதாய் மாற முடியாது என்றே இயேசு கூறினார். இவ்வாறுமரத்தை மாற்ற வேண்டுமென்றால், ''முந்திய (பழைய) மரத்தின்'' வேர்களில் முதலாவது கோடாரிவீசப்படவேண்டும்!

இன்று அனேக குடும்பங்கள் ''யுத்த களமாய்'' இருப்பதற்கு காரணம் என்ன? ஏனென்றால், கணவனும் மனைவியும் அவரவர் தங்களுக்காக வாழ விரும்புவதேயாகும்.

எனவேதான் இன்று கிறிஸ்தவ உலகில் அதிர்ச்சிதரும் நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதென்னவெனில் : இன்று தங்களை ''மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்கள்'' என அழைத்துக்கொள்ளும் அநேகர் தங்கள் வாழ்க்கைத் துணையை விவாகரத்து செய்துவிட்டு துணிவுடன் மறுமணம் செய்துகொள்ளுகிறார்கள். கேவலம் என்னவென்றால், இன்று அநேக பாஸ்டர்களும், பிரசங்கிகளும்கூட தங்கள் மனைவியரை விவாகரத்து செய்துவிட்டு வேறு பெண்களைத் திருமணம் செய்து கொள்ளுகிறார்கள். சில பிரசங்கிகள் தங்கள் மனைவியரை விவாகரத்து செய்வதில்லை... ஆனால், இரகசியமாய் விபச்சாரம் செய்கிறவர்களாய் இருக்கிறார்கள். இவையாவும் இந்த 20–ம் நூற்றாண்டில் ''பளிச்சென்று'' காணப்படும் அவலட்சணங்கள்! உலகிலுள்ள மற்ற தம்பதியர்கள் எல்லா நூற்றாண்டுகளிலுமே விவாகரத்து செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால், இவைகளை இன்று கிறிஸ்தவர்கள் செய்கின்றபடியால், ''விசுவாசத்திலிருந்து வழிவிலகும்'' விசுவாசத் துரோகம் நம் காலத்தில் தொடங்கிவிட்டது என்பதை உணர்த்தும் கடைசிக்காலமாய் இருக்கிறது.

இவை அனைத்திற்கும் காரணம், ''ஒருவன் தனக்காக ஜீவிப்பதைப்'' பாவம் என இன்றைய விசுவாசிகள் காணக்கூடாமல் இருப்பதேயாகும். இந்த விசுவாசிகள் இவைகளைக் காணவில்லை, ஏனென்றால் அவர்கள் சரியான விதத்தில் போதிக்கப்படவில்லை. தவறு அவர்களின் தலைவர்களிடமும், அவர்களின் இரத்த பழி அவர்களை நடத்தியவர்கள் கைகளிலுமே இருக்கிறது....... ஒரு நாள் இவர்கள் தேவனுக்கு முன்பாகக் கணக்கொப்புவிக்கத்தான் வேண்டும்!!

''ஜீவனுக்குப் போகிற வழியை வெகு சிலரே கண்டுபிடிப்பார்கள்'' என இயேசு கூறினார். ஏன் தெரியுமா? அதனுள் பிரவேசிக்கும் வாசல் இடுக்கமாய் இருப்பதே காரணமாகும்.

உலகம் பார்க்கிறபடி நாம் பார்த்தால், அன்று இயேசுவிடம் வந்த பணக்கார வாலிப அதிபதியிடம் சபையின் அங்கத்தினராய் மாறுவதற்குரிய 4–அருமையான தகுதிகள் காணப்பட்டன. 1) அவன் வாலிபன் 2) ஐசுவரியவான் 3) மதிக்கத்தக்க அதிபதி 4) கற்பு ஒழுக்கத்தில் நேர்மையானவன்! இன்று உள்ள எல்லா சபைகளுமே, இதுபோன்ற ஒருவனைத் தங்கள் அங்கத்தினராய் ஏற்றுக் கொள்வதற்கு ஆசையாய் இருப்பார்கள். இன்று அநேக பெந்தேகொஸ்தே சபைகளில் இதுபோன்ற ஒருவனைத் தங்கள் ''போர்டு மெம்பராயும்'' ஆக்கியிருப்பார்கள். ஆனால் இயேசுவோ, அவனை ஒரு சாதாரண சீஷனாய் இருப்பதற்குக் கூட தகுதியுள்ளவனாய் கருதவில்லை!! இது மெய்யாகவே, ஆச்சரியம் இல்லையா?

இயேசு அவனுடைய செல்வத்தினிமித்தமோ அல்லது அவனுடைய உலக அந்தஸ்தினிமித்தமோ சிறிதும் கவரப்படவேயில்லை! ஒருமனிதன் இன்னமும் பணத்தை நேசித்துக் கொண்டிருந்தால், அவன் இயேசுவின் சீஷனாய் இருப்பதற்குத் தகுதியற்றவன்!! அவன்

இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசிப்பதற்கு முன்பாக, தான் பணத்தின் மீது கொண்ட நேசத்தை அவன் வெறுத்துவிட வேண்டும். அந்த மனிதனோ மிகுந்த மனவருத்தத்துடன் திரும்பிச் சென்றான், அவன் போகும்படி இயேசுவும் விட்டுவிட்டார். இயேசு அவன் பின்பாக ஓடிச் சென்று, ''பரவாயில்லை, நீ முதலாவது 10% பணத்தை வெறு..... பின்பு படிப்படியாய் பார்த்துக் கொள்ளலாம்!'' என 'தாஜா' பண்ணவே யில்லை.

சீஷத்துவத்திற்கு எந்தவித பேரமும் இல்லவே இல்லை. ஒன்று, எல்லாம் வெறுக்கவேண்டும் அல்லது எதையும் வெறுத்திட முடியாது....அவ்வளவுதான்.

பணத்தையும், தேவனையும் ஒருவன் ஒரேசமயத்தில் நேசித்திட ஒருக்காலும் முடியாது. ''இரண்டில் ஒன்று'' என்பதே அவன் முடிவு செய்ய வேண்டும். அவன் தன் விக்கிரகமாகிய பணத்திலிருந்து திரும்பி, கிறிஸ்துவோடு மாத்திரமே இணைந்திருக்க வேண்டும்.

நீங்கள் உங்களுக்காகவே வாழ்ந்திட விரும்பினால், நீங்கள் அவ் விதமே தாராளமாய் வாழுங்கள். அந்தப் பணக்கார வாலிபன் நிகழ்ச்சியைப்போலவே, ஆண்டவரும் உங்களைத் தனியே விட்டு விடுவார். உங்களுக்கு சௌகரியமான ஒரு சபையை நீங்கள் தேர்ந் தெடுத்து, அங்குள்ளவர்கள் உங்களைப் பார்த்து ''நீங்கள் மெய்யாகவே பரலோக வாசிகள்'' என ஆசிகூறினாலும், தேவன் அங்குவந்து உங்களைத் தொந்தரவு செய்யவே மாட்டார். உங்கள் வாழ்நாளெல்லாம் உங்களையே நீங்கள் ஏமாற்றிக் கொள்வதற்கு அவர் அனுமதித்து விடுவார். கடைசியாக, உங்கள் உண்மைநிலையை நரகத்தில் கண்விழிக்கும் நேரத் தில்தான் காண்பீர்கள்.

இன்று ஜனங்கள் வஞ்சிக்கப்படும்படி தேவன் அனுமதிப்பதற்கு காரணம், அவர்கள் தங்களைப்பற்றிய சத்தியத்தை [உண்மையை] அறிந்து கொள்வதற்குரிய பிரியம் இல்லாததேயாகும். என்றாவது ஒருநாள், ஒரு தீர்க்கதரிசி அவர்களைப்பற்றிய உண்மை நிலையைக் கூறிவிட்டரால், அந்த தீர்க்கதரிசியிடம் இப்படிப் பட்டவர்கள் சொல்லொண்ணா கோபம் கொண்டு விடுகிறார்கள்!!

யோயாக்கீம் இராஜாவின் நாட்களில் எரேமியா தீர்க்கதரிசனம் கூறினான். இவ்வாறு எரேமியா ஒரு தோல் சுருளில் எழுதிய தீர்க்கதரிசன வார்த்தைகளை ஜனங்கள் படித்தபோது, மிகவும் பயந்தார்கள். ஏனென்றால் பழைய ஏற்பாட்டின் நாட்களில் வாழ்ந்த தீர்க்கதரிசிகளில் எரேமியா ஓர் கடினமான தீர்க்கதரிசியாயிருந்தான். அவன் ஒருசமயத்தில் கூட மிருதுவான செய்தியை பிரசங்கித்ததேயில்லை! அவன் வாய் திறந்து உரைத்ததெல்லாம் நியாயத்தீர்ப்பு.... நியாயத்தீர்ப்பு... இன்னும் அதி கமான நியாயத்தீர்ப்புமாகவே இருந்தது (எரே.20:8). எரேமியாவின் தோள் சுருளை வாசித்த இராஜா, கடுங்கோபங்கொண்டு அதைவெட்டி, கசக்கி, நெருப்பில் தூக்கியெறிந்தான் (எரே 36). இருப்பினும், மீண்டுமாய் தோல் சுருளை எழுதும்படி எரேமியாவிற்கு தேவன் கூறினார். இதனி மித்தமே எரேமியாவின் புத்தகத்தை இன்று நாம் பெற்றிருக்கிறோம்.

ஆனால், முதலாவது தடவை இவைகள் எழுதப்பட்டபோது, தன்னைக் குறித்த உண்மைநிலையைக் கேட்க விரும்பாத ஓர் கோபமான இராஜா வினால் அவைகள் கிழித்து எறியப்பட்டன! இன்றும், இதுபோன்ற ஜனங்கள் எப்போதும் இருந்துகொண்டேதான் இருக்கிறார்கள்.

இருப்பினும், ஒவ்வொரு காலத்திலும் சத்தியத்தில் அன்பு கொண்ட ஒரு சிறு கூட்ட ஜனங்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இவ்வாறு சத்தியத்திற்கு செவிகொடுக்கக்கூடிய காதுகளை நாம் பெற்றிருப்பது தேவனுடைய மிகுந்த கிருபையென்றே சொல்ல வேண்டும். நாம் பிறப்பதற்கு முன்பே தேவன் நம்மில் அன்புகூர்ந்து, வாழ்வில் மிகச்சிறந்தவைகளையே நாம் அடையவேண்டுமென்று தேவன் விரும்பியிருக்கிறார். நம்முடைய ஜீவியத்தை நாம் வீணாக்கி, முடிவில் நித்தியத்தில் நம்முடைய ''வெறுமையைக்'' கண்டு துயர மடைய தேவன் விரும்புவதேயில்லை. மாறாக, நாம் ஞானமுள்ளவர் களாயிருந்து நித்தியமானவைகளுக்காக வாழும்படிக்கே தேவன் விரும்புகிறார்.

படைக்கப்பட்ட பணமோ, வீடுகளோ, நிலங்களோ போன்ற எல்லா படைப்புகளும் ஒரு நாளில் அசைக்கப்பட்டு அகன்றுபோய் விடும். அந்நாளில் ''படைக்கப்படாதவைகள்'' மாத்திரமே நிலைத்து நிற்கும். ஆகவே நித்தியமாய் நிலைத்திருப்பவைகளுக்காக மாத்திரமே நாம் நம்முடைய நேரத்தையும் சக்திகளையும் செலவழிக்க ஞானமுள்ள வர்களாய் இருக்க வேண்டும். இதற்குப்பொருள், நீங்கள் யாவரும் முழு நேர ஊழியர்களாய் மாற வேண்டுமென்பதல்ல என்பதை நான் மீண்டு மாய் நினைவுபடுத்த விரும்புகிறேன். ஆனால் அதே சமயம், நீங்கள் எதைச் செய்தாலும் இனியும் நீங்கள் உங்களுக்காக வாழாமல் தேவனுடைய மகிமைக்காகமாத்திரமே வாழவேண்டும் என்ற சத்தியத்தை நீங்கள் ஒருபோதும் மறக்காதிருக்கவேண்டும். நீங்கள் நிச்சயமாய், உங்களால் முடிந்த அளவு உயர்ந்த பணியில் ஈடுபட்டு நல்ல வருமானத்தைத் தாராளமாய்ப் பெறலாம். அவைகள் மூலமாய் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டு ஆண்டவருடைய ஊழியத்தையும் நீங்கள் தாங்கிட முடியும். ஆனால் உங்கள் ஜீவியத்தின் முடிவான இலக்கோ ''தேவனுடைய மகிமையாகவே'' இருக்க வேண்டும். ஆண்டவரைப் பிரியப்படுத்துவது ஒன்றே உங்கள் வாழ்க்கையின் பிரதான நோக்கமாயிருக்கவேண்டும்.

இதனிமித்தம், இன்றிலிருந்து நாம் ''பிக்னிக்'' செல்லவோ, உல்லாசமாய் நேரம் செலவழிக்கவோ முடியாதென்று நான்கூறவில்லை. அப்படிச் செல்வதில் எந்த தவறுமில்லை. மானிடர்களாகிய நமக்கு விளையாடுவதோ அல்லது இன்னிசை கேட்டு மகிழ்வதோ போன்றவைகள் தேவையாகத்தான் இருக்கிறது. இதுபோன்ற நிகழ்ச்சிகள் 'மாசில்லாத' ஆரோக்கியமான களியாட்டுகளாயிருந்தால் அவைகள் முற்றிலும் சரியானதேயாகும்.

ஆனால் இவைகளில் யாதொன்றாகிலும் நம்மை ஆளுகை செய்து நம் ஜீவியத்தின் ஆர்வத்தை ஆட்கொண்டுவிட்டால்.... இப்போது நாம் சிகப்பு எல்கையைத்தாண்டி அபாய நிலத்திற்குள் சென்று விட்டோம்!

இவ்வாறு நம்முடைய வியாபாரமோ அல்லது ஒரு ஸ்தலமோ அல்லது 'தீமையற்ற' சில களியாட்டு நிகழ்ச்சிகளோ ஒருவனுடைய ஜீவியத்தில் நீங்காத இடம் பெற்று அதுவே அவனுடைய வாழ்வின் பிரதானமாய் மாறிவிடமுடியும். ஒருவனுக்கு இவ்வாறு சம்பவித்து விட்டால், அவனை ஈர்த்த அக்குறிப்பிட்ட 'ஏதோ ஒன்று' அவனுக்கு எஜமானாய் மாறிவிட்டது என்பது திண்ணம்!

ஆண்டவர்தன் சபையை நம்மூலமாய் கட்டவேண்டுமென்றால், நாம் நமக்காக ஜீவிப்பதிலிருந்து விடுதலை பெற்றிருக்கவேண்டும். ஏனெனில், சபையின் மாதிரியை தேவன் நித்திய காலங்களுக்கு முன்பாகவே கவனமாய் திட்டம் தீட்டி வைத்துள்ளார். இதுபோன்ற மகிமையான சபையைத், தனக்கானதைத் தேடாத ஜனங்கள் மூலமாகவும், அவருக்காக பலிபீடத்தில் சகலத்தையும் அர்ப்பணம் செய்ய ஆயத்தம் கொண்ட ஜனங்களைக் கொண்டே அவர் கட்ட முடியும்.

பழைய ஏற்பாட்டு ஆலயம், ஆபிரகாம் தன் மகன் ஈசாக்கை தேவனுக்குப் பலி செலுத்திய மோரியா மலையின் மீதே கட்டப்பட்டது (2 நாளா. 3:1). அச்சமயம் ஆபிரகாமிடம், அவனுடைய இருதயத்திற்குப் பிரியமான ஒரே மகன் ஈசாக்கே மீதமிருந்தான்! இந்த ஈசாக்கு ஆபிரகாமின் வாழ்வில் விக்கிரமாய் மாறியிருப்பானோ என ஆபிரகாமின் அர்ப்பணத்தை தேவன் அந்நாளில் சோதித்தார். ஆபிரகாம் தேவனுக்கு ஊழியம் செய்ய வேண்டுமென்றால், ''அவன் தன் எல்லா விக்கிரகாரதனையிலிருந்தும் திரும்பவேண்டும்'' என தேவன் அவனிடம் கூறியதைப்போலவே நாம் காண்கிறோம். எனவேதான், அவன் தன் மகனை பலிபீடத்தில் கிடத்தி தேவனுக்கு சமர்ப்பித்தான். தேவன் ஈசாக்கை எடுத்துக்கொள்ளவில்லை... ஆபிரகாம், ஈசாக்கிடம் கொண்டிருந்த அபூர்வமான பிடிப்பிலிருந்து மாத்திரமே ஆபிரகாமை தேவன் பிரித்தெடுத்தார், அவ்வளவுதான்! இச்சம்பவம் நிகழவில்லையென்றால், அவன் தேவனோடு இசைந்து நடந்திடும் வாழ்வும் பாதிக்கப்பட்டிருக்கும்!!

இதே நிகழ்ச்சியைத்தான் தேவன் நம்மிடமும் செயல்படுத்த வேண்டியதாயிருக்கிறது. ஆம், நமக்கு மிகவும் அருமையாகத் தோன்றும் யாவையும் தேவனுக்கே சமர்ப்பணம் செய்திட வேண்டும்.

அந்தப் பணக்கார வாலிபன் நிகழ்ச்சியில் ''அவனுடைய பணமே'' அவனுக்கு மிகவும் அருமையானதாய் இருந்தது. எவ்வாறு ஈசாக்கைத் தரும்படி ஆபிரகாமிடம் தேவன் கேட்டாரோ, அதைப்போலவே அந்தப் பணக்கார வாலிபன் தன்னுடைய 'பணத்தை விடவேண்டும்' என தேவன் கேட்டார். அந்தப் பணக்கார வாலிபன் மாத்திரம், ''நீர் சொல்லுகிறபடியே செய்கிறேன் ஆண்டவரே, இதோ! என்னுடைய யாவையும் உமக்கு முன் அர்ப்பணித்துவிட்டேன்!!'' எனக் கூறியிருந்தால், ஆண்டவர் என்ன செய்திருப்பார் என்பதை நாம் அனைவருமே யூகம் செய்திட முடியும். ஆம், எவ்வாறு ஈசாக்கை வைத்துக்கொள்ளும்படி ஆபிரகாமுக்குத் தேவன் கூறினாரோ... அதேபோலவே, அவனும் தன்னுடைய பணத்தை அவனோடு வைத்துக்கொள்ளலாம் என தேவன் கூறியிருக்கக்கூடும்!! இருப்பினும், முதலாவது அவன் அவைகளை வெறுத்திட வேண்டுமே!?

ஆகவே, நீங்கள் கிருபை பெற்றவர்களாய் இருந்தால், கீழ்காணும் விதமாய் நீங்கள் யாவரும் என்னோடு சேர்ந்து கூறிடமுடியுமா?

''ஓ என் ஆண்டவரே! என் ஜீவியத்தின் எல்லையெங்கும் எந்த 'ஈசாக்கு' என்னிடமிருந்தாலும் அவைகள் யாவையும் இதோ இப்போது உம் பலிபீடத்தில் சமர்ப்பிக்கிறேன். இனியும் என் வாழ்வில் எந்த விக்கிரகங்களும் உமக்கும் எனக்கும் நடுவில் தோன்றுவதற்கு நான் விரும்பவில்லை. இனி எனக்காக நான் வாழ விரும்பவில்லை. மெய்யாகவே நான் உமக்காக மாத்திரமே வாழ விரும்புகிறேன். ஆம், நான் தேவனுடைய மகிமைக்கென்றே வாழ விரும்புகிறேன். இன்றிலிருந்து, இனியும் நான் என் ஜீவியத்தை வீணாக்க விரும்பவில்லை!''

இவ்வுலகில் நாம் பெற்றிருக்கும் மிக உன்னதமான செய்தி யாதெனில் : இனியும் நாம் நம் சொந்த இலட்சியங்களுக்கும் ஆசைகளுக்கும் அடிமையாய் வாழ்ந்திடத் தேவையே இல்லை என்பது தான். இவ்வாறு, இவ்வுலகில் என் வாழ்வு வீணாகிவிடாமல் தேவனுடைய மகிமைக்காய் வாழ்ந்து என் வாழ்க்கை பயனுள்ளதாய் மாறக்கடவது! நாம் நமக்காக ஜீவிக்கும் வாழ்க்கை, அடிமைத்தனத்தின் விலங்கு பூட்டிய வாழ்க்கையாகும். இதற்கு மாறாக, தேவனுடைய மகிமைக்காக வாழும் வாழ்க்கை, உயர ஆகாய மண்டலத்தில் சுதந்திரமாய் சிறகடிக்கும் கழுகுக்கு ஒப்பானதேயாகும். ஆம், நம் யாவரையும் அண்டி வரும் நற்செய்தி யாதெனில், உங்களின் எல்லா அடிமைக் கட்டுகளின் விலங்கையும் "இன்றே" இயேசு முறித்திட முடியும்!!

என் வாலிப வயதிலேயே நான் கிறிஸ்துவை கண்டடைந்த போதும், பிரயோஜனமற்றவைகளைப் பின்தொடர்ந்து அநேக நாட்களை நான் வீணாக்கியிருக்கிறேன். ஆனால், கடந்துபோன நாட்களைக்குறித்து நான் இப்போது ஒன்றும் செய்திட முடியாதே! ஆகவேதான், இன்று என் வாழ்வில் மேலானவைகளைப் பற்றிக்கொள்ளும்படி முன்னேறிச் செல்கிறேன்!!

நம் யாவருக்குமே இன்னமும் அதிககாலம் நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிறபடியால், நாம் யாவரும் தீர்க்கமான முடிவோடு கீழ்காணும் விதமாய் ஆண்டவரிடம் ஜெபிக்கக் கடவோம்!

"என் ஆண்டவரே, என் ஜீவியத்தில் கடந்துபோன வருடங்களைக் குறித்து நான் எதுவும் செய்திட இயலாது. ஆனால், என் மிஞ்சிய வாழ்க்கையை உமக்காக மாத்திரமே வாழ விரும்புகிறேன்! ஆண்டவரே, என் வாழ்க்கையை நீர் ஆராய்ந்து பார்த்து, நான் ஆராதித்துக் கொண்டிருக்கும் ஏதேனும் விக்கிரகம் எங்காகிலும் உண்டா என்பதைக் கண்டறியும். ஏனென்றால், என் வாழ்வில் காணும் ஒவ்வொரு விக்கிரகத்தையும் தள்ளிவிட்டு உம் ஒருவரையே நான் ஆராதித்து, உமக்கு மாத்திரமே ஊழியம் செய்திட விரும்புகிறேன். ஆண்டவராகிய இயேசுவே, குறிப்பாக, என்னையறியாமலே கொண்டிருந்த விக்கிரகமாகிய எனக்காகவே நான் வாழ்ந்த வாழ்க்கையிலிருந்து இவ்வேளையில் நான் மனந்திரும்புகிறேன்"

ஆண்டவர் நம் யாவருக்கும் உதவிசெய்வாராக!

கேட்பதற்கு காதுள்ளவன் எவனோ, அவன் கேட்கக்கடவன்!!

– சகரியாபூணன்

குணப்பட அழைத்திடும் தேவதயவு !

''தேவ தயவு நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறதென்று அறியாமல், அவருடைய தயவு, பொறுமை, நீடிய சாந்தம் இவைகளின் ஐசுவரியத்தை அசட்டைபண்ணுகிறாயோ? உன் மனக் கடினத்திற்கும் குணப்படாத இருதயத்திற்கும் ஏற்றபடி, தேவனுடைய நீதியுள்ள தீர்ப்பு வெளிப்படும் கோபாக்கினை நாளிலே உனக்காகக் கோபாக்கினையைக் குவித்துக் கொள்ளுகிறாயே. தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத் தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார்'' (ரோமர் 2:4–6).

நீங்கள் பெருமைகொண்டோ அல்லது பிரசங்கிக்கும் இச்சை கொண்டோ அல்லது பாகுபாடு காண்பித்தோ அல்லது பேராசை கொண்டோ அல்லது பொருளாசை கொண்டோ இருக்கும்போது, உங்கள் உள்ளத்தின் ஆழத்தில் ஆவியானவரின் உணர்த்துதலை (நியாயத்தீர்ப்பை) உணருகிறீர்கள்! ஆ, இதுவே, உங்களை இரட்சிப்பிற்குள் நடத்தும்படி உங்களை ஆட்கொண்டிருக்கும் தேவகிருபையின் –தேவதயவின் அத்தாட்சியாகும்!! ஆனால் நீங்களோ இந்த சமயத்தில் தேவதயவு நடத்தி யிருக்கும் நியாயத்தீர்ப்பைப் புறம்பே தள்ளிவிடக்கூடும். ஏனெனில் நீங்கள் உங்களைக் குறித்த உண்மையை சிநேகிக்கவில்லையே! இவ்விதம் நீங்கள் ஆவியானவரின் உணர்த்துதலை ஏற்றுக்கொள்ள மறுத்த படியால், ஆண்டவர் உங்களோடு போராடுவார் என எண்ணாதீர்கள். அவர் ஒருபோதும் அவ்விதம் செய்யமாட்டார். மாறாக, உங்களைத் தனியே விட்டுவிடுவார். சொல்லப்போனால் உங்களைப் போஷித்து அநேக வழிகளில் உங்களுக்கு நன்மையே செய்திடுவார். இதனிமித்தம் தேவன் என்மீது பிரியமாயிருக்கிறார் என்றுகூட நீங்கள் எண்ணிக் கொள்வீர்கள்! (ஏசாயா. 57:11; எரே. 22:21). காரியம் இப்படியாயிருப்ப தினிமித்தம், நீங்கள் நியாத்தீர்ப்பை தவிர்த்துக் கொண்டதாகவும் எண்ணிடமுடியும். ஆனால் உண்மையில் அப்படியில்லை! நீங்கள் செய்தது, நியாயத்தீர்ப்பை ஒத்திப்போட்டீர்கள் அல்லது கடைசி நாளின் தேவகோபத்திற்கென நியாத்தீர்ப்பை குவித்துக் கொண்டீர்கள்!! ... அவ்வளவுதான்.

ஜனங்களை தேவன் கடுமையாய் நியாந்தீர்க்குங்காலம் இன்னமும் வரவில்லை. யாரெல்லாம் சத்தியத்தை சிநேகித்துத் தாங்களாகவே ஒளி யினிடத்தில் வருகிறார்களோ அவர்களே தேவனுடைய வீடாயிருக் கிறார்கள். இந்த தேவனுடைய வீடு மாத்திரமே இப்போது (Now) நியாயந் தீர்க்கப்படுகிறது (1பேது. 4:17,18).

- *SELECTED*

3

தேவா, தாழ்மை எமக்கு வேண்டும்!

(HUMILITY)

(நிதானமாய் கருத்தூன்றி வாசியுங்கள்)

முக்கியமான மூன்று மனநோக்கங்கள் நம்மைத் தாழ்மைக்கு நேராய் உந்திச் செல்கின்றன. 1) நாம் சிருஷ்டிக்கப்பட்டவர்கள் 2) நாம் பாவிகள் 3) நாம் பரிசுத்தவான்கள். இதில் இரண்டாவது பகுதியாகிய ''நாம் பாவிகள்'' என்ற மனநோக்கமே இன்று அதிகமாய் வலியுறுத்தப் பட்டு, ஒருவன் தாழ்மையிலே தரித்திருக்கவேண்டுமென்றால் ''திரும்பத் திரும்ப பாவம் செய்ய வேண்டும்போலும்!'' என்றே அநேகர் எண்ணு கிறார்கள். இன்னும் சிலர், தங்களைத் தொடர்ச்சியாக நியாயந்தீர்த்துக் கொள்வதுதான் தாழ்மையின் இரகசியம் என்றும் எண்ணுகிறார்கள். ஆனால், பாவம் நம்மை அதிகமான தாழ்மைக்குள் நடத்த முடிவ தில்லை... மாறாக, கிருபையே நம்மை அதிகமாய்த் தாழ்மைப்படுத்து கிறது! ஆம், தேவனாலும் அவருடைய மகிமையினாலும் ஈர்க்கப்பட் டவர்களே தங்கள் தேவனுக்கு முன்பாகத் தாழ்மையான ஸ்தானத்தைத் தெரிந்து கொள்வார்களேயல்லாமல், தங்கள் சொந்தப் பாவங்களினிமித் தம் மாத்திரமே ஆட்கொள்ளப்பட்டவர்கள் இந்த மகத்துவ தாழ்மையின் ஸ்தானத்தைக் கண்டடைய மாட்டார்கள்!

''நான் மனத் (இருதயத்தில்) தாழ்மையாய் இருக்கிறேன், என்னிடத்திலிருந்து கற்றுக்கொள்ளுங்கள்'' (மத்.11:29) என இயேசு கூறினார். தாழ்மைக்கு இயேசுவே நம்முடைய மாதிரியாய் இருப்பாரென்றால், அவருடைய தாழ்மை எங்கே வேர்விட்டிருந்தது என்பதை நாம் அறியவேண்டியது அவசியமாகும். ''அடிமையின் ரூபத்தை'' இயேசு தனக்காக எடுத்துக்கொண்டதில்தான் அவர் தன் மகிமையைக் கண்டார். இவ்வாறு, எல்லோருக்கும் வேலைக்காரனாய் அல்லது அடிமையாய் இருப்பதைக்காட்டிலும் வேறு எதுவும் தெய்வீகமும், பரலோகமும் அல்ல என்பதை அவர் இப்பாருலகிற்கு எடுத்துக்காட்டினார்.

நம்முடைய பாவங்களுக்காக நாம் மனம் நொறுங்குவதைக் காட்டிலும், 'தாழ்மையின்' வசீகரம் பன்மடங்கு உயர்ந்ததாகும். நாம் ''இயேசுவின் ஜீவனில்'' பங்குபெறுவதே தாழ்மையாகும். இன்று, பரிசுத்தத்தை நாடிச்சென்ற அநேகர் இத்தாழ்மையில் குறைவு பட்டிருப்பது துரதிருஷ்டமேயாகும்! இத்தாழ்மையின் வேரிலிருந்து தான் மெய்யான ஆவியின் கனி விளைந்திட முடியும். ஒருவன் இயேசு வோடு ஐக்கியம் கொள்வதற்கு, இத்தாழ்மையே முக்கிய நிபந்தனை யாயும் இருக்கிறது.

பெருமை அல்லது தாழ்மையின்மைதான் எல்லாப் பாவத்திற்கும் தீமைக்கும் வேராய் இருக்கிறது. இப்பாழும் பெருமை உன்னதங்களில் உலாவிய தேவதூதர்களைப் பேயாக மாற்றியது! ஆனால் தாழ்மையோ... வீழ்ச்சியுற்ற மனிதனைத் தேவதூதர்களின் வானுலக சிங்காசனத்திற்கு உயர்த்துகிறது!!

இவ்வாறு நம்மைக் கொண்டு ஓர் புதிய சிருஷ்டிப்பைத் தேவன் உருவாக்கிக் கொண்டிருக்கும் நோக்கம் யாதெனில், 1] சகல பொல்லாத தீமைகளும் பெருமையிலிருந்துதான் தோன்று கின்றன 2] சகல நன்மையான நற்குணங்களும் தாழ்மையி லிருந்தே ஊற்றெடுக்கின்றன என்ற இந்த மாபெரும் இரண்டு சத்தியங்களைநித்திய காலத்திற்கும் நிரூபித்துக்காட்டவேயாகும்.

நாம் ஆட்டுக்குட்டியானவரின் தாழ்மையில் வேர்விட்டு நிலைத் திராவிட்டால், நம் மாம்சத்திலிருக்கும் தீமைகளை ஒருக்காலும் முழு மையாக ஜெயித்திடவே முடியாது!

பாழும் பெருமை நமக்குள் சாகவேண்டும்! இல்லாவிட்டால், பரலோக வஸ்துக்களில் ஒன்றாகிலும் நம்மில் தங்கி ஜீவிக்கவே முடியாது. இக்கொடிய பெருமையை ஏதோ தீயபழக்கம் என எண்ணிவிடாதீர்கள். அல்லது தாழ்மையை ஏதோ ஓர் மிகச்சிறந்த நற்குணம் என்றும் எண்ணி விடாதீர்கள். கேளுங்கள் உண்மையை... நரகத்தின் மொத்த ரூபமே பெருமை! பொன்னுலகப் பரலோகத்தின் மொத்தவடிவமே தாழ்மை!! உங்களுக்குள் எவ்வளவு அதிகமாய் பெருமை குடிகொண்டிருக்கிறதோ அவ்வளவு அதிகமாய் லூசிபரான சாத்தானும் உங்களுக்குள் செழித்து வாழ்ந்து கொண்டிருப்பான். அதேபோல, உங்களுக்குள் உண்மையா ன தாழ்மை எவ்வளவு அதிகமாய் வாசமாயிருக்கிறதோ அவ்வளவு அதிகமாய் உங்களுக்குள் கிறிஸ்து பூரிப்புடன் வாசம் செய்திடுவார். உங்கள் ஆன்மாவிற்கு பெருமை கொண்டுவரும் பயங்கரமான நித்திய பேரிழப்பை நீங்கள் கண்டுவிட்டால்... ''தெய்வமே! என்னைப் பற்றி யிருக்கும் இக்கொடிய நச்சுப்பாம்பைப் பிடுங்கி எறிந்துபோடுங்கள்!!'' என கண்ணீரோடு கெஞ்சி ஜெபிக்க ஆரம்பித்துவிடுவீர்கள். ஆம், இதற்காக உங்களின் ஒரு கரத்தையோ அல்லது ஒருகண்ணையோகூட இழந்துவிடத்துணிந்துவிடுவீர்கள். அதேபோல, தாழ்மை ஒன்றே தேவ ஆவியானவர் வந்து தங்குவதற்கு வாசலைத்திறக்கிறது என்பதையும் நீங் கள் கண்டுவிட்டால், இவ்வுலகம் தரும் ''பின்ன அளவு'' மகிமையைக் கூட நீங்கள் ஏற்றுக்கொள்ள மறுத்து..... இவ்வுலகத்தில் மிகவும் தாழ்ந்த எல்லோருக்கும் கீழான பாதபடியாகிவிடும் ஸ்தானத்தை வாஞ்சித்துத்

தேடத் துவங்கிவிடுவீர்கள்.

பெருமையும், தன்னைத்தானே உயர்த்துவதும் பாதாளத்தின் திறப்பு வாசலாகவே இருக்கின்றது. ஆகவே மெய்யான தாழ்மையை நாம் மீண்டும் அடைவதுதான் நம்முடைய மீட்பாயிருக்கிறது என்பதில் துளியும் சந்தேகமேயில்லை. இத்தாழ்மையை நமக்குத் தரும்படிக்கே இயேசு பரத்திலிருந்து இம்மண்ணிற்கு இறங்கி வந்து, இத்தாழ்மையில் பங்குபெறும் யாவரும் இரட்சிப்படைய வழிவகுத்தார். இந்தத் தாழ்மை என்ற மண்ணிலிருந்து மாத்திரமே கிறிஸ்துவின் திவ்விய சுபாவங்கள் வளர்ந்திட முடியும்.

கிறிஸ்துவின் திவ்விய சுபாவங்களை வாஞ்சித்துப் பின்தொடரும் எந்த ஒரு முழு இருதயம் கொண்ட கிறிஸ்தவனிடத்திலும், "தாழ்மையே" பளிச்சென்று அவனைச்சுட்டிக்காட்டும் அடையாளமாய் இருத்தல் வேண்டும்! இத்தாழ்மை ஒருவனுக்குள் தானாய் வந்துவிடுவதில்லை. அதை ஒருவன் மிகுந்த தவணத்துடன் அதிகமாய் ஜெபித்துத் தேட வேண்டும். உறுதியான தீர்மானத்துடன் தேவனுடைய சமூகத்திலும் கிறிஸ்துவின் பாதபடியிலும் விடாப்பிடியாய் காத்திருப்போமென்றால், நாம் தாழ்மையில் எவ்வளவு குறைவுப்பட்டிருக்கிறோம் என்ற பகுதிகளையே கிறிஸ்து முதலாவதாக நமக்குக் காட்டுவார் .

ஆம், இயேசுவின் தாழ்மை நம்மில் எவ்வளவாய் இல்லை என்பதைக் காண்பதே இன்றைய நம்முடைய அவசரத் தேவையாய் இருக்கிறது.

இவ்வாறு முதலாவது நம்முடைய குறைவை கண்டுவிட்டால், அத்தாழ்மையை அடைவதற்கு நாம் எவ்வளவாய் பெலனற்று நிர்க்கதியற்றவர்களாய் இருக்கிறோம் என்ற நிலையை உணர்வதற்கும் ஆயத்தமாய் இருப்போம். இத்தருணத்தில், உங்களின் ஆத்துமா இயேசுவின் தாழ்மையைக்கண்ட வியப்பினாலும், உங்களின் சுய–பெருமையைக் கண்ட அருவருப்பினாலும் ஆட்கொள்ளப்படும்வரை... இயேசுவின் ஜீவியத்தை ஆராய்ந்து தியானியுங்கள்.

நாம் அன்பில் தாழ்ச்சியுற்றிருத்தல்,பிறருடைய உணர்வுகளையும் பெலவீனங்களையும் பாராமுகமாய் இருத்தல், சற்றும் தாமதிக்காமல் பேசிடும் பட்டயக்குத்துபோன்ற வார்த்தைகள், நியாயத்தீர்ப் புகள் (இவ்வாறு பேசிவிட்டு "நான் நேர்மையாய் ஒளிவுமறைவின்றிப் பேசினேன்" என நீங்கள் சொல்லிக் கொள்ளலாம்), நிதானத்தை இழந்து பிரதிபலித்த கிரியைகள், எளிதில் மனம்புண்பட்டு எரிச்சலடையும் உங்களின் நிலைகள், கசப்புணர்வுகள், பிரிவினை உண்டாக்க வகைசெய்யும் உங்களின் நடவடிக்கைகள்.... ஆகிய இவையாவற்றிற்கும் உரிய "வேர்" பெருமையேயன்றி வேறென்ன? இப்பெருமையின் பின்னணியிலிருக்கும் ஒருவன் தன் சொந்த புகழ்ச்சியிலும், தன் சுய முன்னேற்றத்திலுமே எப்போதும் ஆர்வம் கொண்டிருப்பான்.

இப்பூவுலக வாழ்க்கையில் தனக்கு தேவனே எல்லாமுமாய் இருக்க வேண்டும் என்பதற்காகவே இயேசு தன்னை எப்போதும் "வெறுமையாய்" வைத்துக்கொள்ள வாஞ்சித்தார். ஆகவே, தன் சொந்த

சித்தம், தன்னுடைய திறமைகள் ஆகிய முழுமையையும் தன் பிதாவி விடத்தில் அர்ப்பணம் செய்துவிட்டு, தன்மூலமாய் பிதா கிரியை செய் வதற்கு வழிவகுத்தார். இவ்வித ஜீவியத்தில்தான் இயேசு பூரண சமாதானத் தையும், சந்தோஷத்தையும் கண்டடைந்தார். இவ்வாறு சகலத்தையும் தேவனுக்கே அர்ப்பணித்ததின் பொருட்டு இயேசு ஒன்றையும் இழந்து விடவில்லை! மாறாக, தேவன் அவரை கனப்படுத்தி, அவருக்காக எல்லா வற்றையும் செய்து முடித்தார். இவ்வாறு இயேசு தேவனுக்கு முன்பாக தன்னைத்தானே தாழ்த்தியபடியால், அவர் மனுஷருக்கு முன்பாகவும் தன்னைத்தாழ்த்தி எல்லோருக்கும் வேலைக்காரனாய் இருப்பது அவருக்கு எளிதாய் இருந்ததைக்கண்டார்.

சுயத்தை நாம் வெறுப்பதின் பொருள் யாதெனில், நம் சுயத்தில் எந்த நன்மையும் வாசமாயில்லை என்பதை ஒத்துக்கொண்டு, தேவ னே எல்லாமுமாய் இருக்கும் பொருட்டு, தேவனுக்கு முன்பாக வும் மனுஷர்களுக்கு முன்பாகவும் ''ஒன்றும் இல்லாதவனாய்'' மாறுவதேயாகும் !

இங்குதான் மெய்யான தாழ்மையின் வேர் இருக்கிறது. இதைத் தெளிவாய் விளங்கிக் கொள்ளாமலும், வாஞ்சையோடு தேடாமலும் இருக்கிறபடியால்தான் நம்முடைய தாழ்மை ''மேற்பூச்சாய்'' இருக்கிறது. இந்தத் தாழ்மை இயேசுவுக்குள் அவ்வப்போது தோன்றிமறையும் தற் காலிக மனப்பாங்காய் இல்லாமல், அவருடைய முழு ஜீவியத்தையும் ஆட்கொண்ட நிரந்தர ஆவியாய் விளங்கியது. ஆகவேதான், அவர் தன் பிதாவுக்கு முன்பாகத் தாழ்மையாய் இருந்ததைப்போலவே, எல்லா நேரங்களிலும் மனுஷருக்கு முன்பாகவும் தன்னைத்தாழ்த்தி இருப்பது அவருக்கு எளிதாய் இருந்தது. தேவன் அன்புகூர்ந்தவர்களைத் தானும் அன்புகூர்ந்து அவர்களுக்கு ஊழியம் செய்திட நெருக்கி ஏவப்பட்டதை அவர் உணர்ந்ததின் நிமித்தமாய், அவர்களுக்கு அவர் ''தேவனுடைய ஊழியனாய்''திகழ்ந்தார். எனவேதான், ஒரு நொடிப்பொழுதுகூட அவர் தன் சொந்தப் புகழ்ச்சியை நாடிட சிந்திக்கவுமில்லை, தன்னை நியாயப் படுத்தும்படி தன் வல்லமையைப் பயன்படுத்தவேண்டும் என்ற எண்ணம் கொள்ளவும் இல்லை.

சுவிசேஷங்களில் இயேசுவின் சீஷர்கள் நடந்துகொண்ட விதத்தைக் காண்பதின் மூலமாய் நாம் அறிவது என்னவென்றால்:

ஒருவன் உண்மையுள்ளவனாயும், எல்லா மார்க்க சம்பந்த கிரியை களிலும் வைராக்கியம் கொண்டவனாயும் இருந்துகொண்டு.... தாழ்மையே இல்லாமலும் இருக்கமுடியும் என்பதுதான் !

அவர்கள் இயேசுவைப் பின்பற்றுவதற்குத் தங்களுக்குண்டான யாவற்றையும் வெறுத்துவிட்டார்கள். மேலும் அவரோடு மரிப்பதற்கும் ஆயத்தமாயிருந்தார்கள். ஆனால், தங்களுக்குள் வாசமாயிருந்த பொல் லாத பெருமையை அறிந்திடும் உணர்வுகூட இல்லாதிருந்தார்கள். இதே போன்ற கொடிய நிலை நமக்கும் சம்பவித்திட முடியுமே!!

இங்கு நாம் காணும் மற்றொரு காரியம் என்னவென்றால், மூன்றாண்டுகளாய் பிரசங்கித்த இயேசுவின் போதனைகூட அவர்

களுக்குள் வாசமாயிருந்த பெருமையை அகற்றிட முடியவில்லை என்பது தான்! இன்றும் அதேபோல, தாழ்மையைப் பற்றிய போதகங்களும் அல்லது புத்தகங்களும் நம்மைத் தாழ்மைக்குள் கொண்டுவந்திட முடியமா? என்பது ஓர் வியப்பூட்டும் கேள்வியாகவே இருக்கிறது!!

நமக்குள்ளிருக்கும் பெருமையை வேறொருவனாகிய–ஆதாமிடமிருந்து நாம் பெற்றோம்! இப்போது நமக்குரிய தாழ்மையையும் வேறொருவராகிய–கிறிஸ்துவிடமிருந்தே நாம் பெறவேண்டும்!! பெருமையானது, நம் ஜீவியத்தின் இயற்கையான சுபாவமாய் மாறும் அளவிற்கு தன் வலிமையினால் நம்மை ஆண்டு கொண்டிருப்பதைப் போலவே... தாழ்மையும் நமக்குச் சொந்தமாய் மாறி நம் ஜீவியத்தின் இயற்கையான சுபாவமாய் மாறிவிட வேண்டும். அதாவது, நாம் எவ்வளவு எளிதாய் பெருமை கொண்டோமோ,அவ்வளவு எளிதாய் நாம் தாழ்மையாய் இருப்பதற்கும் மாறிவிட வேண்டும். ஏனென்றால் ''பாவம் பெருகின (அதே) இடத்தில் கிருபை அதிகமாய் பெருகிற்று'' (ரோ 5:20) என்பதே வாக்குத்தத்தமாயிருக்கிறது. கிறிஸ்து மெய்யாகவே நம் இருதயத்தை ஆளும் ஆண்டவராய் நமக்கிருந்தால், அவருடைய சொந்த சுபாவமாகிய தாழ்மையை நமக்கு அவர் நிச்சயம் தந்திடுவார்.

நாம் தேவனை நேசிக்கும் அன்பு, நம்முடைய சக விசுவாசிகளை நேசித்திடும் அன்பை வைத்துத்தான் கணக்கிடப்படுகிறது. இந்த சத்தியத்தை யோவான் அப்போஸ்தலன் ஆணித்தரமாய் வலியுறுத்தி, ''தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூறாமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்?'' (1யோ 4:20) எனக் கூறினார். இந்த அன்பிற்கொப்பாகவே தாழ்மையும் கணக்கிடப்படுகிறது.

நாம் தேவனுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தியிருப்பதாக எண்ணிக் கொள்ளலாம். ஆனால், நாம் மனுஷர்களுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தியிருக்கிறோமா என்பதே அவ்வுண்மையை நிரூபித்துக்காட்டும் நிரூபணமாகும். நாம் ஜெபத்தில் தேவனுக்கு முன்பாக தாழ்மையாய் இருப்பதைப்போல் காட்ட முயற்சிப்பதை வைத்து நம்முடைய தாழ்மையைக் கணக்கிட முடியாது.

மாறாக, நம் சக மனிதர்களோடு அன்றாட உறவு கொண்டு வெளிப்படுத்தும் கிரியைகளே உண்மையான தாழ்மைக்கு அளவுகோலாயிருக்கிறது. முன்னெச்சரிக்கையற்ற தற்செயலான தருணங்களில்தான் நம்முடைய உண்மையான சுபாவம் வெளிப்பட்டு விடுகிறது! இவ்வித தருணங்களில் நேர்மை உள்ளம் கொண்ட மனிதன் தன் உண்மை நிலையைக் கண்டுபிடித்து தன்னிடத்தில் தாழ்மை இல்லை என்பதை ஒத்துக்கொள்வான்!!

ஆகவே, ''தேவனுடைய வெளிச்சத்தில் நம்முடைய வெறுமையைக் கண்டு, இப்போது தேவனே நமக்கு எல்லாமுமாய் இருக்கும் பொருட்டு, நாம் வெளிச்சத்தில் கண்ட சுயத்தை தூக்கியெறிவதே'' மெய்யான தாழ்மையாகும். இப்படிப்பட்ட மனிதன் தன்னை ஒரு போதும் பிறரோடு ஒப்பிட்டுப் பார்க்கமாட்டான்! தன் சக மனிதர்களை

சந்திக்கும்போது தன் ''ஒன்றுமில்லாத நிலையை'' உணர்ந்தே சந்திப்பான்! தனக்காக எதையும் தேடாத எண்ணத்தோடு சந்திப்பான்! தான் தேவனுக்கு ஊழியக்காரனாயிருக்கிறபடியால் எல்லா மனுஷருக்கும் வேலைக்காரனாய் இருக்கும் நிலையில் சந்திப்பான்! இவ்வித மெய்யான தாழ்மை கொண்டவன், வன்கண்ணனாகவோ (JEALOUSY), பொறாமை கொண்டவனாகவோ (ENVY) ஒருபோதும் இருக்கமாட்டான். தனக்கு முன்பாக வேறொருவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்போது இவன் மெய்யாகவே தேவனைத் துதிப்பவனாயிருப்பான். தான் மறக்கப்பட்டு பிறர் புகழப்படுவதை கேட்பதற்கும் நல்ல உள்ளம் கொண்டிருப்பான். இதுபோன்ற மனிதனின் தாழ்மை, அவன் தன்னைத்தானே தாழ்மையாக கூறிக்கொள்ளும் வார்த்தையில் அடங்கியிருக்காமல், மனதுருக்கத்தாலும், அன்பாலும், நீடிய சாந்தத்தாலும் ஆட்கொள்ளப்பட்ட அவனுடைய ''தாழ்மையின் இருதயத்திலேயே'' அடங்கியிருக்கும்.

கிறிஸ்தவ ஜீவியத்தில் ஆழ்ந்த அனுபவத்தை நாடும் விசுவாசிகள் ''மனுஷீக நற்குணங்களாகிய மகிழ்ச்சி, தைரியம், உலகத்தை வெறுத்தல், வைராக்கியம், தியாகம்'' போன்றவைகளை இலக்காக வைத்து அதில் களிகூர்ந்திடும் பெருத்த அபாயம் இருக்கிறது. ஆனால் இதுபோன்ற மனுஷீக நற்குணங்களை முற்காலத்து யோகிகளும்கூட உபதேசித்து அதைக் கைக்கொண்டிருக்கிறார்கள். நாமோ இதுபோன்ற மென்மையான சுபாவங்களைக் காட்டிலும், இயேசு பரலோகத்திலிருந்து கொண்டுவந்த ''ஆவியில் தரித்திரம், சாந்தகுணம், தாழ்மை, அடிமையின் ஸ்தானம் மற்றும் சுயத்திற்கு மரித்தல்'' போன்றவைகளயே எப்போதும் சிந்தித்து நாட வேண்டும்.

இங்குதான் நாம் நேர்மையுள்ளவர்களாய் நடக்கவேண்டும். இந்த உலகம் நம்மில் இயேசுவின் தாழ்மையைக் காணமுடிகிறதா?

இந்தத் தாழ்மை இல்லாததினால்தான் இன்று சபை அதிக துன்பத்திற்குள்ளாகிறது.

நம்மைவிட வித்தியாசமான, இணக்கமில்லாதவர்களைத் தாங்கிக் கொள்ளக் கூடாதவர்களாயும், அவர்களை அன்புகூர முடியாதவர்களாயும், ஆவியின் ஒருமையை சமாதானக்கட்டிலே காத்துக்கொள்ளக்கூடாதவர்களாயும் இருப்பது ஏன்? மற்றவர்களைக்குறித்து மிக எளிதில் நமக்கு ஏன் சலிப்பு ஏற்பட்டது? இதற்கெல்லாம் நம்மிடத்தில் தாழ்மை இல்லாததினால் தானே! தாழ்மை இருந்திருந்தால், நம்மை ஒன்றுமில்லாத அற்பர்களாகவே எண்ணியிருப்போம்... தாழ்மை இருந்திருந்தால், நம்மை கடைசி ஸ்தானத்திலேயே வைத்து கண்டிருப்போம்... தாழ்மை இருந்திருந்தால், மற்றவர்கள் எவ்வளவுதான் தகுதியற்றவர்களாய் அல்லது நன்றியில்லாதவர்களாய் இருந்தபோதும், இயேசுவைப் போலவே அவர்களுக்கு ஊழியமும் உதவியும் புரிந்து அவர்களை ஆசீர்வதித்திருப்போம்!!

இன்று, தங்களை மகிழ்வோடு கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்ததாக கூறும் அநேகர் தங்கள் சகோதரர்களுக்கு அவ்விதமாய் தங்களை அர்ப்பணித்திட ஏன் கஷ்டப்படுகிறார்கள்? இதற்கு காரணம், இவர்கள் இயேசுவினுடைய தாழ்மையின் விலையேறப்பெற்ற மதிப்பை சரியாகப் புரிந்து

கொள்ளாததினால் தானே! நாம்நேர்மையாய் கண்டு கொண்ட இந்தக் குறைகள் தேவனை ஊக்கமாய் தேடுவதற்கு நம்மை உந்தித் தள்ளுவ தாக. இனிவரும் நாட்களில், நம்மை மனமடியச் செய்திடும் எந்த சகோ தரனையும், நமக்கு கிருபையைக் கொண்டுவரும் தேவனுடைய கருவி யாகவே பார்க்கக் கடவோம்.அவ்வாறு செய்துவிட்டால், நமக்கு ஜீவ னாய் விளங்குகிற இயேசு நமக்குள் தர விரும்புகிற தாழ்மையில் நிச்ச யமாய் பங்கு பெற்றுவிடுவோம்!

நாம் பெற்றிருக்கும் பரிசுத்தம் உண்மையானது தானா? என அறிவதற்கு, இப்பரிசுத்தம் நமக்குள் தாழ்மையை மேன்மேலும் வளர்ந்து வளரச் செய்திருக்கிறதா என்பதே சிறந்த பரீட்சையாயிருக்கிறது. ஏனெனில், தேவனுடைய பரிசுத்தம் நம்மிலே தங்கி நம்மூலமாய் பிரகாசிக்க வேண்டுமென்றால்... ''தேவையானது ஒன்றே'' என இருப் பது தாழ்மைதான் !

போலியான பரிசுத்தத்தைக் கண்டுபிடிப்பதற்குரிய பிரதான அடையாளம், அந்த பரிசுத்தத்தில் காணும் தாழ்மையின்மைதான்.

எனவே பரிசுத்தத்தை வாஞ்சித்துத் தொடரும் நாம் ஒவ்வொருவரும் விழிப்புடன் இருக்கவேண்டியது அவசியமாயிருக் கிறது. இல்லாவிட்டால், நம்மை அறியாமலேயே ஆவியில் துவங்கிய நாம் மாம்சத்தில் முடிவடைந்து, நாம் சற்றும் எதிர்பாராத விதத்தில் பெருமை நமக்குள் பாம்பைப் போல் ஊர்ந்து வந்துவிடும். பரிசேயன் பிரவேசிக்க முடியாத எந்த உயர்வான ஸ்தானமுமில்லை! தேவனுடைய ஆலயமேயானாலும், அங்கும் பெருமை தைரியமாய் தன் தலையை உயர்த்திட முடியும்!!

பரிசேயனும் ஆயக்காரனும் செய்த ஜெபத்தின் உவமையை நாம் யாவரும் அறிந்திருக்கிறோம், ''பரிசேயன்நின்று: தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபச்சாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப் போலவும், இந்த ஆயக்காரனைப்போலவும் இராததினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். வாரத்தில் இரண்டு தரம் உபவாசிக்கிறேன்; என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்தி வருகிறேன் என்று தனக்குள்ளே ஜெபம் பண்ணினான். ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு: தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான். அவனல்ல, இவனே நீதிமானக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஏனெனில் தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னை தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்'' என்றார் இயேசு (லூக் 18:11–14). பார்த்தீர்களா, இவ்விதமாய் தேவனைத் துதிக்கும்போதுகூட நம்மை நாமே உயர்த்திட முடியும். அந்நாளில் தேவாலயத்தில் ஜெபித்த பரிசேய னுடைய பெருமையை கிறிஸ்து வெளியரங்கமாக்கிவிட்டார்! ஆகவே இன்றைய 'நாகரீக பரிசேயர்கள்' அந்த நல்ல ஆயக்காரனுடைய தோலைப் போர்த்திக்கொண்டு தங்களின் நிர்பந்தமான பாவநிலையை ''பெருமை யோடு'' அறிக்கை செய்யத் துவங்கி விட்டார்கள்! அன்று பாவிகளை அசட்டை செய்த பரிசேயர்களின் அபாயம் இன்று இல்லை. ஆனால்,

நமக்குள்ளிருந்து நம்மை உயர்த்த முயற்சிக்கும் பரிசேயனின் அபாயம் இன்றும் இருக்கத்தான் செய்கிறது. தேவனுடைய மகத்துவமான செயல்களைத் துதித்து நன்றி செலுத்துவதிலும்கூட, பரிசேயன் தன்னையே மெச்சிக்கொண்டு தனக்குத்தானே ''வாழ்த்துக்கள்'' கூறிக்கொண்டான்! எனவே ''துதி'' என்ற வஸ்திரத்தைப் போர்த்திக்கொண்டோ அல்லது ''நொருங்குண்ட நிலை'' என்ற வஸ்திரத்தைப்போர்த்திக்கொண்டோ இன்ற பெருமை நம்மத்தியில் தாண்டவமாடுவதை சற்று கவனித்துப் பாருங்கள்.

பரிசேயன் ஜெபித்த, ''நான் அந்த மனுஷனைப்போல் இராததினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன்'' என்ற கொடூரமான ஆவி, இதே வாக்கியத்தை உச்சரிக்காவிட்டாலும் இன்று அநேக கிறிஸ்தவர்களின் சம்பாஷணையிலும் சிந்தையிலும் குடிகொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். ''அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை'' என நீங்கள் சந்தேகிப்பீர்களாகில், சில கிறிஸ்தவர்கள் வேறு சில கிறிஸ்தவர்களைப் பற்றி பேசும் விதத்தை கவனித்துப் பார்த்தால், அவர்கள் சம்பாஷணையில் இயேசுவின் சாந்த குணமும் தாழ்மையும் சிறிதுகூட இல்லாதிருப்பதை நீங்கள் கண்டுகொள்ள முடியும். நம்மைப் பற்றியோ அல்லது பிறரைப் பற்றியோ பேசும் சம்பாஷணைகளில் உண்மையான, ஆழமான தாழ்மை நமக்கு எப்போதும் காணப்படவேண்டும்.

தங்களைப் பரிசுத்தவான்கள் என எண்ணிக்கொள்ளும் எத்தனையோ பேர்... எளிதில் மனம் புண்பட்டு, பொறுமையை இழந்து, தங்களை நியாயப்படுத்தி, தங்கள் பகுதியை சாதித்துப் பேசி, கடுமையாய் பிறரை நியாயந்தீர்த்து, அன்பற்ற வார்த்தைகளைப் பேசி... இவ்விதமாய், தங்களிடம் உள்ள பரிசுத்தத்திற்கும் கிறிஸ்துவின் சாந்த குணத்திற்கும் சிறிதும் சம்பந்தமில்லை என்பதை நிரூபித்துக் காட்டிவிட்டார்கள்.

நாம் அதிகமாய் நொறுங்குண்டது போன்ற சிற்சில சம்பவங்கள் நம் எல்லோருக்குமே நடந்திருக்கலாம். ஆனால், ஒருவன் இயேசு கிறிஸ்துவிலுள்ள சிந்தையிலும், மனப்பான்மையிலும் "தாழ்மையில் நிரந்தரமாய் உடுத்துவிக்கப்படுதல்'' எத்தனை மேன்மையும் அருமையுமாயிருக்கும் என்பதை யோசித்துப்பாருங்கள்.

பரிசுத்தத்தில் சிகரமாயிருந்த இயேசு தாழ்மையிலும் சிகரமாயிருந்தார். ஆம், அதிக பரிசுத்தத்தில் முன்னேறுபவர்கள் எப்போதும் அதிக தாழ்மையாயுமிருப்பார்கள். தேவனுக்கு முன்பாக நாம் நம்முடைய கண்களுக்கு உண்மையாகவே 'ஒன்றுமில்லாதவர்களாய்' மாறிவிட்டால், நம் சக மனுஷர்களிடம் எக்காலமும் தாழ்மையாகத்தான் இருப்போம். இதுபோன்ற நிலையில்தான் தேவனுடைய சமூகம் நமக்கு அவ்வப்போது கிட்டுவதாயிராமல், சதா நம்மோடுகூட இருந்திடும் இனிய அனுபவமாய் மாறுவதை நாம் ருசித்திடமுடியும்.

நாம் தேவனுக்கு முன்பாகக் கொண்டிருக்கும் தாழ்மையை... நம் சக மனிதர்களைக் குறித்த சிந்தைகளையும், வார்த்தைகளையும், மனப்பான்மைகளையும் வைத்தே தேவன் பரீட்சிக்கிறார் என்ற

உண்மையை நாம் யாவரும் ஆணித்தரமாய் அறிந்திருக்க வேண்டும்.

நாம் தேவனுக்கு முன்பாகக் கொண்டிருக்கும் தாழ்மையின் வல்லமை தான், நம் சகமனிதர்களிடம் நாம் தொடர்ச்சியான தாழ்மை கொண்டிருக்கப் பெலன் செய்கிறது.

நம்முடைய சொந்த பரிசுத்த ஜீவியத்தில்அடைந்திடும் பெருமையே வேறு எந்த பெருமையைக் காட்டிலும் அபாயம் நிறைந்ததாகும். ஏனெனில் இப்பெருமையை ஒருவனும் பளிச்சென காணக்கூடாதபடி அவனுக்குள் பரிசுத்தம் என்ற போர்வையில் தந்திரமாய் மறைந்திருப்பதே காரணமாகும். ''நான் உன்னைக்காட்டிலும் பரிசுத்தவான்'' என எந்த மனிதனும் வெளிப்படையாக சிந்திக்கவோ அல்லது சொல்லவோ மாட்டான்! ஏனெனில் இதுபோன்ற சிந்தை அருவருப்பானதென பகிரங்கமாய் நாம் யாவரும் அறிந்திருக்கிறோம். ஆனால் ஒருவன் அறியாமலே, அவனுக்குள் மறைந்திருக்கும் ஆன்மாவில் தன்னைப்பற்றிய நன்மைகளைக் குறித்து திருப்தி உணர்வு ஏற்பட்டு.... முடிவில் '' நான் மற்றவர்களைவிட எவ்வளவு அதிகம் முன்னேறியிருக்கிறேன்'' என்ற உணர்வு அவனை ஆழமாய் ஆட்கொண்டுவிடும். இதுபோன்ற ஆவியையுடைய அந்த மனிதன், வெளிப்படையாக ஆவிக்குரிய பெருமையுடன் பேசாதவனாயிருக்கக்கூடும். ஆனால் தேவனுடைய மகிமையைக் கண்ட ஆத்துமாவின் மாறாத அடையாளமாகிய ''ஆழமாய் தன்னைத் தாழ்த்துவது'' அவனிடத்தில் இல்லாதிருப்பதை ஒரு ஆவிக்குரிய மனிதன் எளிதில் கண்டுபிடித்து விடுவான்.

தேவனுடைய மகிமையைக் கண்டு தங்களை புழுதிமட்டும் தாழ்த்திய பரிசுத்தவான்களை வேதம் நமக்கு தெளிவாய் சுட்டிக் காண்பிக்கிறது: யோபு தேவனிடம் ''என் காதினால் உம்மைக் குறித்துக் கேள்விப்பட்டேன். இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது. ஆகையால் நான் என்னை அருவருத்து தூளிலும் சாம்பலிலும் இருந்து மனஸ்தாபப்படுகிறேன்'' என்றார் (யோபு 42:5,6) . ஏசாயா தேவனைப் பார்த்து, ''ஐயோ அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன்... சேனைகளின் கர்த்தராகிய இராஜாவை என் கண்கள் கண்டதே'' என்றான் (ஏசா. 6:5). பேதுரு தன் ஆண்டவரைக் கண்ட மாத்திரத்தில் அவருடைய பாதத்தில் விழுந்து, '' நான் பாவியான மனுஷன். நீர் என்னை விட்டுப் போகவேண்டும்'' என்றான் (லூக் 5:8). யோவான் இயேசுவின் மகிமையைக் கண்டமாத்திரத்தில், '' நான் அவரைக் கண்டபோது செத்தவனைப் போல் அவர் பாதத்தில் விழுந்தேன்'' என்றார். (வெளி 1:17).

தன் சொந்த பரிசுத்த நிலையைக் குறித்து பெருமைகொண்ட ஒரு கிறிஸ்தவன்,அவ்வளவு எளிதில் தன்னுடைய வார்த்தையினால் தன்னை வெளிப்படுத்திடமாட்டான். ஆனால் அவன் மற்றவர்களைக் குறித்து ஒப்பிட்டுப் பேசும் விதமே அவனை வெளிப்படுத்திவிடும். அவனுள் குடிகொண்டுள்ள ''பெருமை கொண்ட சுயத்தின் வலிமையை'' ஆவிக்குரிய பகுத்தறியும் தன்மை கொண்ட சகோதரர்களும் எளிதில் கண்டுபிடித்துவிடுவார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, உலகமும், உலகத்தின் அதிபதியான சாத்தானும் தன்னுடைய கூர்மையான

கண்களினால் இவனுடைய காரியங்களைக் கண்டு, இவர்களிடம் எந்த பரலோக கனிகளும் இல்லை என்பதை இவர்களின் தாழ்மையின்மையை நிரூபணமாய் சுட்டிக்காட்டிவிடுவான்!

ஆகவே சகோதரர்களே, நாம் எச்சரிக்கையாயிருக்கக்கடவோம். நாம் பரிசுத்தத்தில் முன்னேறுவதாக எண்ணிடும் ஒவ்வொரு சமயத்திலும் தாழ்மையிலும் அவ்வாறாகவே முன்னேறுவதை நம்முடைய இலக்காய் கொள்ளவில்லையென்றால், நம்முடைய துயர நிலையை நியாயத்தீர்ப்பு நாளில் கண்டு புலம்பும் நிலையாகிவிடும். கடைசி நாளில், தாங்கள் புதிய உபதேசங்களில் மாத்திரமே மகிழ்ச்சியாய் இருந்ததையும், அருமையான ஆவிக்குரிய சிந்தனைகளிலும் உணர்வுகளிலும் திருப்தி கொண்டதையும், அர்ப்பணிப்பு என்ற பெயரில் தாங்களாகவே அகமகிழ்ந்து கொண்டதையும்... ஆனால், அங்கே சுயம்(பெருமை) ஒழிந்து போகாமல் இருப்பதையும் அந்நாளில் காண்பார்கள்! நாம் இப்போதே, இயேசுவிடம் விரைந்து சென்று அவருடைய தாழ்மையினால் உடுத்திவிக்கப்படும்வரை அவருக்குள் நம்மை நாமே மறைத்து கொள்வோமாக! அது ஒன்றே உண்மையான பரிசுத்தமாகும்!!

தங்கள் பாவங்களைக் குறித்த உணர்வினால் ஆட்கொள்ளப்பட்டிருப்பதே, தாழ்மையில் தங்கியிருப்பதற்குரிய ஒரே வழி என இன்று அநேகர் எண்ணுகிறார்கள் என்பதை நாம் இச்செய்தியின் ஆரம்பத்திலேயே தியானித்தோம். ஆனால், அது ஓர் மாயமான தாழ்மையே ஆகும். பவுல் தன்னைப் பாவிகளுக்கெல்லாம் பிரதான பாவி எனக் கூறியது உண்மைதான் (1 தீமோ. 1:15). இருப்பினும், அவருடைய நிருபங்களில் ஒரு இடத்தில்கூட தான் அறிந்து செய்த பாவம் எதையும் அறிக்கை செய்ததாக நாம் காணவே முடியாது. அதற்கு மாறாக, தான் தேவனுக்கு முன்பாகவும் மனுஷருக்கு முன்பாகவும் வாழ்ந்த குற்றமற்ற வாழ்க்கையைக் குறித்து எழுதும் வாக்கியங்களைத்தான் அதிகமாய் காண்கிறோம். அவர் விசுவாசிகளிடம் கூறும்போது, ''விசுவாசிகளாகிய உங்களுக்குள்ளே நாங்கள் எவ்வளவு பரிசுத்தமும் நீதியும் பிழையின்மையுமாய் நடந்தோமென்பதற்கு நீங்களும் சாட்சி, தேவனும் சாட்சி.... தேவனுடைய கிருபையினால் நாங்கள் உலகத்திலேயும், விசேஷமாக உங்களிடத்திலேயும், கபடமில்லாமல் திவ்விய உண்மையோடே நடந்தோமென்று எங்கள் மனது எங்களுக்குச் சொல்லும் சாட்சியே எங்கள் புகழ்ச்சியாயிருக்கிறது'' (1 தெச. 2:10; 2கொரி.1:12) என்பதாகவே கூறினார்.

தன்னைத்தானே ஆழமாய் நியாயந்தீர்த்துக்கொள்வதும்கூட நம்மை ஒருபோதும் வலிமையான பெருமையின் சுயத்திலிருந்து விடுதலை பெற்றுத்தர முடியாது. நியாயப் பிரமாணத்தினால் பாவம் ஆக்கினை தீர்க்கப்படுவதால் அல்ல, கிருபையினால் மாத்திரமே நாம் கொடிய பெருமையிலிருந்து விடுதலையாகி தாழ்மையாய் இருந்திட முடியும்! நியாயப்பிரமாணம் நம் இருதயத்தை நொறுங்கச்செய்து பயபக்தியை நமக்கு உண்டு பண்ணலாம். **ஆனால் தேவ கிருபை மாத்திரமே நமக்குள் அந்த இனிமையான தாழ்மையை கிரியை நடப்பித்து, முடிவில் தாழ்மை நம் சொந்த சுபாவமாய் மாறும்படிச் செய்கிறது.** எனவே, நம் பாவத்தினால் நாம் ஆட்கொள்ளப்படுவதன் நிமித்

தமாய் அல்ல, தேவனால் ஆட்கொள்ளப்பட்டிருப்பதே நமக்குப் பெருமையின் சுயத்திலிருந்து விடுதலையைப் பெற்றுத்தருகிறது.

மரணத்தின் பாதையே ''தாழ்மை'' எனக் கூறலாம். ஏனெனில் ''மரணமே'' தாழ்மை நமக்குள் பூரணமாய் இருப்பதை விளங்கச்செய்யும் உறுதியான நிரூபணமாய் இருக்கிறது. இயேசு தன்னை மரணத்திற்கென்று தாழ்த்தியதினாலேயே, நாம் இன்று பின்பற்றி வரும்படியான புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை திறந்து வைத்திட முடிந்தது. ஆண்டவர் இயேசு, தேவனுக்குத் தன்னை சம்பூர்ணமாய் அளித்த அர்ப்பணத்தை நிரூபித்து காண்பித்திட ''மரணமேயல்லாமல்'' வேறு எந்த வழியும் அவருக்கு இருக்கவில்லை. நமக்கும் அப்படியேதான்! இந்த இழிவான மாம்சத்திலிருந்து எழும்பி பிதாவின் மகிமைக்குள் பிரவேசிப்பதற்கும் இந்த ''மரணமேயல்லாமல்'' வேறெந்த வழியும் இயேசுவுக்கு இருக்கவில்லை! நமக்கும்அப்படியேதான்!! இவ்வாறாக மாத்திரமே நாம் மாம்சத்திலிருந்து விடுதலையாகி, தாழ்மையே தனது மூச்சாகவும், மகிழ்ச்சியாகவும் கொண்ட திவ்விய சுபாவத்திற்குள் நடத்தும் வழியைக் கண்டுகொள்ள முடியும்!

இயேசுவைப்போலவே, நாம் ''சுயத்தில் சம்பூர்ண மரணம்'' அடைந்தால் மாத்திரமே நாம் ''இயேசுவின் சம்பூர்ண ஐக்கியத்திற்குள்'' பிரவேசித்திடவும் முடியும்.

தன்னை ஒரு பொருட்டாக எண்ணாமல், தன்னைத்தானே வெறுமையாக்கி அடிமையின் ரூபத்தை எடுத்துக்கொள்ளும் தாழ்மையைத்தவிர, சுயம் மரணம் அடைந்ததற்குரிய அடையாளம் வேறு எதுவுமே இல்லை!

பவுலின் மாம்சத்தில் ஓர் முள் கொடுக்கப்பட்டவுடன் முதலில் அது தன்னைவிட்டு நீங்க வேண்டும் என்பதே பவுலின் விருப்பமாயிருந்தது. ஆனால் முடிவில் பவுல் அம்முள்ளிற்காக மேன்மை பாராட்டி அதில் மகிழ்ச்சியும் கண்டார். அதைக் குறித்து அவர் கூறும்போது, ''எனக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளுக்குரிய மேன்மையினிமித்தம் நான் என்னை உயர்த்தாதபடிக்கு, என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது. என்னை நான் உயர்த்தாதபடிக்கு, அது என்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது. அது என்னைவிட்டு நீங்கும்படிக்கு, நான் மூன்றுதரம் கர்த்தரிடத்தில் வேண்டிக் கொண்டேன். அதற்கு அவர்:

என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார்.

ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுகிறேன். அந்தப்படி நான் பலவீனாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன். ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்'' என்றார் (2 கொரி. 12:7–10).

இவ்வாறு, ''தாழ்மைப்படுத்தப்படும் இடமே'' (The place of humiliation) வல்லமையின் இடமாக இருப்பதை இந்தப்பவுல் கண்டுபிடித்தார்!

தாழ்மையைப் பின்தொடரும் எந்த கிறிஸ்தவனும் பவுலைப் போலவே இரண்டு நிலைகளைக் கடந்துவர வேண்டியாதாயிருக்கிறது. முதல்நிலையில், இவன் ஓடிப்போய் தாழ்மைப்படுத்தும் நிகழ்ச்சியிலிருந்து தன்னை விடுதலையாக்கிக்கொள்ளும்படிக்கே ஜெபிக்கிறான். ஆம், ''என்ன விலைக்கிரயம் செலுத்தியாகிலும்'' தாழ்மையை அடைவதை இவன் இன்னமும் கற்றுக்கொள்ளவில்லை. ''தாழ்மையாய் இருத்தல் வேண்டும்'' என்ற பிரமாணத்தை இவன் ஏற்றுக் கொண்டிருக்கிறான், அதற்கு கீழ்ப்படியவும் நாடுகிறான்.... ஆனால், தான் எவ்வளவாய் தோல்வியுறுகிறோம் என்பதையே இப்போது கண்டு கொண்டான். இவன் தன் உதடுகளால் அதிக தாழ்மைக்காக ஜெபித்தாலும், இவனின் இருதயமோ தன்னைத் தாழ்மைப்படுத்தும் நிகழ்ச்சியிலிருந்து விலகியிருக்கவே விரும்புகின்றது. தனக்குண்டான யாவற்றையும் விற்றுவிட்டு வாங்கிடும்''இயேசுவின் தாழ்மையில்'' இவனுக்கு இன்னமும் தீராதநேசம் ஏற்படவில்லை என்றே சொல்ல வேண்டும். தாழ்மையைப் பின்தொடர்ந்து ஜெபித்திடும் அவனுடைய ஜெபத்தில் இன்னமும் அவனிடம் இனம் தெரியாத ஏதோ பாரமும் –கட்டும் இருப்பதையே காண்கிறான். தன்னைத்தானே தாழ்த்துவது, தன் ஜீவியத்திலிருந்து தானாகவே புரண்டோடுவதாயும், அது அவனது பெரு மகிழ்ச்சியாகவும் இன்னமும் மாறவில்லை!

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைக் குறித்த புதிய வெளிப்பாடுதான், பவுலை முதல்நிலையிலிருந்து இரண்டாவது நிலைக்குக் கொண்டு வந்தது. நமக்கும் இவ்விதமே சம்பவிக்க வேண்டும்! இந்த இனிய இரண்டாம் நிலைக்கு நாம் வந்துவிட்டால், நம் ஜீவியத்தில் இயேசுவே எல்லாமுமாய் இருக்கவேண்டும் (என் கிருபை போதும்!) என்ற ஏக்கத்தினிமித்தம், நம் 'சுயத்திலிருந்து' மிக எளிதில் விடுதலையாகி... பிறர் நம்மைக் குறித்து என்ன சொன்னாலும், என்ன செய்தாலும் அதை மிக எளிதில் மறந்தே போய்விடும் நிலையை எட்டிவிடுவோம்!

நாம் தாழ்மையாய் இருப்பதும், தேவனுடைய சமூகத்தில் 'வெறுமையுமாய்' இருப்பதுமே, கிறிஸ்தவ ஜீவியத்தின் உயர்ந்த இலட்சியமும் நிறைவான ஆசீர்வாதமும் என்பதை தேவன் நம் யாவருக்கும் கற்றுத்தருவாராக!!

நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான ஆவியை உடையவர்களோடுதான் தேவன் மகா உன்னத பரிசுத்த ஸ்தலத்தில் வாசம் செய்கிறார்! அந்த உயர் ஸ்தலத்தில் நாமும் அவரோடு வாசம் செய்திட தேவன் அருள் புரிவாராக!

– ஆண்ட்ரூ முரே

4

நான் கற்ற 16 – முக்கிய சத்தியங்கள் !

(SOME IMPORTANT TRUTHS THAT I HAVE LEARNT)

> ***38-ஆண்டுகளாய் ஓர் கிறிஸ்தவனாய் வாழ்ந்து வரும் நான் சில முக்கியமான சத்தியங்களைக் கற்றுக்கொண்டேன். அவைகள் என்னை உற்சாகப்படுத்தியது மாத்திரமல்லாமல், என் வாழ்விற்கு திசை காட்டுவதாகவும் "வாழ்வின் நோக்கத்தைப்" புலப்படுத்து வதாகவும் அமைந்தது. என்னைப்போலவே நீங்களும் இந்த பலனைக் கண்டு கொள்ளவேண்டும் என்பதற்காகவே இவைகளை உங்களோடு பகிர்ந்து கொள்ளுகிறேன்.***
>
> ***- சகரியா பூணன்***

1) இயேசுவை நேசித்ததைப்போலவே தேவன் நம்மையும் நேசிக்கிறார் :

''பிதாவே, நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களில் அன்பாயிருக்கிறீர்'' (யோவா 17:23) என இயேசு கூறினார்.

நான் வேதாகமத்தில் கண்டுபிடித்த சத்தியங்களில் இந்த சத்தியமே அதிக மேன்மையானது என நான் கூறமுடியும். ஓர் 'பாதுகாப்பற்ற' 'மனமடிந்த' விசுவாசியாயிருந்த என்னை இந்த சத்தியம், தேவனிடத்தில் முழுப்பாதுகாப்பைக் கண்டடையவும், கர்த்தருக்குள் எப்போதும் சந்தோஷமாயிருக்கவும் என்னை மாற்றிவிட்டது! வேதாகமத்தில், ''தேவன் நம்மை நேசிக்கிறார்'' என எடுத்துக் கூற அநேக வசனங்கள் உள்ளன. ஆனாலும் அந்த அன்பின் உச்சகட்டத்தை ''இயேசுவை நேசித்ததைப்போலவே நம்மையும் நேசிக்கிறார்'' என எடுத்துரைப்பது இந்த ஒரே ஒரு வசனம் மாத்திரமே!!

நம் பரலோகப்பிதா தன்னுடைய குமாரர்களை நேசிப்பதில் யாதொருவனுக்கும் பாரபட்சம் காட்டுவதே இல்லை. ஆகவே தன் முதற்பேறான குமாரன் இயேசுவிற்கு செய்ததுபோலவே, நமக்கும் நிச்சயமாய் எல்லா நன்மைகளையும் தவறாமல் செய்வார். ஆம், இயேசுவிற்கு உதவி செய்ததைப்போலவே நமக்கும் உதவி செய்வார்! இயேசுவை பராமரித்து பாதுகாத்ததைப்போலவே நம்மையும் பராமரித்து பாதுகாப்பார்! இயேசுவின் ஜீவியத்தில் ஒவ்வொரு நாளும் நடைபெற வேண்டிய நிகழ்ச்சிகளை திட்டம் தீட்டுவதற்கு பிதா ஆர்வம் கொண்டதைப்

போலவே, நம்முடைய வாழ்க்கையிலும் அவ்விதமே ஆர்வம் கொண்டிருக்கிறார். தேவனை அதிர்ச்சிக்குள்ளாக்கும்படியான 'திடீரென்று' யாதொரு சம்பமும் நமக்கு நடைபெறுவதில்லை. ஏனென்றால், ஒவ்வாரு சம்பவங்களையும் அவர் ஏற்கனவே நமக்காக திட்டம் தீட்டி வைத்துள்ளார்!!

ஆகவே இனியும் நாம் பாதுகாப்பற்றவர்களாய் வாழ்ந்திட அவசியமே இல்லை. ஓர் திட்டமான நோக்கத்தோடு இயேசு இப்பூமிக்கு வந்ததைப்போலவே நாமும் இப்பூமிக்கு அனுப்பப்பட்டிருக்கிறோம்.

இந்த சத்தியங்கள் யாவும் உங்களுக்கும் நிஜமானதுதான்! ஆனால், நீங்கள் விசுவாசித்தால் மாத்திரமே அப்படியாகும்! ஒருவன் தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்காவிட்டால் அவனிடத்தில் தேவன் எந்த கிரியையும் நடப்பிக்கவே மாட்டார்!!

2) நேர்மையான ஜனங்களிடம் தேவன் பிரியமாயிருக்கிறார் :

''அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்'' (1யோா 1:7).

ஒளியில் நடப்பதற்கு முதலாவதாய் இருக்கவேண்டியது, நாம் ஒன்றையும் தேவனிடத்தில் மறைக்காமல் இருக்கவேண்டும். அதாவது, அவரிடத்தில் உள்ளதை உள்ளபடியே எல்லாவற்றையும் சொல்வதாகும்! தேவனை நோக்கிச் செல்வதற்குரிய முதல்படியே நேர்மைதான் என்பதை நான் ஆணித்தரமாய் கண்டிருக்கிறேன். புரட்டிப்பேசும் உண்மையற்றவர்களை தேவன் அருவருக்கிறார். வேறு எவரையும் கடிந்து கொள்ளாத அளவிற்கு மாய்மாலக்காரர்களையே இயேசு அதிகமாய்க் கடிந்து கொண்டார் என்பதை நாம் அறிய வேண்டும்.

நாம் பரிசுத்தமாகவோ அல்லது பூரணமாகவோ இருக்கும்படி முதலாவதாக தேவன் கேட்கவேயில்லை. ஆனால், முதலாவதாக நேர்மையாய் இருக்கும்படியே நம்மிடம் கேட்கிறார்.

இதுவே உண்மையான பரிசுத்தத்தின் ஆரம்பமாகும். இந்த ஊற்றுக் கண்ணிலிருந்துதான் மற்ற அனைத்தும் புரண்டுவர முடியும். நாமனைவருமே மிக எளிதாய் செய்யக்கூடிய ஒன்று இருக்குமென்றால், அது நேர்மையாக இருப்பதுதான்!

ஆகவே எந்தப் பாவத்தையும் உடனடியாக தேவனிடம் அறிக்கை செய்துவிடுங்கள். பாவமான சிந்தைகளுக்கு மழுப்பலான நாகரீகன வார்த்தைகளை சூட்டாதிருங்கள். நீங்கள் உண்மையில் உங்கள் கண்களினால் விபச்சார மயக்க இச்சை கொண்டுவிட்டு, ''நான் தேவனுடைய சிருஷ்டிப்பின் அழகை மாத்திரமே ரசித்தேன்'' என்று கூறாதிருங்கள். அதேபோல் கோபத்தை ''நியாயமான கோபம்'' என்றும் அழைக்காதிருங்கள். இவ்வாறு நேர்மையற்றவர்களாயிருந்தால், நீங்கள் ஒருக்காலும் பாவத்திலிருந்து ஜெயம் பெறவே மாட்டீர்கள். ஆகவே, ஒருபோதும் பாவத்தை ''தவறு'' என்று அழைக்காதிருங்கள். ஏனென்றால் இயேசுவின் இரத்தம் உங்களுடைய எல்லா பாவங்களை மாத்திரமே கழுவமுடியும் அல்லாமல், உங்கள் தவறுகளை அவருடைய இரத்தம் கழுவாது! ஆம், நேர்மையற்ற ஜனங்களை அவர் ஒருக்காலும் கழுவி சுத்திகரிப்பதேயில்லை. ''தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய

மாட்டான்'' (வெளி 22:13). ஆகவே நேர்மையுள்ள ஜனங்களுக்கு மாத்திரமே அவிசேஷத்தில் நம்பிக்கை இருக்கிறது.

மார்க்கத்தலைவர்களான பரிசேயர்களைக்காட்டிலும் வேசிகளும், கள்வர்களும் தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் முதலாவது பிரவேசிப்பார்கள் என இயேசு ''அவர்கள் மீது'' அதிக நம்பிக்கையுடன் ஏன் கூறினார் (மத் 21:31). ஏனென்றால் வேசிகளும், கள்வர்களும், தாங்கள் பரிசுத்தர்போல ஒருக்காலும் பாவனை செய்யவேமாட்டார்கள்என்பது தான்!

இன்று அநேக வாலிபர்கள் ஏன் சபையைவிட்டு நழுவிச்செல்கிறார்கள்? ஏனென்றால் சபையிலுள்ள மற்றவர்கள், தங்களுக்கு பாவத்தைக் குறித்த போராட்டமே இல்லாததுபோல் அந்த வாலிபர்களுக்கு காட்டியதேயாகும். ஆகவே அந்த வாலிபர்களுக்கு ''இந்த பரிசுத்த தூயவான்கள் தங்களுடைய பிரச்சனைகளை ஒருநாளும்புரிந்து கொள்ள மாட்டார்கள்'' என்ற விரக்தி ஏற்பட்டுவிட்டது. நம்முடைய நிலை இப்படி இருக்குமென்றால், தன்னிடத்தில் பாவிகளை ஈர்த்துக்கொண்ட கிறிஸ்துவைப்போல் நாம் இல்லை என்பதே உண்மையாகும்.

3) மிகுந்த மகிழ்ச்சியுடன் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார் :

''உற்சாகமாய் (மிகுந்த மகிழ்ச்சியுடன்) கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்'' (2 கொரி. 9:7).

இதனிமித்தமே, தேவன் மனிதனுக்கு, அவனுடைய மனந்திரும்புதலுக்கு முன்பாகவும், மனம்திரும்பிய பிறகும்... ஏன் பரிசுத்த ஆவியின் நிறைவைப்பெற்ற பின்பும்கூட அவனுக்கு முழு சுயாதீனம் அளித்திருக்கிறார். இவ்வாறு தேவனைப்போலவே நாம் இருப்பவர்களாயிருந்தால், நாமும் மற்றவர்களை ஆளுகை செய்வதற்கோ அல்லது பலவந்தமாய் நிர்பந்தம் செய்வதற்கோ முயற்சிக்காமல் நம்மைவிட அவர்கள் வித்தியாசமாயிருப்பதற்கும், நம்மைவிட வித்தியாசமான கருத்துக்கள் கொள்வதற்கும், அவரவர் ஓட்டத்தின் விகிதப்படி ஆவிக்குரிய வளர்ச்சியடைவதற்கும் சுயாதீனம் கொடுத்திருப்போம்.

எந்த கட்டாயத்திணிப்பும் பிசாசிற்குரியதேயாகும். பரிசுத்த ஆவியானவர் ஜனங்களை ''நிரப்புகிறார்''. ஆனால் பிசாசுகளோ ஜனங்களை ''பிடித்துக்கொள்ளுகிறது''. இங்கே வித்தியாசம் என்னவென்றால், பரிசுத்த ஆவியானவர் ஒருவனை நிரப்பும்போது, அவன் இன்னமும் தான் விரும்பியதைச் செய்வதற்கு முழு சுதந்திரத்தைத் தந்து விடுகிறார். ஆனால் பிசாசுகள் ஜனங்களைப் பிடித்துக் கொண்டால், அவைகள் அவர்களுடைய சுதந்திரத்தை முழுமையாய்ப்பறித்துக்கொண்டு அவர்களை ஆளுகையும் செய்கின்றன.

நாம் தேவனுக்குச் செய்திடும் எந்த ஊழியமாயிருந்தாலும் அவைகள் உற்சாகத்தோடும், மகிழச்சியோடும், சுயாதீனமாய், தானாகவே மனமுவந்து செய்யப்படாவிட்டால் அவையாவும் செத்த கிரியைகள் என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ளவேண்டும். அதேபோல், ஏதோ ஒரு பிரதிநலனைக் கருதியோ அல்லது சம்பளத்தின் அடிப்படையிலோ செய்யப்படும் எவ்வித தேவனுடைய ஊழியமும் செத்த கிரியைகளேயாகும்! மற்றவர்களின் நிர்ப்பந்தத்திற்கு ஆளாகி தேவனுக்கு கொடுக்கும் எந்தப்பணத்திற்கும், தேவனைப் பொருத்த மட்டில் அவை

களுக்கு எந்த மதிப்பும் இல்லவே இல்லை.

கட்டாயத்தின் பேரிலோ அல்லது மனசாட்சியின் உறுத்தலிலிருந்து தப்பிப்பதற்காகவோ செய்யப்படும் ஏராளமான கிரியைகளைக் காட்டிலும், மிகுந்த மகிழ்ச்சியுடன் அவருக்குச் செய்திடும் ஒன்று, அற்பமான தாயிருந்தாலும் அதற்கே தேவன் அதிக மதிப்பு தருகிறார்.

4) இயேசுவை நோக்கிப் பார்ப்பதின் மூலமே பரிசுத்தம் கிட்டுகிறது :

''இயேசுவை நோக்கிப்பார்த்து (Looking unto Jesus) நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் ஓடக்கடவோம்'' (எபி 12:1).

தேவ பக்தியின் இரகசியம் மாம்சத்தில் வெளிப்பட்ட கிறிஸ்து என்றஅந்த நபரில்தான் இருக்கிறதேயல்லாமல், ''கிறிஸ்து நம்முடைய மாம்சத்தில் வெளிப்பட்டார்'' என்ற உபதேசத்தில் இல்லவே இல்லை. இதை 1தீமோ 3:16 மிகத்தெளிவாய் சுட்டிக்காட்டுகிறது. எனவே ''அவர்'' என்ற தனி நபரின் மூலமேயல்லாமல் அவருடைய மாம்சத்தை ஆராய்ந்து கண்டறியும் உபதேசத்தினால் நாம் பரிசுத்தமாவதில்லை.

நாமாக எடுத்துக்கொள்ளும் எந்த சுய-முயற்சியும் (Self-effort) நம்முடைய பாவ இருதயத்தை ஒருக்காலும் பரிசுத்தமாக்கிட முடியாது. அந்த அற்புத மாற்றம் நிகழுவதற்கு தேவன்தான் நமக்குள் கிரியை நடப்பிக்கவேண்டும். பரிசுத்தம் (நித்திய-ஜீவன்) தேவனால் உண்டாகும் ஈவு, அதை கிரியையினால் ஒருக்காலும் அடைந்திட முடியாது (ரோ 6:23). தேவன் மாத்திரமே நம்மை முற்றிலும் பரிசுத்தமாக்க முடியுமென 1தெச 5:23 மிகத்தெளிவாக கூறுகிறது–இந்த வசனத்தை நம்மில் ஒருவரும் தவறு என்று சொல்லிட முடியாதே!! இருப்பினும் இன்று எண்ணற்ற விசுவாசிகள் தாங்கள் பரிசுத்தமாகும் பொருட்டு தங்களைத்தாங்களே வெறுப்பதற்குப் போராடிக்கொண்டிருப்பதைத்தான் நாம் பார்க்கிறோம். அந்தோ, இவர்கள் பரிசுத்தத்தை அடைவதற்குப் பதிலாய் ''பரிசேயர்களாகவே'' மாறிவிடுகிறார்கள்.

எபேசியர் 4:24 குறிப்பிடும் மெய்யான பரிசுத்தம் இயேசுமீது கொண்ட விசுவாசத்தினால்.... அதாவது, ''இயேசுவை நோக்கிப்பார்ப்பதால்'' மாத்திரமே அடைந்திடமுடியும். ஆம், நாம் உபதேசத்தை மாத்திரமே நோக்குபவர்களாயிருந்தால் முடிவில் பரிசேயர்களாகவே முற்றுப்பெறுவோம். இந்நிலையில் நீங்கள் எவ்வளவு தெள்ளத்தெளிவாய் உபதேசங்களைக் கற்றுக்கொண்டீர்களோ அந்தளவிற்கு மிகப்பெரிய பரிசேயர்களாகவே மாறிவிடுவீர்கள். இந்த உலகில் நான் சந்தித்த பரிசேயர்களில் மிகப்பெரிய பரிசேயர்கள் யாரென்றால் ''தங்கள் சுய-முயற்சி மூலமாய் மகா உன்னத பரிசுத்த தரத்தைப் பிரசங்கித்தவர்களேயாவர்'', இவ்வித கதியை நாமும் அடைந்துவிடாதபடி கவனமாயிருக்கக் கடவோம்.

இயேசுவை நோக்கிப்பார்ப்பதின் பொருள் என்ன என்பதை எபிரெயர்.12:2 மிகத்தெளிவாக நமக்கு எடுத்துரைக்கிறது. முதலாவதாக, நாம் அவரை நோக்கிப்பார்த்து ''இந்த பூமியில் ஒவ்வொரு நாளும் சிலுவையை சகித்து வாழ்ந்தவராகவும் நம்மைப்போல எல்லா விதத்திலும் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராகவும்'' காண்பதுதான் (எபி. 4:15). இவ்வாறு அவர் நமக்கு முன்னோடியானவரானபடியால் (எபி. 6:20), இப்போது அவருடைய அடிச்சுவடுகளைப்பின்பற்றி நாமும்

தொடர்ந்து ஓடவேண்டும். இரண்டாவதாக, ''பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறவராகவும்'' நாம் அவரைக் காண வேண்டும். இவ்வாறு, பிதாவின் அருகிலிருந்து நமக்காக வேண்டுதல் செய்யவும், நம்முடைய சோதனைகளிலும் உபத்திரவங்களிலும் நமக்கு உதவி செய்யும்படி அவர் ஆயத்தத்துடனிருக்கிறார்.

5) நாம் பரிசுத்த ஆவியினால் இடைவிடாது நிரப்பப்பட்டிருக்க வேண்டும் :

''ஆவியினால் தொடர்ச்சியாய் நிரப்பப்பட்டு நிறைந்திருங்கள்'' என்பதே எபேசியர் 5:18 ன் சரியான மொழிபெயர்ப்பாகும்.

தேவன் விரும்பும்படியான கிறிஸ்தவ ஜீவியம் செய்வதற்கு, நாம் தொடர்ச்சியாய் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டாலொழிய சாத்தியமாகாது! அதேபோல, நாம் தேவனுக்கு ஊழியம் செய்ய வேண்டிய பிரகாரமாய் ஊழியம் செய்திட ஆவியின் அபிஷேகம் இல்லாமலும், ஆவியின் வரங்களைப் பெறாமலும் சாத்தியமாகாது!! இயேசுவேகூட ஆவியின் அபிஷேகத்தைப்பெறவேண்டியது அவசியமாயிருந்தது. இதை 2 கொரிந்தியர். 3:18 குறிப்பிடும்போது, பரிசுத்த ஆவியானவர் நம்மை, நம்முடைய ஜீவியத்திலும் நம்முடைய ஊழியத்திலும் அவருடைய சாயலுக்கொப்பாய் மறுரூபப்படுத்தும்படிக்கே வந்தார் என கூறுவதைப் பார்க்கிறோம்.

இவ்வாறு தேவன் நம்மை ஆவியினால் நிறைத்து கிறிஸ்துவின் சாயலான அவருடைய சுபாவத்தில் நம்மை மறுரூபப்படுத்தவும், இயேசுவைப்போலவே ஊழியம் செய்வதற்கு நம்மை ஆயத்தப்படுத்தவும் செய்கிறார். இயேசு பெற்ற அதே ஊழியம் நமக்கு இல்லை, ஆகவே அவர் தன்னுடைய ஊழியத்தில் செய்தவைகளை நாமும் செய்திட முடியாது. ஆனால் நாம் இயேசுவைப் போலவே அபிஷேகத்தில் நிறைந்து முழு ஆயத்தத்துடன் "நாம் பெற்ற ஊழியத்தை" நிறைவேற்றிட முடியும். இங்கு நம்பட்சத்தில் தேவையாயிருப்பதெல்லாம் தேவன் எதிர்பார்க்கும் போதுமான தாகமும், விசுவாசமும் இருக்கவேண்டும். அப்போது நம்மூலமாய் ஜீவ தண்ணீர் கொண்ட நதிகள் புரண்டோடிவிடும் *(யோவா 7:37–39)*.

பரிசுத்த ஆவியின் வரங்களில்லாத ஒருசபை, உயிருள்ள ஒரு மனிதன் செவிடும், குருடும், ஊமையும், நொண்டியுமாய் இருப்பதைப்போல் உபயோகமற்றதாகவே இருக்கும்.

6) சிலுவையின் வழியே ஜீவனைக் கண்டடையும் வழி :

''நாம் அவரோடேகூட மரித்தோமானால் அவரோடேகூட பிழைத்துமிருப்போம்'' (2தீமோ 2:11).

நம்முடைய சரீரத்தில் இயேசுவின் வாழ்க்கை (ஜீவன்) வெளிப்படவேண்டுமென்றால், தேவன் ஏற்படுத்தும் எல்லா வாழ்வின் சூழ்நிலைகளிலும் நம் சொந்த ஜீவனில் (சுய–வாழ்க்கையில்) மரணத்தை ஏற்றுக்கொண்டால் மாத்திரமே சாத்தியமாகும் *(2 கொரி 4:10,11)*. நாம் ஜீவன் பெற இதைத்தவிர வேறுவழி இல்லவே இல்லை. ஆகவே, நாம் பாவத்தை ஜெயித்து வாழ வேண்டுமென்றால், எல்லா சூழ்நிலைகளிலும் ''நம்மை பாவத்திற்கு மரித்தவர்களாகவே'' கருதவேண்டும் (ரோ *6:11*). நாம் பரத்தின் உயிரினால் வாழ்ந்திருப்பதற்கு ''நாம் ஆவியினாலே

சரீரத்தின் செய்கைகளை அழித்திட வேண்டும்'' (ரோ 8:13). ஆகவேதான், நம்முடைய ஒவ்வொருநாள் ஜீவியத்திலும் பரிசுத்த ஆவியானவர் நம்மை எப்போதும் சிலுவையண்டை நடத்திச் செல்கிறார்.

இவ்வாறு எல்லா சூழ்நிலைகளுக்குள்ளும் நாம்தேவனால் அனுப்பப்பட்டு அங்கே நாம் ''எந்நேரமும் (ஒவ்வொருநாளும்) கொல்லப்படுகிறோம்'' (ரோ 8:36), அதாவது ''இயேசுவினிமித்தம் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படுகிறோம்'' (2கொரி 4:11). இதுபோன்று ஒவ்வொரு சூழ்நிலைகளிலும் நாம் ''இயேசுவின் மரணத்தை'' (2கொரி4:10) மனப்பூர்வமாய் சுமந்து இயேசுவின் ஜீவனை நம்முடைய சரீரத்தில் விளங்கப்பண்ணவேண்டும்!

7) மனுஷருடைய அபிப்பிராயங்களுக்கு தகுதியான இடம் குப்பைத்தொட்டியே!

''நாசியிலே சுவாசமுள்ள மனுஷனை நம்புவதை விட்டுவிடுங்கள்; (உயர்வாய்) எண்ணப்படுவதற்கு அவன் எம்மாத்திரம்?'' (ஏசா 2:22).

மனுஷனுடைய சுவாசம் அவனுடைய நாசியிலிருந்து எடுபட்டு போனால், நாம் கால் மிதித்து நடக்கும் தூசியைவிட அவன் மேலானவன் அல்ல! ஆகவே மனுஷனுடைய அபிப்பிராயங்களுக்கு நாம் ஏன் மதிப்புத் தரவேண்டும்? உங்களைச் சுற்றியுள்ள எல்லா மனுஷருடைய அபிப்பிராயங்களையும் ஒன்றுதிரட்டினாலும் அவைகள் குப்பைத்தொட்டியில் எறியப்படுவதற்கே பாத்திரமானது என்ற சத்தியத்தில் நாம் வேர் கொண்டு நிலை நிற்கவில்லையென்றால், நாம் ஆண்டவருக்கு ஒருக்காலும் வலிமையாய் ஊழியம் செய்திடவே முடியாது. நாம் ''ஒரே ஒரு மனுஷனைக்கூட'' பிரியப்படுத்துகிறவர்களாய் இருந்தாலும், நாம் கிறிஸ்துவின் ஊழியக்காரர்களாய் ஒருக்காலும் இருந்திடவே முடியாது (கலா 1:10).

தேவனுடைய அபிப்பிராயங்களோடு ஒப்பிடும்போது எந்த மனுஷனுடைய அபிப்பிராயங்களும் ஒன்றுமில்லாத குப்பையேயாகும். இந்த உண்மையை தன் இருதயத்தில் ஆழமாய்ப்பதித்துக் கொண்டவன் தன் ஜீவியத்திலும், ஊழியத்திலும் தேவனுடைய அங்கீகாரம் ஒன்றை மாத்திரமே எப்போதும் தேடுவான்! அவன் யாரையும் கவர்ச்சிக்க ஒருபோதும் நாடமாட்டான்! அல்லது, ஜனங்களுக்கு முன்பாய் தன்னை நியாயப்படுத்துவதையும் ஒருபோதும் நாடவேமாட்டான்!

8) இந்த உலகம் மேன்மையாகக் கருதும் அனைத்தையும்தேவன் அருவருக்கிறார்:

''மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது'' (லூக் 16:15).

இந்த உலகத்தில் மகா மேன்மையாய் எண்ணப்படுபவைகளுக்கு தேவனுடைய பார்வையில் எந்த மதிப்பும் இல்லையென்பது மாத்திரமல்ல... அவைகளை அவர் அருவருக்கவும் செய்கிறார். இவ்வாறு உலகத்திலுள்ள எல்லா மதிப்பும் புகழும் தேவனுக்கு அருவருப்பாயிருக்கிறபடியால், அவைகள் நமக்கும் அருவருப்பாகவேயிருக்கவேண்டும்.

இப்பூமியிலுள்ள ஒவ்வொருவரும் பணத்தை அதிக மதிப்புடையதாய்க் கருதுகிறார்கள். ஆனால் பணத்தை நேசித்து ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் வெகு சீக்கிரத்திலோ அல்லது சற்றுத் தாமதமாகவோ கீழ்காணும் எட்டுவிளைவுகளினால் வேதனையடைவார்கள் என தேவன் கூறினார் (1தீமோ 6:9,10).

1) அவர்கள் சோதனையில் விழுவார்கள்,
2) அவர்கள் கண்ணியில் சிக்குவார்கள்,
3) அவர்கள் மதிகேடான இச்சையில் விழுவார்கள்,
4) அவர்கள் சேதம் விளைவிக்கும் இச்சையில் விழுவார்கள்,
5) அவர்கள் கேடானவைகளில் அமிழ்ந்துபோவார்கள்,
6) அவர்கள் அழிவில் அமிழ்ந்து போவார்கள்,
7) அவர்கள் விசுவாசத்தைவிட்டு வழுவிப்போவார்கள்,
8) அவர்கள் அநேக வேதனைகளினால் தங்களை உருவகுத்திக் கொள்வார்கள்.

மேற்கண்ட இந்த எட்டு அவலங்களும் நான் சென்ற ஒவ்வொரு இடங்களிலும் ஏராளமான விசுவாசிகளுக்குத் திரும்பத்திரும்ப சம்பவித்ததை என் கண்களால் கண்டிருக்கிறேன்.

இன்று நம் தேசத்தில் கர்த்தரிடத்திலிருந்து புறப்பட்டு வரும் தீர்க்கதரிசன வார்த்தைகளுக்கு பஞ்சம் உண்டாயிருப்பதற்கான ஓர் முக்கிய காரணம், ஏராளமான பிரசங்கிகள் பண ஆசை கொண்டவர்களாய் மாறியதுதான். பண விஷயத்தில் உண்மையில்லாதவர்களிடத்தில் தேவன் மெய்யான ஐசுவரியத்தைத் *(தீர்க்கதரிசன வார்த்தையைப் பெறுவது இந்த ஐசுவரியங்களில் ஒன்று)* தரவேமாட்டார் என இயேசு கூறினார் (லூக் *16:11*). இதனிமித்தமே இன்று சபை கூட்டங்களில் ஏராளமான போரடிக்கும் பிரசங்கங்களையும், ஏராளமான போரடிக்கும் சாட்சிகளையும் நாம் கேட்கிறோம்!

9) நமக்கு நாமே தவிர வேறு ஒருவரும் நமக்குத் தீங்கு செய்திடமுடியாது :

''நீங்கள் நன்மையைப் பின்பற்றுகிறவர்களானால், உங்களுக்கு தீமை செய்கிறவன் யார்?'' (1பேதுரு 3:13).

தேவனிடத்தில் அன்பு கூர்ந்து அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களுக்கு *(அதாவது, தங்கள் ஜீவியத்தில் தேவனுடைய சித்தத்திற்குப் புறம்பாக இப்பூமியில் எந்த இலட்சியமும் இல்லாதவர்களுக்கு)* சகலமும் நன்மைக்கு ஏதுவாகவே நடக்கும்படி கிரியை செய்திட, தேவன் சொல்லிமுடியாவல்லமையைப் பெற்றிருக்கிறார் (ரோ *8:28*). இந்த அற்புதமான வாக்குதத்தத்தை, தங்களுக்கென சுய நலநோக்கம் கொண்டவர்கள் ஒருக்காலும் உரிமை பாராட்டவே முடியாது. ஆனால் நம் ஜீவியத்தில்தேவனுடைய சித்தத்தை சம்பூர்ணமாய் ஏற்றுக்கொண்டவர்களாயிருந்தால், இப்பூமியில் நம் ஜீவியத்தின் ஒவ்வொரு நிமிஷமும் இந்த வாக்குதத்தத்தை உரிமை கொண்டாட முடியும்! ஆம், ஒன்றும் நமக்குத் தீங்கிழைக்கவே முடியாது.

நமக்கு மற்றவர்கள்தற்செயலாகவோ அல்லது வேண்டுமென்றொ செய்திடும் எந்த நன்மையானாலும் அல்லது தீமையானாலும் இந்த ரோமர் 8:28 ஆம் வசன வடிகட்டி (FILTER) வழியாய் கடந்துவந்து நமக்கு மிகவும் அருமையாகவே முடிவில் வந்துசேரும்!

இவ்வாறு தேவன் நமக்கென்று திட்டம் தீட்டியுள்ள அதிக நன்மையானவைகளில் ஒன்று என்னவென்றால், ஒவ்வொரு சமயமும் கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாய் நாம் மாறுவதுதான் (ரோ *8:29*). இந்த அருமையான வசனத்தில் சொல்லப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றிடும்

யாவருக்கும் '' இந்த வடிகட்டி'' (Filter) ஒவ்வொரு சமயமும் நேர்த்தியாய் கிரியை நடப்பித்துக் கொண்டேயிருக்கும் !!

இதைக்காட்டிலும் சற்று மேலாக *1பேதுரு 3:13*, ''நாம் நன்மை செய்கிறவர்களாய் இருந்தால்'' ஒரு மனிதனும் நமக்கு தீங்கு செய்திட முடியாது என மிக நேர்த்தியாய் கூறுகிறது. துரதிருஷ்டவசமாய் இன்று ரோமர் *8:28* அறியப்பட்டிருப்பதுபோல் இந்த அருமையான வசனத்தை அநேகர் அறியாதிருக்கிறார்கள். இனிவரும் நாட்களிலாவது இந்த வசனத்தின் மேன்மையை நாம் உயர்த்திக் காட்டிடக்கடவோம். இருப்பினும் இந்த வாக்குதத்தமோ, தங்கள் இருதயங்களை எல்லா ஜனங்களிடத்திலும் நன்மை நிறைந்ததாய் காத்துக்கொண்டவர்களுக்கு மாத்திரமே சொந்தமானதாகும். இதுபோன்ற ஒரு விசுவாசிக்கு எந்த பிசாசோ அல்லது எந்த மனுஷனோ தீமை செய்வதென்பது ஒருக்காலும் கூடாத காரியம்!

ஆகவே, ''மற்றவர்கள் எனக்குத் தீங்கு செய்துவிட்டார்கள்'' என எந்த ஒரு கிறிஸ்தவன் குறை கூறுகிறானோ, அப்போதெல்லாம் அவன் மறைமுகமாய் ஒத்துக்கொள்வதுயாதெனில் ''நான் தேவனில் அன்பு கூரவில்லை! நான் தேவனுடைய தீர்மானத்தின்படி அழைக்கப்படவில்லை! நான் நன்மை செய்ய தீவிரம் கொண்டவனல்ல!'' என்ற அறிக்கையேயாகும். இப்படியில்லாதிருந்தால், அவனுக்கு மற்றவர்கள் எதைச் செய்திருந்தாலும் அவனுடைய நன்மைக்காகவன்றோ கிரியை நடந்திருக்கும்! அவ்வாறு சகலமும் நன்மையாய் நடந்திருந்தால் அவனிடத்தில் யாதொரு குறைசொல்லும் உண்டாயிருக்காதல்லவா!!

உண்மையில் உங்களுக்குத் தீமை செய்யக்கூடிய ஒரே நபர் நீங்கள் மாத்திரமே! நீங்கள் மற்றவர்களிடத்தில் உண்மையற்றவர்களாய் நடந்து கொண்டதும், மற்றவர்கள் மீது தவறான மனப்பான்மை கொண்டதுமே உங்களுக்கு நீங்களே செய்துகொண்ட தீமையாகும்.

58 வயது நிரம்பிய நான் நேர்மையாய்ச் சொல்லும் சாட்சி என்னவெனில் ''என் முழு ஜீவியத்திலும், ஒருவர்கூட எனக்குத் தீமைசெய்வதில் ஜெயம்பெறமுடியவில்லை''. அநேகர் முயற்சித்தார்கள் என்பது உண்மை... ஆனால், அவைகள் அனைத்தும் என்னுடைய நன்மைக்காகவும், என் ஊழிய நன்மைக்காகவும் மாத்திரமே கிரியை நடப்பித்தன! ஆகவே, நான் அதுபோன்ற ஜனங்களுக்காகவும் தேவனை ஸ்தோத்தரிக்க என்னால் முடிகிறது. எனக்கு எதிர்ப்பாய் தீமை செய்யும் படி முயற்சித்தவர்களில் பெரும்பாலானோர் தேவனுடைய வழிகளை அறியாத ''விசுவாசிகள்'' என பெயர் கொண்டவர்கள்தான்! இந்த என் சாட்சியை நான் சொல்வதற்கு காரணம், உங்களை உற்சாகப்படுத்தி, நான் பெற்ற சாட்சி உங்களுடையதாகவும் எப்போதும் இருக்கமுடியும் என்பதை நீங்கள் விசுவாசிக்கும் படிக்கேயாகும்!!

(இதன் தொடர்ச்சி அடுத்த பக்கம்)

5

நான் கற்ற 16 – முக்கிய சத்தியங்கள் !

.... தொடர்ச்சி

10) நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் ஓர் நிறைவான திட்டத்தை தேவன் வைத்திருக்கிறார் :

''நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் (முன்கூட்டியே) சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய செய்கையாயிருக் கிறோம் ; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்'' (எபே 2:10).

பல வருடங்களுக்கு ம்ன்பாகவே நம்மை கிறிஸ்துவுக்குள் தேவன் தெரிந்து கொண்டபோது இப்பூமிக்குரிய வாழ்க்கையில் நாம் என்ன செய்யவேண்டுமென்பதை வரையறை செய்து வைத்து விட்டார். இப்போது நம்முடைய கடமை என்னவென்றால், அந்த தேவனுடைய திட்டத்தை ஒவ்வொரு நாளும் கண்டுபிடித்து அதன்படி பின்பற்றி நடப்பதுதான்! தேவனுடைய திட்டத்தைக்காட்டிலும் மேலான திட்டத்தை நாம் நமக்கென்று ஒருக்காலும் வரையறுக்கவே முடியாது!!

தேவன் தன்னுடைய ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் வித்தியாசமான திட்டங்களை வைத்திருக்கிறபடியால், மற்றவர் கள் செய்வதைப்போலவே நாமும் அப்படியே செய்வதற்கு முயலவே கூடாது!

உதாரணமாய், யோசேப்பைக்குறித்து தேவன் கொண்டிருந்த திட்டம், ''அவன் எகிப்தின் அரண்மனையில் தங்கியிருந்து, தன்னுடைய ஜீவியத் தின் பின்பகுதியான எண்பது ஆண்டுகள் மிகுந்த வசதியுடன் வாழ வேண்டுமென்பதாயிருந்தது'' . இப்படியிருக்க, யோசேப்பின் மாதிரியை மோசே பின்பற்றி வசதியையும், ஆடம்பரத்தையும் விரும்பி யிருந்தால்... அவனுடைய சொந்தவாழ்க்கைக்குரிய தேவனுடைய சித்தத்தை நிச்சயமாய் இழந்திருப்பான்!

இன்றும் அதைப்போலவே, ஒரு சகோதரன் தன் ஜீவிய கால மெல்லாம் அமெரிக்க தேசத்தில் வசதியுடன் வாழ தேவன் விரும்பி

யிருக்கக்கூடும். ஆனால் இன்னொரு சகோதரனையோ தன் ஜீவ கால மெல்லாம் வட இந்தியாவின் உஷ்ணத்திலும் தூசியிலும் உழன்று வாழும்படி அவர் வைத்திருக்கக் கூடும். இந்த இருவருமே, தேவன் தங்களுடைய வாழ்க்கையில் கொண்டிருக்கும் திட்டத்தை அறிந்தவர் களாய் திருப்தியுடன் இருக்கவேண்டுமேயல்லாமல் ஒருவரை யொருவர் ஒப்பிட்டுப்பார்த்து பொறாமைப் படவோ அல்லது குறை கூறவோ கூடாது! இந்திய தேசத்தில் நான் ஊழியம் செய்யும்படி தேவன் என்னை அழைத்திருக்கிறார் என்பதை நன்கு அறிவேன். ஆனால் என்னைப் போன்ற அழைப்பை மற்றவர்களும் பெற்றிருக்க வேண்டு மென நான் ஒருவரையும் வற்புறுத்தியதே இல்லை.

இருப்பினும், நாம் நம்முடைய சுய கனத்தைத் தேடினாலோ அல்லது பணத்தை நேசித்தாலோ அல்லது சொகுசு வாழ்க்கையை விரும்பினாலோ அல்லது மனுஷர்களுடைய அங்கீகாரத்தை நாடினாலோ, நாம் ஒருக்காலும் தேவன் நமக்கென்று வைத்திருக்கும் அவரது திட்டத்தைக் கண்டுபிடிக்கவே முடியாது!

11) தேவனை அந்நியோந்நியமாய் அறிந்திருப்பதே வலிமையான ஜீவியத்தின் இரகசியமாகும் :

''தங்கள் தேவனை அறிந்திருக்கிற ஜனங்கள் திடங்கொண்டிருப்பார்கள்'' (தானி 11:32).

இரண்டாவதாக கைமாற்றுவதுபோல் (Second Hand) பிறர் மூலமாய் நாம் தேவனை அறிந்து கொள்வதை தேவன் விரும்புவதே யில்லை. ஒரு புதிதான இளைய விசுவாசிகூட தன்னைத் தனிப்பட்ட முறையில் அறிந்து கொள்ளும்படியே தேவன் அவனை அழைக்கிறார் (*எபி 8:11*). தேவனையும் இயேசு கிறிஸ்துவையும் தனிப்பட்ட விதத்தில் ஒருவன் அறிந்து கொள்வதே நித்திய ஜீவன் என்று இயேசு விளக்கினார். இதுவே பவுலின் வாழ்க்கையில் தீராத ஏக்கமாயிருந்தது! அது போலவே, நமக்கும் தேவனை அறிகிற அறிவு தீராத ஏக்கமாய் நமக்குள் இருந்திட வேண்டும் (*பிலி 3:10*).

தேவனை தீர்க்கமாய் அறிந்திட வாஞ்சை கொண்டவன், எப்போதும் அவர் சொல்வதைக் கவனிக்க தீவிரம் கொண்டவனா யிருக்கவேண்டும். ஒரு மனிதன் தன்னை ஆவிக்குரிய ஜீவனோடு காத்துக்கொள்வதற்கு ஒரே வழி ''தேவனுடைய வாயிலிருந்து புறப்படும்'' ஒவ்வொரு வார்த்தையையும் கவனித்துக்கேட்பதுதான்! நம் கிறிஸ்தவ வாழ்க்கையில் அவருடைய பாதத்தில் அமர்ந்து அவர் கூறுவதை கவனித்துக்கேட்பதே மிக முக்கியமானதென்று இயேசு லூக்கா *10:42*–ல் கூறினார்.

இயேசு ஒவ்வொரு நாள் காலையிலும் தன் பிதா சொல்வதைக் கவனித்துக்கேட்கும் பழக்கம் வைத்திருந்ததைப்போலவே, நாமும் அந்தப் பழக்கத்தை வளர்த்துக் கொள்ளவேண்டும்! (*ஏசா 50:4*). காலையில் மாத்திரம் அல்லாமல்.... அந்தப் பகல் முழுவதும்... நாம் தூங்கும் இரவு நேரங்களிலும் அவ்விதமே இருப்போமென்றால், ஆண்டவர் இரவிலும் நம்மை அதேபோல் கவனிக்கும் மனதுடைய வர்களாகச் செய்வார். நாம் எழும்பினாலும், ''கர்த்தாவே சொல்லும் உமதடியான் கேட்கிறேன்'' என கூறிடமுடியும் (*1 சாமு 3:10*).

நாம் தேவனை நெருக்கமாய் அறிந்திருப்பதுதான், நம்மை எல்லா சூழ்நிலைகளிலும் ஜெயம்பெற்றவர்களாய் மாற்றிவிடும்! ஏனென்றால், நாம் சந்திக்கும் ஒவ்வொரு பிரச்சனைகளுக்கும் தேவனிடத்தில் விடை உண்டு! நாம் அவரை கவனித்துக்கேட்டால் அந்த விடையை அவர் நமக்கு நிச்சயமாய் சொல்லுவார்!!

12) புதிய உடன்படிக்கை பழைய உடன்படிக்கையைவிட மகாமேன்மை நிறைந்ததாகும்.

"இயேசுவோ விசேஷித்த உடன்படிக்கைக்கு மத்தியஸ்தராயிருக்கிறார்" (எபி 8:6).

இன்று அநேக கிறிஸ்தவர்கள், பழைய உடன்படிக்கைக்கும் புதிய உடன்படிக்கைக்கும் அடிப்படை பூர்வமாய் வித்தியாசம் இருப்பதை இன்னமும் அறிந்து கொள்ளவில்லை (எபி 8:8-12). மோசேயைக் காட்டிலும் எவ்வாறு இயேசு மேலானவரோ அதைப்போலவே பழைய உடன்படிக்கையை காட்டிலும் புதிய உடன்படிக்கை மேலானதாகும் (2 கொரி 3, எபி 3). பழைய உடன்படிக்கையானது, தன்னுடைய நியாயத்தீர்ப்பின் பயத்தின் மூலமாகவோ அல்லது வாக்குதத்தத்தின் ஆசீர்வாதத்தின் மூலமாகவோ ஒருவனுடைய வெளியரங்க வாழ்க்கை யை மாத்திரமே சுத்திகரிக்க முடிந்தது. ஆனால் புதிய உடன்படிக்கையோ நம்முடைய உள்ளான அந்தரங்க ஜீவியம் முழுவதையும் மாற்றுவதாயிருக்கிறது. இந்த மாற்றம் அச்சுறுத்தல் மூலமோ அல்லது ஆசீர்வாத வாக்குதத்தங்கள் மூலமோ நடைபெறாமல்,பரிசுத்த ஆவியின் மூலமாகவே நடைபெறுகிறது. இந்த மாற்றம், பூரண தூய்மையும் அன்பும் நிறைந்த கிறிஸ்துவின் சுபாவத்தையே நமக்குத் தருகிறது!!

ஒரு பன்றியை சங்கிலியில் கட்டி (நியாயப்பிரமாணத்தின் தண்டனை என்ற பயத்தினால் கட்டி) அதைப்பிடித்து இழுத்து தூய்மையாய் காப்பதற்கும், ஒரு பூனை தன்னுடைய உள்ளான சுபாவத்தினிமித்தம் தன்னைத்தானே தூய்மையாய்க் காத்துக்கொள்வதற்கும் ஏராளமான வித்தியாசங்கள் உண்டு. இந்த உதாரணத்தைப் போலவே, பழைய புதிய உடன்படிக்கையின் வித்தியாசம் இருக்கிறது!

13) நாம் மனுஷரால் புறக்கணிக்கப்பட்டு துன்புறுத்தப்படுவதற்கே அழைக்கப்பட்டிருக்கிறோம்.

"கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" (2தீமோ 3:12).

இயேசு தன்னுடைய சீஷர்களிடத்தில் கூறும்போது, இந்த உலகத்தில் அவர்கள் துன்பத்தை சந்திக்கவேண்டுமென்பதை திட்டமாய் கூறினார் (யோ 16:33). எனவேதான் அவர் பிதாவினிடத்தில் தன் சீஷர்களுக்காக ஜெபிக்கும்போது, "நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக் கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளவில்லை" என்றே ஜெபித்தார் (யோ 17:15). மேலும் அப்போஸ்தலர்கள் தங்களுடைய விசுவாசிகளுக்குப் போதிக்கும்போது "அநேக உபத்திரவங்களின் வழியாய்த்தான் அவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்கமுடியும்" என கூறினார்கள் (அப் 14:22).

மேலும் இயேசு கூறும்போது, "வீட்டு எஜமானையே "பெயர்

செபூல்'' எனக் கூறியிருந்தால், அவன் வீட்டாரை அப்படிச் சொல்வது அதிக நிச்சயமல்லவா?'' எனக் கூறினார் (மத் 10:25). பார்த்தீர்களா, இந்த அடையாளங்களை (நிந்தைகளை) வைத்துதான் நாம் அவருடைய உண்மையுள்ள வீட்டாராய் இருக்கிறோமா அல்லது இல்லையா என்பதை அறிந்து கொள்ள முடியும். என்னுடைய ஜீவிய காலத்தில் எத்தனையோ விசுவாசிகள் என்னை ''பிசாசு'' ''பிசாசின்மகன்'' ''அசுத்தாவி பிடித்தவன்'' ''அந்தி கிறிஸ்து'' ''வஞ்சிப்பவன்'' ''பயங்கரவாதி'' ''கொலை பாதகன்'' ''தியோத்திரேப்பு'' என் றெல்லாம் கூறி அழைத்திருக்கிறார்கள். இவ்வாறு நாம் இயேசுவின் வீட்டாராய் இனம் கண்டு சுட்டிக்காட்டப்படுவது நமக்கு கிடைத்த மிகப்பெரும் பாக்கியமேயாகும்! இன்று யாரெல்லாம் ஆண்டவருக்கு உத்தமமாய் ஊழியம் செய்கிறார்களோ அவர்கள் யாவருக்குமே இந்த நிந்தை அனுபவம் நிச்சயம் கிட்டியிருக்கும்!!

ஒரு மெய்யான தீர்க்கதரிசி தன் ''சொந்த இனத்தாரால்'' ஒருபோதும் கனம் அடையமாட்டான் என்று இயேசு கூறினார் (மாற் 6:4). எந்தவொரு மெய்யான தீர்க்கதரிசியும் அவனுடைய சொந்த இனத்தாரால் புறக்கணிக்கப்பட்டு கனவீனமும் அடைவான். இதைப் போலவே ஒரு மெய்யான அப்போஸ்தலனும் ''தூஷிக்கப்பட்டு... உலகத்தின் குப்பையைப்போலவும் எல்லாரும் துடைத்துப்போடுகிற அழுக்கைப்போலவும்... கருதப்படுவார்கள்'' என பவுல் கூறினார் (1கொரி 4:13).

துன்புறுத்தப்படுவதும், புறக்கணிக்கப்படுவதும்; எத்தனையோ வல்லமையான தேவனுடைய ஊழியர்களுக்கு தேவன்நியமித்த பங்காகவே இருக்கிறது!

இன்று, ''சபையானது மகா உபத்திரவ காலத்திற்கு முன்பாக எடுத்துக்கொள்ளப்படும்'' என்ற போதனை மிக பிரபல்யமாய்காணப் படுகிறது. இவ்வித போதனை ஏராளமான விசுவாசிகளின் மாம்சத் திற்கு ஆறுதலாய் இருக்கிறபடியால் இப்போதனையை மனமுவந்து ஏற்றுக்கொள்ளுகிறார்கள். ஆனால் இயேசுவோ மிகத்தெளிவாக மத்தேயு 24:29-31 வசனங்களில், மகா உபத்திரவரம் முடிந்த பின்புதான் தன்னால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை எடுத்துக்கொள்ளும்படி இயேசு திரும்ப வருவார் எனக்கூறினார். இந்த இயேசுவின் வசனங் களை ஒரு சிறுபிள்ளைகூட நன்றாய் விளங்கிக் கொள்ளமுடியுமே!

புதிய ஏற்பாட்டின் முழுபகுதியிலும், ஒரு வசனம்கூட சபையானது ''மகா உபத்திரவத்திற்குத் தப்பித்து எடுத்துக்கொள்ளப் படும்'' என போதிக்கவே இல்லை! ஆனால் வேத வசனத்திற்கு வேற்றுமையான இந்தப்போதகம், சுமார் 1800-ஆம் ஆண்டில் இங்கிலாந்து தேசத்தில் சில மனிதர்களால் ஏற்படுத்தப்பட்டதேயாகும்.

நாமோ நம் தேசத்திலுள்ள சபையை வரப்போகும் உபத்திரவத் திற்கு இப்போதே ஆயத்தம் செய்கிறவர்களாய் இருக்கவேண்டும்!

14) தேவன் ஏற்றுக்கொண்ட யாவரையும் நாமும் மனமுவந்து ஏற்றுக் கொள்ளவேண்டும் :

''தேவன் தமது சித்தத்தின்படி அவயவங்கள் ஒவ்வொன்றையும்

சரீரத்திலே வைத்தார்... சரீரத்திலே பிரிவினை உண்டாயிராதபடிக்கு இவ்வாறு அமைத்திருக்கிறார்'' (1கொரி 12:18,25).

வெவ்வேறான நாடுகளில் வெவ்வேறான காலத்தில் ''தனக்கென தூய்மையுள்ள சாட்சியை எழுப்பும்படி'' தேவன் மனுஷர்களைத் தெரிந்து கொண்டிருக்கிறார். ஆனால் இந்த தேவ மனிதர்கள் மரித்தபின்போ அவர்களைப் பின்பற்றி வந்தவர்கள் தங்கள் குழுவை மார்க்கக்கண்மூடித்தனம் (Cultisitc) கொண்டதும், விசேஷித்த தனிக் குழுவாயும் மாற்றிவிட்டார்கள்!

ஆனால் கிறிஸ்துவின் சரீரமோ எந்தவொரு குழுவைக்காட்டிலும் விசாலம் கொண்டதாகும்! இதை நாம் ஒருபோதும் மறக்கவே கூடாது. ஆகவே 'கிறிஸ்துவின் மணவாட்டி' இன்று நாம் காணும் எத்தனையோ பல குழுக்களிலும் படர்ந்து காணப்பட முடியும்.

எனவேதான், ஆண்டவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் என நாம் அறியும் யாவரிடமும் நாம் ஐக்கியம் கொள்ள நாடவேண்டும். இவர்களில் அநேகர் சில வேத வசனங்களுக்கு மாறுபாடான வியாக்கியானம் கொண்டிருக்கிறபடியால், அவர்களோடு சேர்ந்து நாம் ஊழியம் செய்திட முடியாதவர்களாய் இருக்கக் கூடும். இருப்பினும் ஆண்டவர் அவர்களை ஏற்றுக்கொண்டிருப்பதை நாம் அறிவதினிமித்தமாய் அவர்களோடு ஐக்கியம்கொள்ள நாட வேண்டும்!

15) எந்த மனிதனையும் கனத்தோடு நடத்தவேண்டும் :

''நம் நாவினாலே தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷனை சபிக்கிறோம்.... என் சகோதரரே இப்படி இருக்கலாகாது'' (யாக் 3:9,10).

ஒரு மனிதனிடதில் நாம் பேசும் வார்த்தையோ அல்லது செயலோ அவனுடைய மதிப்பைக் குறைப்பதாயிருந்தால், அந்த வார்த்தையும், செய்கையும் தேவனிடத்திலிருந்து உண்டானதல்ல! பிறரை அற்பமாய் எண்ணி தரம் குறையச் செய்வதை எப்போதும் சாத்தானே நாடுகிறான்!! ஆனால் நாமோ ''யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும்'' பேசும்படியே கட்டளையிடப்பட்டிருக்கிறோம் (1பேது 3:15). அவர்கள் நம்முடைய மனைவியாகவோ அல்லது நம்முடைய பிள்ளைகளாகவா அல்லது வயது குறைந்தவர்களாகவோ அல்லது பிச்சைக்காரர்களாகவோ அல்லது சத்துருக்களாகவோ... ஆகிய யாவரிடத்திலும் நாம் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் பேசக் கற்றுக் கொள்ள வேண்டும்.

இவ்வாறாக எல்லா மனுஷரையும் நாம் மிகுந்த கனத்துடன் நடத்தவேண்டும். உதாரணமாய் ஒரு ஏழை சகோதரனுக்கு ஏதாகிலும் அன்பளிப்புக்கொடுத்தால் அதைக் கொடுக்கும்போது, ஒரு மனிதனாயிருக்கும் அவனுடைய கனத்தைப் பறித்துக்கொள்ளாமல் கொடுத்திட வேண்டும். அந்த ஏழை சகோதரனுக்கு நாம் கொடுப்பது ஒரு 'தர்ம பிரபு' கொடுப்பதைப்போல் கொடுக்காமல் அவனுடைய சகோதரனாய் நம்மைப் பாவித்தே கொடுத்திடவேண்டும்!

16) நம்முடைய பொருளாதார தேவைகளை தேவனிடம் மாத்திரமே தெரியப்படுத்தவேண்டும் :

''தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி நம் குறைவை யெல்லாம் கிறிஸ்து இயேசுவிற்குள் மகிமையிலே நிறைவாக்குவார்'' (பிலி 4:19).

முழுநேர கிறிஸ்தவ ஊழியர்கள் தங்கள் எல்லாப் பொருளாதார தேவைகளுக்கும் தேவனையே நம்பியிருக்க வேண்டும். மேலும் அவ்வித தேவைகளை தேவனாகிய கர்த்தர் ஒருவருக்கு மாத்திரமே தெரியப் படுத்தவேண்டும்! காரியம் இவ்வாறு செம்மையாய் நடத்துவிட்டால் அவர்களுடைய தேவையை சந்திக்கும்படி தேவன் தன்னுடைய பிள்ளைகளை ஏவிவிடுவார். இதற்கு மாறாக, முழுநேர ஊழியர்கள் ''தேவனிடத்தில் விசுவாசமாயிருந்து மற்ற விசுவாசிகளிடத்தில் அறிக்கை சமர்ப்பித்து'' ஒருக்காலும் பிழைத்திடக்கூடாது. துரதிருஷ்ட வசமாய் இந்த அவல நிலையில்தான் எண்ணற்ற முழுநேர ஊழியர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

''சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்கு சுவிசேஷத்தினாலே பிழைப்புண்டாகுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார்'' (1கொரி 9:14). ஆகவே, ஆண்டவருக்கு முழுநேர ஊழியம் செய்பவர் கள் மற்ற விசுவாசிகளிடமிருந்து அன்பளிப்புகள் பெறுவதற்கு அனு மதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் முழுநேர கிறிஸ்தவ ஊழியர்கள் ஒருபோதும் சம்பளம் வாங்கவே கூடாது! அன்பளிப்பிற்கும் சம்பளத் திற்கும் ஏராளமான வித்தியாசங்கள் உண்டு. அன்பளிப்புகளை உரிமை யோடு எதிர்பார்த்திட முடியாது... ஆனால் சம்பளத்தை உரிமையுடன் எதிர்பார்த்திடமுடியும்!! இன்று ஏராளமான கிறிஸ்தவ ஸ்தாபனங்களும் அதன் கலாச்சாலைகளும் பின்மாற்ற நிலைக்குள் இருப்பதற்கு ''இந்த சம்பள அடிப்படையே'' காரணமாகும்.

முழுநேர ஊழியர்கள் அன்பளிப்புகள் வாங்கலாம் என்று இருந் தாலும், அவர்கள் தங்கள் தனிப்பட்ட அல்லது குடும்ப உபயோகத் திற்காக தங்களைக்காட்டிலும் ஏழ்மையான ஜனங்களிடமிருந்து ஒருக் காலும் அன்பளிப்புகள் பெறக்கூடாது. அப்படியே அவர்கள் நமக்கு கொடுத்துவிட்டாலும், அவர்களைக் காட்டிலும் ஏழையான ஜனங் களுக்கு அந்த பணத்தைக் கொடுத்துவிடவோ அல்லது ஆண்ட வருடைய ஊழியத்திற்கென அந்தப்பணத்தை காணிக்கைப்பெட்டியில் போட்டுவிடவோ வேண்டும்!

பண விஷயத்தைக் குறித்த கீழ்காணும் ''பத்து கட்டளைகளை'' எல்லா முழுநேர கிறிஸ்தவ ஊழியர்களும் கவனத்துடன் பின்பற்றி விட்டால் ஆண்டவருடைய நாமம் எப்போதும் அவர்கள் மூலமாய் மகிமைப்படுவதாயிருக்கும் :

1) ஒருபோதும் உங்கள் பொருளாதார தேவைகளை தேவன் ஒருவருக்கு மாத்திரமே அல்லாமல், எந்த மனிதனுக்கும் தெரியப் படுத்தாதீர்கள்! (பிலி 4:19).

2) ஒருபோதும் அவிசுவாசிகளின் பணத்தை ஏற்றுக் கொள்ளாதீர்கள் (1யோ 7).

3) ஒருபோதும் எவ்வித அன்பளிப்பையும் எந்த மனிதனி டத்திலும் எதிர்பார்க்காதீர்கள் (சங் 62:5).

4) ஒருபோதும் பிறருடைய பணம் உங்களைக் கட்டுப்படுத்தி அல்லது உங்கள் ஊழியத்தை பாதிக்கும்படி அனுமதிக்காதீர்கள்.

5) ஒருபோதும் உங்கள் ஊழியத்தை அங்கிகரிக்காதவர்களிடத்தில் பணத்தை ஏற்றுக்கொள்ளாதீர்கள்.

6) ஒருபோதும் உங்களைவிட ஏழ்மையானவர்களிடமிருந்து உங்கள் சொந்த அல்லது குடும்ப தேவைகளுக்காக பணத்தை ஏற்றுக் கொள்ளாதீர்கள்.

7) ஒருபோதும் உங்கள் பொருளாதார தேவைகளுக்காக எந்த மனிதனையும் சார்ந்து கொள்ளாதீர்கள்.

8) ஒருபோதும் நீங்கள் தேவனுடைய பணத்தைக் கையாளும் விதம் பிறர் உங்களைசந்தேகப்பட்டு குற்றப்படுத்துவதற்கு ஏதுண்டாக இடம் தராதீர்கள் (2கொரி 8:20,21).

9) ஒருபோதும் நீங்கள் அன்பளிப்பாய் பணம் பெற்றஉடன் பரவசமடையாதீர்கள்.

10) ஒருபோதும் நீங்கள் பணத்தை இழக்கும் நேரத்தில் சோர்வு அடையாதீர்கள்.

நான் மேற்கூறிய 16–சத்தியங்கள் உங்களை உற்சாகப்படுத்துவது மாத்திரமல்லாமல் ஒரு மாபெரும் விடுதலையை உங்களுக்குத் தந்திருக்கும் என்றே நான் நம்புகிறேன். நீங்கள் ஆண்டவரோடு நடப்பதிலும் உங்கள் ஊழியத்திலும் ''சீரியஸாய்'' இருப்பவராயிருந்தால், தயவுசெய்து இந்த சத்தியங்கள் யாவையும் உங்கள் அனுதின வாழ்க்கையில் மிகவும் கவனமாய் கைக்கொண்டு வாழ்ந்து விடுங்கள்.

– சகரியாபூணன்

பிதாவே உம் நாமம் மகிமைப்படுவதாக!

''பிதாவின் நாமம் மகிமைப்படவேண்டும்!'' என்பதே இயேசுவின் தீராத வாஞ்சையாய் எப்போதும் இருந்தது (யோ 12:28). இதுவே இப்போது நம்முடைய வாஞ்சையாகவும் இருந்திட வேண்டும். இவ்வாறு பிதாவின் நாமத்தை எக்காலத்தும் மகிமைப்படுத்தி வாழ்ந்திட ''ஓர் விலைக்கிரயம்'' உள்ளதே? யாரெல்லாம் ''என்ன விலைக்கிரயம் ஆனாலும் அதைச் செலுத்த ஆயத்தம்!'' என துணிகிறார்களோ அவர்கள் மாத்திரமே தங்கள் ஜீவியத்திலம் ஊழியத்திலும் பிதாவின் நாமத்தை இப்பூமியில் மகிமைப்படுத்தி வாழ்ந்திட முடியும்.

''விலைக்கிரயம் செலுத்தவேண்டுமே!'' என மாம்சீக அரைகுறை மனதுகொண்ட கிறிஸ்தவர்கள் எண்ணலாம். ஆனால் இரகசியம் யாதெனில், ஆண்டவருடைய அனுமதியில்லாமல் நம் வாழ்வில் எந்த சம்பவமும் நடைபெறாது என்பதை அவரின் உத்தம சீஷர்கள் நன்கு அறிவார்கள். ''கிரயம் செலுத்தாமல்'' நொறுங்குண்டு ஜீவிக்க முடியாது என்பதையும் இந்த சீஷர்கள் அறிவார்கள். நாம் பிறரை ஆசீர்வதிக்க வேண்டுமென்றால், அதற்கு ஒரே ஒரு வழி மாத்திரமே உண்டு....... அது, இந்த ஒப்பற்ற நொறுங்குண்ட ஜீவியம்தான்!!

''நொறுங்குண்ட ஜீவியம்'' என்பதை தேவனுடைய வார்த்தையில் காண்பதென்பது வேறு .... மெய்யாகவே ''நொறுங்குண்டு'' அவரை அறிவதென்பது வேறு! தேவனுடைய இருதயத்தை இயேசு நன்கு அறிந்திருந்தபடியால்தான், நளதப் பெட்டியை ''உடைத்து'' நற்கந்த வாசனை பரப்பிய அந்தப் பாவியாகிய ஸ்திரீயை மனமுவந்து ஏற்றுக் கொண்டார்! ஆனால், மோசேயின் பிரமாணத்தின்படி அந்தப் பாவியாகிய ஸ்திரீ இயேசுவைத் தொடுவது தவறுதான். அதேசமயம், தேவனின் இருதயமோ அவளின் ''நொறுங்குண்ட'' நிலையை ஏற்றுக்கொண்டது! ஆ , இது ஆச்சரியம்!!

– A. பரிசுத்தம்

தேவையான ஒன்று, தாழ்மையே!

தேவையானது ஒன்றே! மரியாள் தன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துக் கொண்டாள்!! எப்படி?

இயேசுவின் பாதத்தில் அமர்ந்து, அவரையே நோக்கி பார்த்து, அவருடைய வார்த்தையைக் கேட்டு அந்த நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள்.

இயேசு தன் போதகத்தில் ''என்னிடத்தில் வந்து கற்றுக் கொள்ளுங்கள்'' என ஒரே ஒருதடவை மாத்திரமே கூறினார். அது என்ன? ''நான் சாந்தமும், மனத் தாழ்மையுமாயிருக்கிறேன்'' *(மத் 11:29)* என்பதே அந்த ''ஒரே'' பாடம்.

ஆம்! இயேசுகிறிஸ்துவின் மனத்தாழ்மையே, அவரில் காணப்பட்ட சாந்தமே, கிறிஸ்துவுக்கு வாழ்வாயிருந்தது. இந்த தாழ்மையே தேவையான ஒன்று! அதை புத்தகங்கள் படித்து கற்றுக் கொள்ள எத்தனிப்பது பயனளிக்காது..... இயேசுவிடம் சென்றே கற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில் ''தாழ்மையின் செய்தி'' எனக்கு முன்பே தெரியும் எனக் கூறிக் கொண்டு இன்னமும் பெருமையில் வாழும் கிறிஸ்தவர்கள் ஏராளம்!

தான் பிரசிங்கிக்க வேண்டும் என்பதற்காக மரியாள் தாழ்மையை கற்றுக் கொள்ள இயேசுவின் பாதத்தில் அமரவில்லை! மாறாக ''தன்னை விட்டு எடுபடாத'' அதாவது தன்னோடு பங்காகிவிடும் தாழ்மையை அடைவதற்கே இயேசுவின் பாதத்தில் அமர்ந்தாள்!

அந்த ''நல்ல பங்கை'' இறுதியில் பெற்றுக் கொண்டாள்!!

இந்த மரியாள் சென்ற வழியே நாம் செல்ல வேண்டிய நல்ல வழி!!

– S. மார்டின் ராஜசேகரன்

6

''ஒளிமய மணவாழ்க்கை !''

(A GOOD FAMILY)

ஒரு கிறிஸ்தவ குடும்பம் ''மிகவும் நல்லதாய்'' அமைய வேண்டும் என்பதே தேவன் திருமண வாழ்க்கையைக் குறித்து ஆதியில் கொண்டிருந்த நோக்கமாகும். சகலத்தையும் தேவன் ஒவ்வொன்றாய் சிருஷ்டித்தபோது ''அது நல்லது'' (Good) என்று கண்டார். மனுஷனை சிருஷ்டித்தபோதோ .... அவன் தனிமையாய் இருப்பது ''நல்லதல்ல'' (Not Good) என்றார் (*ஆதியாகமம் 2:18*). ஆனால் ஆறாம் நாளில் தேவன் ஆதாமுக்கு ஏற்ற துணையாக ஏவாளை சிருஷ்டித்த பின்பு, ''மிகவும் நன்றாயிருந்தது'' (Very Good) என்றார் (*ஆதியாகமம் 1:31*). இங்கு வித்தியாசத்தைக் கண்டீர்களா? நல்லதல்ல என்று சொன்ன ஆண்டவர் 'மிகவும் நன்றாயிருந்தது' என்று கூறியது எப்படி? இவ்வாறு தேவன் மாற்றிக்கூறியதற்கு என்ன சம்பவம் நடந்தது? ஆம், அதற்குரிய காரணம் நம் கண்களுக்கு முன்பாகத் தெளிவாகவே இருக்கிறது... தனியாய் இருந்த மனிதன் இப்பொழுது திருமணம் ஆகிவிட்டான்!! பார்த்தீர்களா, திருமணத்தைக் குறித்து தேவன் இவ்வாறு எப்போதுமே நல்ல நோக்கமே கொண்டிருக்கிறார்!

அதாவது, திருமணம் ஆவதற்கு முன்பு இருந்த மனுஷனுடைய தரத்தைவிட திருமணம் ஆனபின்பு அவனுடைய வாழ்வின் தரம் மிகவும் நல்லதாய் உயர்கிறது. அதேபோல திருமணத்திற்கு முன்பு இருந்த ஒரு ஸ்திரீயின் தரத்தைவிட திருமணம் ஆனபின்பு அவளுடைய வாழ்க்கை தரம் மிகவும் நல்லதாய் அமைகின்றது. ஆனால் திருமணம் ஆனவர்களின் வாழ்க்கையில் காரியம் இவ்விதத்திலா சம்பவிக்கின்றது? நம்மைச் சுற்றியுள்ள திருமணமான தம்பதிகளில் 99%பேர் வாழ்க்கையில் இதற்கு நேர்மாறாய் நிகழ்வதையே நாம் காண்கிறோம். இவர்கள் கூறும் சாட்சியோ தலைகீழாய் இருக்கின்றது. இவர்கள், ''திருமணமான பின்பைவிட திருமணமாவதற்கு முன்பு அதிக மகிழ்ச்சியாய் இருந்தோம்'' என்றல்லவா சாட்சி கொடுக்கின்றனர். இது எத்தனை துயரமான சாட்சி!

1. குடும்பத்தின் நடுவில் பிரவேசித்துவிட்ட சாத்தானின் தலையை நாம் நசுக்கி "மிகவும் அருமையான" குடும்ப ஜீவியத்தைப் பெற்றுவிட முடியும் என்பதே இயேசு நமக்களித்திருக்கும் சுவிசேஷம்!

தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்ற வேதவார்த்தையை நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் கணவன் மனைவிக்கிடையே பிரிவினையைக் கொண்டு வந்த முதலாவது நபர் "பிசாசு". இதை நாம் சுருக்கமாகச் சொல்வோமானால், ஒரு தம்பதியினர் திருமணமான அடுத்த கணமே சாத்தான் அவர்களிடம் பிரவேசிக்கக் காத்திருக்கிறான் என்பதே ஆகும். மேலும் அவர்களிடம் தன் தந்திரத் தைப் புகுத்தி அவர்களுடைய வாழ்க்கை "நல்லது" என்ற இடத்திலிருந்து "மிகவும் நல்லது" என்ற இலக்கை அடையவிடாத படிசெய்து விடுகிறான். இதைத்தான் நாம் நம்முடைய நடைமுறை ஜீவியத்தில் காண்கிறோம். கணவனும் மனைவியுமாக இணைந்த இவர் கள் ஆரம்பநாட்களில் சண்டை போடுவதில்லை. ஆனால் நாட்கள் பல உருண்டோடிய பின்பு "நல்லது" என்ற இடத்திலிருந்து "...மோசமானது" என்ற இடத்தைத்தான் அடைகிறார்கள். ஆம், திருமணநாளில் ஒருவரை ஒருவர் நேசித்து சண்டைபோடாதிருந்த இவர்கள் வாழ்வில் சர்ப்பம் (சாத்தான்) பிரவேசித்தபடியால் சண்டையும், அன்பற்ற தன்மையும் ஏற்பட்டுவிட்டது.

இந்நிலையை மாற்றும்படிக்கே இயேசு வந்தார்! இயேசுவின் வருகை மூலம் தேவன் நமக்குத் தந்த வாக்குத்தத்தம் என்ன தெரியுமா? ஸ்திரீயின் வித்து சர்ப்பத்தின் தலையை நசுக்கும் என்பதே! கர்த்தருக்கே ஸ்தோத்திரம்!! சுவிசேஷம் நமக்கு அளித்திருக்கும் சொல்லிமுடியா நன்மையை நீங்கள் புரிந்து கொண்டீர்களா? ஆதாமுக்கும் ஏவாளுக்கும் நடுவே வந்த சர்ப்பத்தின் தலை இயேசுவால் நசுக்கப்பட்டுவிட்டது!! இப்போது நாம் பரிசுத்தாவியின் பெலத்துடனே இயேசுவோடு இணைக்கப்பட்டு அவருடைய தலைமையில் அடங்கியிருந்து ஜீவித்தால், இன்று நாமும் நம் திருமண வாழ்க்கையைக் கெடுக்க வந்திருக்கும் சர்ப்பத்தின் தலையை நம் காலின் கீழாக நசுக்கிப்போட முடியும். இதுவே திருமண வாழ்விற்கு தேவன் நமக்கென்று வழங்கியிருக்கும் சுவிசேஷத்தின் நற்செய்தியாகும்! இந்த சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ள விசுவாசம் கொண்டவர்களின் வாழ்க்கை "நல்லது" என்ற இடத்திலிருந்து "மிகவும் நல்லது" என்ற ஸ்தானத்தைக் கண்டடையும் என்பதில் சந்தேகமேயில்லை!

2. "தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த" இயேசுவின் வழியே மனைவியை நேசிக்க கணவன் கற்றுக்கொள்ளும் வழி! இந்த கணவன் "ஓர் தலைவனாய்" அதேசமயம் "ஓர் வேலைக்காரனாய்" இருப்பதற்கும் இயேசு கற்றுத் தருகிறார்!!

இயேசுவின் நாமத்தை உபயோகப்படுத்திவிட்டால், நாம் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றியதாகப் பொருளாகாது. ஏனென்றால் இவ்வாறு அவருடைய நாமத்தைப் பயன்படுத்து

கிறவர்களின் வாழ்க்கையில் சாத்தான் இன்னமும் ஜெயிக்கப்படாதிருப் பதையே நாம் காண்கிறோம். ஆம், அவரைப் பின்பற்றுவதொன்றே ஜெயத்தின் வழியாகும்! இதை இயேசு கூறும்போது, ஒருவன் என்னைப் பின்பற்றினால் நான் எங்கிருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான் என கெம்பீரமாய் முழங்கினார். இப்போழுது இயேசு எங்கேயிருக்கிறார்? ஆம், அவர் இருக்கும் இடத்தில், அவருடைய பாதத்தின் கீழடியில் சர்ப்பத்தின் தலை நசுக்கப் பட்டுக் கிடக்கிறது! இப்போது நாமும் இயேசுவைப் பின்பற்றினால் அவருடைய பாதம் சர்ப்பத்தின் தலையின் மீது மிதிப்பதைப் போலவே நம்முடைய பாதமும் சர்ப்பத்தின் தலையை நசுக்கிடும் உன்னத ஸ்தானத்தை அடைந்திட முடியும்!!

ஒரு கணவனுக்கு தேவன் அளித்திருக்கும் முதலாவது வார்த்தை அல்லது ஆலோசனை ''புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள்'' (எபேசியர் 5:25) என்பதேயாகும். மேலும் அந்த அன்பை ''கிறிஸ்து சபையில் அன்புகூர்ந்து.... போஷித்துக் காப்பாற்றுகிறது போல... '' என இயேசுவினுடைய மனப்பான்மைக்கு ஒப்பிட்டுக் கூறப் பட்டிருக்கிறது (வசனம் 29). தன் உள்ளத்தில் ஓரளவு 10% நேர்மை கொண்ட எந்தவொரு கணவனும் இந்த வசனத்தின்படி வாழ்வதற்கு ஜீவகாலமெல்லாம் நீண்ட பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற தன் நிலையை ஒத்துக்கொள்வான். ஏனெனில் கிறிஸ்துவின் அன்பிற் கொப்பான நிலையை ஒருமனிதன்கூட இப்பூமியில் இன்னமும் அடைந்துவிடவில்லை. ஆனால் துயரமான விஷயம் என்னவென்றால், இந்த ஒப்பற்ற நிலையை அடைவதற்கு இன்றைய விசுவாசிகள் ஆர்வமற்று இருப்பதுதான்!

கிறிஸ்து தன் சபையில் அன்புகூர்ந்து ''அதை திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்துப் பரிசுத்தமாக்குகிறார்'' என வாசிக்கிறோம்(எபேசியர் 5:26). கிறிஸ்து தன் சபையை எவ்வாறு சுத்திகரிக்கிறார்? அல்லது சபை தவறு செய்யும்போது எவ்வாறு சபையைத் திருத்துகிறார்? இன்று தன் மனைவியினிடத்தில் தவறுகளைக் காணும் பெரும்பாலான கணவன்மார்கள், தங்கள் மனைவிகளைக் கடினமான வார்த்தைகளால் திட்டுகிறார்கள். ''உனக்கு அறிவு இல்லையா!'' எனவும் அல்லது இதற்கு ஒப்பான பேய்த்தனத்திற் கடுத்த வார்த்தைகளை உபயோகிக்கிறார்கள். ஆனால் இயேசுவோ இவ்வாறு ஒருக்காலும் நடந்து கொண்டதேயில்லை. அவளிடம் (சபையிடம்) ஏதாவது தவறு கண்டால், அவளைப் பரிசுத்தப்படுத்தவே தீவிரம் கொள்வார். ஏனென்றால் தன் மனைவியை (சபையை) தமக்கு முன் ''கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் நிறுத்திக் கொள்வதற்கு'' அவர் கொண்ட விருப்பமே அவருடைய தீவிரத்திற்கு காரணமாகும். இவ்வாறாகவே நீங்களும் உங்கள் மனைவியை கறை திரை ஒன்றும் இல்லாமல் உங்களுக்கு முன் நிறுத்திக்கொள்ள விரும்பு கிறீர்களா?

இங்கே இயேசு தன் சபையைப் பரிசுத்தப்படுத்துவதற்கு என்ன செய்தார் தெரியுமா? அவளை (சபையை) பரிசுத்தம் செய்வதற்கு ''தம்மைத்தாமே அவளுக்காக (அதற்காக) ஒப்புக்கொடுத்தார்'' என வாசிக்கிறோம் (எபேசியர் 5:27). சபையின் பிழையைப் போக்குவதற்கு தேவன் கையாளும் வழி இதுதான். இந்த தேவனுடைய வழியையே நாமும் பின்பற்றக்கடவோம். கணவனாகிய நீங்கள் உங்கள் மனைவியினிடத்தில் தவறுகளைக் கண்டால்.... நீங்கள் என்ன செய்ய வேண்டும்? இயேசுவைப் பின்பற்றுங்கள், அதுபோதும்! அதாவது, நீங்கள் இவ்வுலகிலுள்ள புத்தியில்லாத மற்ற கணவன்மார்களைப் போல் நடக்கக்கூடாது. இப்போது நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் ஆண்டவரிடம் திரும்பிப் பார்த்து ''ஆண்டவரே, நீர் உம்முடைய மணவாளியிடம் பிழையைக் கண்டபோது, அவளுக்காக உம்மையே ஒப்புக்கொடுத்தீர். இப்போதும் கர்த்தாவே உம்மைப்போலவே நானும் என் மனைவிக்கு என்னை ஒப்புக்கொடுக்க எனக்கு கற்றுத்தாரும்'' என ஜெபியுங்கள்.

''அன்பு'' என்பதற்குரிய விளக்கத்தை அகராதி கூறும் விளக்கத்தின்படி கற்றுக்கொள்ளாமல், ''கிறிஸ்து சபையை நேசித்து தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்'' என்ற தேவனுடைய வழியின்படியே நாம் அன்பைக் கற்றுக் கொள்ளவேண்டும். அதாவது உங்கள் மனைவியைப் பரிசுத்தம் செய்யும்படி, உங்களுக்குரிய ''நான்'' என்ற ஸ்தானத்திலிருக்கும் நீங்கள் ''மரிப்பதே'' அதன் பொருளாகும். இவ்வாறாகத்தான் நீங்கள் உங்கள் மனைவியைப் பரிசுத்தம் செய்ய முடியும். ஒரு கணவனுக்குத் தேவன் தந்திருக்கும் அழைப்பு இதுதான்.

இயேசு நம் எல்லோருக்கும் குரு என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் உலகத்தாரைப் போலில்லாமல் நம்முடைய ஒப்பற்ற குரு தன் ஜீவியத்தின் கடைசிநாளில் எங்கு இருந்தார் தெரியுமா? ஆம், அவர் தம் மணவாளியின் (சீஷர்களின்) பாதபடியில் அமர்ந்து அவர்களுடைய பாதங்களைக் கழுவிக் கொண்டிருந்தார். இந்த குருவினுடைய பூரணத்தை நோக்கி ஒருவன் கடந்து சென்றால், அவனும் தன்குருவைப் போலவே தன் மனைவியின் பாதத்திற்குத் தன்னைத் தாழ்த்தி அவளிடம் காணும் எல்லா அழுக்குகளையும் கழுவி (மன்னித்து, புத்திசொல்லி) சுத்திகரிப்பான்!

பாதங்களைக் கழுவுவதென்பது மனைவிக்கு உதவி செய்யும்படி இழிவான வேலைகளைச் செய்வதும் அடங்கும். இருப்பினும் இவ்வாறு உதவிசெய்யும் கணவன்மார்களை சுயநலமாய் தங்களுக்கு ஆதாயம் தேடி பயன்படுத்தும் மனைவிமார்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இதுபோன்ற மனைவிகள் சபையில் இருப்பது துக்கம் நிறைந்ததாகும். அதேபோல, கணவன் தன் மனைவியின் பாதங்களைக் கழுவும்படி எந்த இழிவான வேலைகளையும் செய்யலாம் என நாம் கூறும் இந்த சத்தியத்தைத் தவறாய்ப்புரிந்து கொண்ட புருஷர்களும் உண்டு. அதாவது, புருஷர்களாய் இருந்து உதவுவதற்குப் பதிலாய்,

இவர்கள் தங்கள் வீட்டில் ஓர் அடிமையாக மாறிவிடுகிறார்கள். ஆனால் இந்தச் செய்தியின் அர்த்தம் அப்படி இல்லவே இல்லை! இயேசு தன்னை "எல்லாராலும் துடைத்துப் போடும் கந்தையைப் போல்" தன்னைத் தாழ்த்தினார் என்பது உண்மைதான். இருப்பினும் இயேசு தன்னுடைய சீஷர்களோடு உட்கார்ந்திருக்கும்போது அவர்களில் தலைவர் யார் என கண்டு கொள்வது நமக்கு கடினமாயிருக்காது. நீங்கள் தவறுதலாக கூட பேதுருவையோ அல்லது மத்தேயுவையோ 'தலைவன்' என கருத மாட்டீர்கள். அங்கு எல்லோரையும் வழிநடத்திச் செல்லும் ஒருவராக இருந்த இயேசுவின் தலைமை மிகவும் தெளிவாகக் காணப்பட்டது! இதைப்போலவே ஒரு கணவனுடைய நிலையும் இருக்க வேண்டும்.

ஓர் தலைவனாகவும் அதே சமயம் ஓர் வேலைக்காரனாகவும் இருப்பது, மென்மையானதோர் சமநிலையாகும்.

இந்த சமநிலையை நாம் இயேசுவிடத்திலிருந்துதான் கற்றுக் கொள்ள முடியும். வீட்டிலுள்ள இழிவான வேலைகளை மாத்திரம் செய்ய வேண்டுமென்றால், அதை யார் வேண்டுமானாலும் செய்ய லாம். அதேபோல் தன் மனைவியை அடக்கி சர்வாதிகாரி போல் நடக்க வேண்டுமென்றால்... அதையும் யார் வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் வீட்டில் தலைவனாகவும் அதேசமயம் வேலைக்காரனாகவும் இருப்பது தேவஞானத்திற்குரியதாகும்!

இயேசுவோ ஒரு தலைவனாயிருந்து கொண்டே அன்பு செலுத்தினார்... பணிவிடை ஊழியமும் செய்தார்! இவ்வாறு இருப் பதற்கே நமக்கு ஞானம் வேண்டும். இவ்வாறு இயேசுவைப் போலவே நாம் இருப்பது எப்படி? அதன் இரகசியம் "ஓர் மேய்ப்பனாய்" அவர் இருந்ததுதான்! அதாவது, தன் மந்தைக்கு மாதிரியாக முன்சென்றார்! தன் மந்தைக்குப் பின்னால் இருந்து அவைகளை விரட்டி ஓட்டாமல், முன்னால் நிற்கும் "ஓர் மாதிரியாய்" திகழ்ந்தார். உங்கள் வீட்டில் காரியம் எல்லாம் சீர்ப்பட்டு நடைபெற நீங்கள் விரும்பினால் இயேசு வைப் போலவே நீங்களும் ஓர் நல்ல மாதிரியாய் இருப்பதற்கு வாஞ்சை கொள்ளுங்கள். ஏராளமான புத்திமதிகளை மனைவிக்குக் கூறிக் கொண்டிராமல் அவள் பின்பற்றத் தகுந்த ஓர் நல்ல வாழ்க்கையை இயேசுவைப் போல் மாதிரியாக வாழ்ந்து காண்பியுங்கள்.

ஒரு கணவனாயிருக்கும் நீங்கள் இயேசுவின் மாதிரியைப் போலவே குடும்பத்திலுள்ள மற்றவர்களை நடத்திச் செல்லும்படி ஓர் நல்ல மேய்ப்பனாய் இருக்க வேண்டும். உங்கள் மனைவி ஜீவியத்தின் ஏதாவது ஒரு பகுதியில் தடுமாறுவார்களென்றால், அன்புள்ள சகோதரனே, இப்போது உங்களைப் பார்த்து நீங்கள் ஒரு கேள்வியைக் கேட்டுப்பார்க்க வேண்டும். "தேவன் எனக்குத் தந்த மனைவியை (ஆட்டை) தேவன் விரும்பிய பாதையில் நான் சரியாய் நடத்திச் செல் கிறேனா?" என்றே உங்களுக்குள் கேட்டுப் பாருங்கள்.

உங்கள் மனைவிக்குப் பின்னால் உங்கள் பிள்ளைகளாகிய

ஆட்டுக்குட்டிகளும் வந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் யாவரும் மேய்ப்பனாகிய ஒரு மனிதனையே [கணவனாகிய உங்களையே] சார்ந்திருக்கிறார்கள்.

இந்நிலையில் கணவனாகிய நீங்கள் இயேசுவைப் பின்பற்றிச் செல்லவில்லையென்றால், உங்களைப் பின்பற்றும் உங்கள் வீட்டார் எந்த திசையை நோக்கிச் செல்வார்கள்? இவ்வுலகத்தார் போலவே உங்கள் குடும்பத்தாரும் தேவன் நியமித்த வழியை விட்டு தாறுமாறாகவே சென்று கொண்டிருப்பார்கள். ஆகவே உங்கள் திருமண வாழ்க்கை ''நல்லது'' என்ற நிலையிலிருந்து ''மிக நல்லது'' என்ற நிலையை அடைந்திட நீங்கள் விரும்பினால் கணவனாகிய உங்களுக்கு ''இயேசுவைப் பின்பற்றும் ஜீவியம்'' எத்தனை முக்கியத்துவம் கொண்டது என்பதை சற்று எண்ணிப்பாருங்கள்.

3. ''தலையாகிய தன் தேவனுக்கு கிறிஸ்து அடங்கியிருந்ததே'' மனைவி பின்பற்ற வேண்டிய சிறந்த வழி! அடங்கியிருக்கும் ஆவி கொண்ட மனைவியே, முரட்டாட்ட ஆவியுடைய "சாத்தானை" தன் வீட்டில் நசுக்கிப் போடுகிறாள்!!

அதைப்போலவே, சர்ப்பத்தின் தலையை நசுக்குவதற்கு மனைவியும் இயேசுவைத் தன் மாதிரியாகக் கொண்டு பின்பற்ற வேண்டும். மனைவியானவள் இயேசுவைப் பின்பற்ற வேண்டிய பகுதியை 1கொரிந்தியர் 11-ம் அதிகாரத்தில் நாம் காண்கிறோம். இந்த அதிகாரம் 3-ம் வசனத்தில் ''ஒவ்வொரு புருஷருக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறார் என்றும், ஸ்திரீக்கு புருஷன் தலையாயிருக்கிறான் என்றும் கிறிஸ்துவுக்கு தேவன் தலையாயிருக்கிறார்'' என்றும் வாசிக்கிறோம்.

இயேசுகிறிஸ்து இந்த பூமியிலிருந்தபோது, பிதாவாகிய தேவனுக்கும் அவருக்கும் இடையே காணப்பட்ட உறவை சற்று கவனியுங்கள்! ஒருவர் தலையாகவும் மற்றொருவர் சரீரமாகவும் இருந்தார்கள்! ஆம், ஒரு சரீரம் தன் தலைக்கு அடங்கியிருப்பதைப் போலவே இயேசுவும் இப்பூமியில் வாழ்ந்த தன் ஜீவகாலமெல்லாம் தன் பிதாவிற்கு அடங்கியிருந்தார். ''இதைப்போலவே'' ஒரு மனைவியும் புருஷனாகிய தன் கணவனுக்கு அடங்கியிருக்க வேண்டும்.

தேவன் விரும்புகிற ஓர் திருமண வாழ்க்கைக்கு ''ஓர் விலைக்கிரயம்'' செலுத்தப்பட வேண்டும். இந்த விலைக்கிரயத்தை நீங்கள் செலுத்த ஆயத்தமாயிருந்தால் உங்கள் குடும்ப ஜீவியம் ''நல்லது'' என்ற நிலையிலிருந்து ''மிகவும் நல்லது'' என்ற நிலையை நிச்சயம் வந்தடையும் என்பதற்கு சகரியா பூணனாகிய நானே உங்களுக்கு உத்திரவாதம் அளிக்கிறேன். ஒரு மனைவி அடங்கியிருக்கும் ஜீவியத்திற்கு விலைக்கிரயம் செலுத்த வேண்டிய தருணம் எப்போது சம்பவிக்கும்? நீங்கள் விரும்பியதை உங்கள் கணவர் செய்யச் சொல்லும்போது அதற்கு அடங்கியிருப்பது மிகவும் எளிது. ஆனால் நீங்கள் விரும்பாததைச் செய்திட வேண்டிய நிலையில்தான் உங்கள் அடங்கியிருத்தல் சோதிக்கப்படுகிறது. இங்குதான் ஒரு மனைவி முறுமுறுக்கத் துவங்கு

கிறாள். இச்சமயத்தில்தான் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் பாதிக்கப்படுகின்றனர். இவ்வாறு சர்ப்பம் வீட்டில் நுழைந்து, வீட்டிலுள்ள எல்லோரையும் கடிப்பதற்கு கதவைத் திறந்துவிட்டது யார்? இந்த மனைவி தான்! இருப்பினும், சர்ப்பத்தை வீட்டிற்கு வெளியே தூர விலக்கி வைத்திருக்கக்கூடிய அதிஉன்னதமான வலிமையும் ஓர் மனைவிக்குத்தான் இருக்கிறது!!

இவ்வுலகத்தில் இரண்டு வலிய ஆவிகள் கிரியை செய்கின்றன. அவை, 1) முரட்டாட்டத்தின் ஆவி 2) அடங்கியிருத்தலின் ஆவி. பிரதான தூதனாகிய லூசிபர் தேவனுக்கு விரோதமாக முரட்டாட்டம் செய்தபோதுதான் சாத்தானாய் மாறினான். இந்த சாத்தானிடத்திலிருந்துதான் முரட்டாட்டத்தின் ஆவி பிறந்தது. இதற்கு நேர்மாறாக, இயேசுகிறிஸ்து இந்த பூமிக்கு வந்தபோது தேவனுக்கு அடங்கி கீழ்படிந்திருக்கும் ஆவியோடு வந்தார். ஆகவே ஒரு மனைவி தன் கணவனுக்கு கீழ்படிந்திருக்காத பட்சத்தில் முரட்டாட்டத்தின் ஆவி தன் வீட்டிற்குள் நுழையும்படியே கதவைத் திறக்கிறாள்! இந்த ஆவி அவளுடைய பிள்ளைகளையும் பாதித்துவிடுகிறது!! இப்போது அவளுடைய வீட்டில் சண்டையும் சச்சரவும், தலைவலியும், வியாதியும்... இன்னும் பல பிரச்சனைகளும் நுழைந்துவிடுகிறது. இவைகளையெல்லாம் தேவனா கொண்டுவந்தார்? இல்லை, சாத்தானே இவைகளைக் கொண்டு வந்தான். ஆனால், இந்த சாத்தானை வீட்டிற்குள் திறந்துவிட்டது யார்? மனைவிதான்! இவளிடம் காணப்பட்ட முரட்டாட்டத்தின் ஆவி சாத்தானுக்கு வாசலைத் திறந்து விட்டது!! இந்த மனைவி அடங்கியிருக்கும் ஆவியால் நிலைத்திருந்தால் பொல்லாத ஆவிகளுக்குத் தன் வீட்டின் கதவை அடைத்திருப்பதற்குரிய வலிமையை நிச்சயமாய்ப் பெற்றிருப்பாள்.

இன்று அநேகர் கெத்செமனே தோட்டத்தில் இயேசு தன் பிதாவின் சித்தத்திற்கு கீழ்படிந்திருந்ததை மாத்திரமே அறிந்திருக்கிறார்கள். இவ்வாறு பிதாவுக்கு கீழ்படிந்திருப்பதை ஆரம்பநிலையில் உள்ள கிறிஸ்தவர்களும் செய்திடக்கூடும். ஆனால் அற்புதம் யாதெனில், இயேசு பூரணமற்ற தன் பெற்றோர்களாகிய யோசேப்பிற்கும், மரியாளுக்கும் அடங்கி கீழ்படிந்திருந்ததேயாகும்!! இயேசுவினிடத்தில் காணப்பட்ட பிரதான கிரியை ''தன் பெற்றோர்களுக்கு 30-ஆண்டுகள் அடங்கியிருந்த செயலே'' எனக் குறிப்பிடலாம். வியாதியஸ்தரை சுகமாக்குதல், மரித்தோரை உயிரோடு எழுப்புதல்...... போன்றவைகளெல்லாம் இந்த அடங்கியிருக்கும் ஜீவியத்திற்குப் பின் நடந்த அற்புத செயல்களேயாகும். ஆம், இந்த அற்புதங்கள் இயேசுவைப் பொறுத்தவரை இரண்டாவது ஸ்தானத்திற்கு உரியதேயாகும்.

தன் தாயாகிய மரியாள் அநேக தவறுகள் செய்திருந்தாலும் இயேசுவோ அவர்களுக்கு அடங்கியிருந்தார். இதேபோல அநேக தவறுகள் செய்யும் தன் கணவனுக்கு அடங்கியிருக்கும் மனைவியர் நம்மிடையே எத்தனைபேர் உண்டு? அவ்வாறு அடங்கியிருக்கும் ஸ்திரீ

களே ஆவிக்குரிய சகோதரிகள் என புகழப்படுவர்! ஆனால், இது போன்ற சகோதரிகளைக் காண்பதோ இன்று மிகவும் அரிதாகிவிட்டது.

ஓர் பூரண வளர்ச்சி கொண்ட மனைவி யார் தெரியுமா? எந்த மனைவி தன் கணவரிடம் பூரணத்தை எதிப்பாராதிருக்கிறாளோ அவளே பூரணம் நிறைந்த மனைவியாவாள்! அதேபோல எந்த கணவன் தன் மனைவியிடம் பூரணத்தை எதிப்பாரதிருக்கிறானோ அவனே பூரணம் நிறைந்த கணவனாவான்!! ஆனால், இதுபோன்ற குணாதிசயம் கொண் டவர்கள் விசுவாசிகளின் மத்தியில் அரிதாகவே காணப்படுகிறார்கள்.

பூரணமல்லாத தன் கணவனுக்கு அடங்கியிருக்காதவர்கள்... நிரூபணமாய் கூறிடும் உண்மையாதெனில், இவர்கள் ''தேவனுக்கும் அடங்கியிருக்கவில்லை'' என்பதுதான். அவர்களுக்கு அடங்கியிருக்கும்படி கட்டளையிட்டதே இந்த தேவன் தானே!

''மனைவிகளேகர்த்தருக்குக் கீழ்படிகிறதுபோல உங்கள் சொந்த புருஷருக்கு கீழ்ப்படியுங்கள்'' என தேவன்தான் கட்டளையிட்டார். இந்த கட்டளைக்கு நீங்கள் கீழ்படியவில்லையென்றால், நீங்கள் ''தேவனுக்கே இன்னமும் கீழ்படியவில்லை'' என்பதே அர்த்தமாகும். இவ்வாறு இருந்துகொண்டு நீங்கள் பேசும் ஆவிக்குரிய விஷயங்கள் அனைத்தும் குப்பைத்தொட்டியில் எறிவதற்கே உகந்ததாகும்.

இருப்பினும், ஒரு மனைவி தன் கணவனுக்கு எந்த ஆலோசனை யும் தரமுடியாது என நாம் இங்கு கூறவில்லை. மனைவியானவள் ''உதவுகிறவள்'' என்றும் வேதம் கூறுகிறது. புருஷன் என்ன சொன்னாலும் அதற்கெல்லாம் ''ஆமாம் ஆமாம்'' என தலையை ஆட்டிக் கொண்டு எந்த ஆலோசனையும் கூறமுடியாத ''ஓர் மக்கு போல்'' மனைவி இருக்க வேண்டியதில்லை. நீங்கள் ஓர் நல்ல மனை வியாயிருந்தால், உங்கள் கணவருக்கு ஓர் அடங்கியிருக்கும் ஆவியோடு கூட எவ்வாறு உதவி செய்ய முடியும் என்பதையும் நன்கு அறிந்திருப் பீர்கள். இவ்வாறு அடங்கியிருக்கும் ஆவியோடு ஆலோசனைகளைத் தன் கணவருக்குக் கூறுவது மனைவிக்குள்ள முக்கிய பொறுப்பாகும்.

இந்த அற்புத மணவாழ்க்கை, தேவனுடைய வார்த்தையை கனம் பண்ணி இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றும் யாவருக்கும் சொந் தமானதாகும்!! அவருடைய அடிச்சுவட்டில் நடந்து ''ஒளிமய'' குடும்ப வாழ்க்கையை நம் தேசத்தில் மலையின்மேல் உள்ள பட்டணமாய் அமைத்திடக்கடவோம்!! ஆமென்.

– சகரியா பூணன்

7

''தனக்கானதைத் தேடுவோர் ஆவிக்குரியவர்கள் அல்லர்!''

''சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவளை வஞ்சித்ததுபோல, உங்கள் மனதும் கிறிஸ்துவைப் பற்றிய உண்மையிலிருந்தும் அவரைப்பற்றிய தியானத்திலிருந்தும் (Devotion to Christ) விலகும்படி கெடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன்... ஏனெனில் சாத்தான் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக் கொள்வானே... அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துக் கொண்டால் அது ஆச்சரியமல்லவே'' *(2 கொரி. 11:3, 14, 15).*

''நீதிப்பிரமாணத்தைத் தேடின இஸ்ரவேலரோ நீதிப்பிரமாணத்தை அடையவில்லை'' *(ரோ. 9:31).*

இஸ்ரவேலிலிருந்த பரிசேயர்கள் நீதியை விரும்பிப் பின் தொடர்ந்தவர்கள்தான். ஆனால் சாத்தானோ அவர்களை வழி விலகும் படிச் செய்துவிட்டான். இன்றும் நீதியை விரும்பி அதைப் பின்தொடரும் யாவருக்கும் இது ஓர் எச்சரிக்கையாய் இருந்திடட்டும். என்னை ஒருவரும் வஞ்சித்திட முடியாது என நீங்கள் எண்ணுவதெல்லாம்– உங்கள் பெருமையே! தேவனுடைய வார்த்தையில் காணும் சத்தியத்தையும், இப்பூமியில் வாழ்ந்த இயேசுவின் வாழ்க்கையில் காணும் சத்தியத்தையும் கண்டு அதில் அன்புகூர்ந்து அதன் வெளிச்சத்தில் நடக்கும் போது மாத்திரமே நாம் வஞ்சகத்திலிருந்து பாதுகாக்கப்பட்டிருக்க முடியும் *(2 தெச. 2:10).*

நாம் தேவ வசனத்தையே நம் வழிகாட்டியாகக் கொள்ளாவிட்டால், நம் உண்மையான ஜீவியம் நம்மை வஞ்சகத்திலிருந்து காத்துக் கொள்ளும் என எண்ணுவது மதியீனம். பேதுருவைப் பாருங்கள். அவன் அவ்வளவு உண்மையுள்ளவனாயிருந்தான். ஆயினும், இயேசுவைத் தவறான பாதையில் செல்லும்படி கூறிய ஆலோசனையினிமித்தம் ''சாத்தானுக்கு வாயாக'' வீழ்ந்தானன்றோ! *(மத். 16:21–23).* இயேசு

தன் சீஷர்களுக்கு முதலாவதாகச் சிலுவையைப்பற்றிக் கூறியபோது, அதுவே தேவனுடைய வழி என்பதை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவர்களோ பழைய ஏற்பாட்டின் சுவிசேஷத்தால் ஆட்கொள்ளப்பட்டிருந்தார்கள். அச்சுவிசேஷம் தேவ ஜனத்திற்கு அளித்த வாக்குறுதியெல்லாம், ஐசுவரியம்; சுகஜீவியம்; அநேகம் பிள்ளைகள் மற்றும் பல பூமிக்குரிய ஆசீர்வாதங்கள் மாத்திரமே! பாடுபடவேண்டும், மரிக்கவேண்டும், என்பதெல்லாம் இந்தப் பழைய ஏற்பாட்டின் சுவிசேஷம் அறிந்திடாத ஒன்று!!

1. பூமிக்குரிய ராஜ்யம்–அதன் ஆசீர்வாதங்களையும், தனக்காக கொள்ளும் ஆசீர்வாதங்களையும் தேடுவதிலிருந்து "மனம் திரும்பி" பரலோக ராஜ்ஜியத்தையும் தேவனுடைய ராஜ்ஜியத்தையுமே தேடிட வேண்டும்! இதுவே புதிய ஏற்பாட்டின் சுவிசேஷம்!!

பூமிக்குரியவைகளையும், தன் சொந்த ஆசீர்வாதங்களையும் மையமாகக் கொண்டே பழைய ஏற்பாட்டின் சுவிசேஷம் இருந்தது. புதிய ஏற்பாட்டின் சுவிசேஷமோ இதற்கு நேர்மாறாக பரலோகத்திற்குரியவைகளையும், தேவனுடைய நோக்கத்தையுமே மையமாகக் கொண்டிருக்கிறது. இந்தப் புதிய ஏற்பாட்டின் சுவிசேஷத்திற்கு வழியை ஆயத்தம் செய்ய வந்த யோவான் ஸ்நானகன் தன் செய்தியில், பூமிக்குரிய இராஜ்ஜியத்தையும்–இம்மண்ணுக்குரிய ஆசீவாதங்களையும் தேடுவதை விட்டு மனம் திரும்புங்கள். ஏனெனில் "பரலோக" ராஜ்ஜியம் சமீபித்திருக்கிறது என்றும், "தனக்கானதைத்" தேடுவதிலிருந்து மனந்திரும்பித் "தேவனுடைய" இராஜ்ஜியத்தைத் தேடுங்கள் என்றும் பிரசங்கித்தார் (மத். *11:12*, மாற் *1:14,15*). இவ்வாறு, யோவான் ஸ்நானகன் காலம் முதல் "பரலோக" ராஜ்ஜியமும், "தேவனுடைய" ராஜ்ஜியமும் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிறது என இயேசுவும் குறிப்பிட்டார் (மத் *11:12*; லூக்கா *16:16*). ஆனால் இந்த ராஜ்ஜியத்திற்குள் பிரவேசிப்பதற்கு ஒருவன் பலவந்தம் பண்ணவேண்டும் என இயேசு மேலும் கூறினார். தன்னையே நேசிப்பதும்,தன் பூமிக்குரிய சுக ஜீவியத்தையும், புகழையும், ஐசுவரியத்தையும் சிநேகிக்கும் சிநேகமே நம் மாம்சத்தில் ஆழமாய் வேரூன்றியுள்ளது. ஆம்! இவ்விதமாய் சினேகிக்கும் இச்சினேகத்திற்கு எதிராகப் பலவந்தம் செய்யத் தீர்மானிப்பவர்கள்மாத்திரமே தேவனுடைய ராஜ்ஜியத்தைப் பற்றிப் பிடித்துக் கொள்வார்கள்!!

நிம்மதியான எளிய வழியை தெரிந்துகொள்ளும்படி பேதுரு இயேசுவுக்கு ஆலோசனை கூறியபோது, "எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய். தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய்" (மத். *16:23*) என பேதுருவை இயேசு கடிந்துகொண்டார். பார்த்தீர்களா! நம் சிந்தையை நமக்கானவைகளில் வைத்திடும்போது, நாம் இயேசுவுக்ும்; தேவனுடைய ராஜ்ஜியத்திற்கும் இடறலாய் மாறிவிடுகின்றோம். இங்குதான், சாத்தான் நம்மை எளிதாகத் திசை திருப்பி விடுகின்றான்.

நாம் பாவத்திலிருந்து இரட்சிக்கப்படுவது, ''நமக்கானதைத் தேடுவதிலிருந்து'' நாம் பெறும் இரட்சிப்பைப் பொறுத்தே உள்ளது. லூசிபர் தனக்கானதைத் தேடினான்–பாவம் இவ்வையகத்தில் பிரவேசித்தது! இயேசுவோ தனக்கானதை ஒரு போதும் தேடவேயில்லை–எனவேதான் இரட்சிப்பு அவர் மூலமாய் மலர்ந்தது!! தனக்கானதையே இன்னமும் தேடிக்கொண்டிருக்கும் ஓர் மனிதனின் நீதியானது, போலியான நீதியே! ஆயினும், பரிசுத்தத்தைப் பிரசங்கிக்கும் இன்றைய அனேக குழுக்களிடம் இந்தப் போலி நீதியைத்தானே நாம் காணமுடிகின்றது. மனிதன் அடிப்படையிலிருந்தே ''வியாபார நோக்குடையவனாகவே'' இருக்கிறான். எனவே, தொட்டும் தொடாமல் ஏதோ கொஞ்சம் அசௌகரியம் அடைந்து பரலோகத்தை வாரிக் கொள்ள எண்ணுகின்றான்.

கோபம், பாலிய இச்சை, கசப்பு ஆகியவைகளை ஜெயித்து கடந்த தன் வாழ்வின் எல்லாப் பகுதிகளிலும் ஒப்புரவாகி வாழும் ஓர் மனிதன் கூட தனக்கானதைத் தேடிக்கொண்டும் இருக்கமுடியும் என்பதை அறிவீர்களா? ஆம்! 1) அவன் தன் சுகத்தையும் சௌகரியத்தையும் தேடுவான். அல்லது, 2) தன் மனைவியின் சுகத்தையும் சௌகரியத்தையும் தேடுவான் (1 கொரி. 7:33–ன்படி தன் மனைவிக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று இருப்பவன் ''உலகத்திற்குரியவைகளால்'' ஆட்கொள்ளப்படுகிறான்!!) அல்லது, 3) தன் புகழ்ச்சியைத் தேடுவான் (அப்புகழ்ச்சி ஒருவேளை உலகத்திற்குரியதாக இல்லாமல் இருக்கலாம் ஆனால் சபையில் குறிப்பாக மூத்த சகோதரர்களின் புகழ்ச்சியையும், மற்றவர்களின் நன்மதிப்பையும் பெறுவதாக இருக்கலாம்) அல்லது, 4) தன் சொந்த லாபமாய் இருக்கலாம் (இந்த லாபம், சமூக உயர் கல்வியையும்–சம்பாத்தியத்தையும் தேடி அதைப் பின்தொடர்வதாய் இருக்கலாம்). கண்டீர்களா, இக்கொடுமையை! கிறிஸ்து மாம்சத்தில் வெளிப்பட்டார் என்ற தேவபக்தியின் இரகசியத்தைப் புரிந்துகொண்டு அதை விசுவாசித்து மற்றவர்களுக்கு அதை விவரித்துப்பேசும் திறமை கொண்ட இவர், இன்னமும் அக்கிரமத்தின் இரகசியத்தைப் புரிந்து கொள்ளவில்லை!! இன்றாகிலும், ஓங்காரமாய் ரீங்கரிக்கும் இவ்வார்த்தையினைக் கேட்டிடுவீர், ''எல்லா அக்கிரமத்தின் பிறப்பிடமாகிய இரகசியம் யாதெனில், ஒருவன் தனக்கானதைத் தேடும் விருப்பமேயாகும்!''

2. **உண்மையான தேவமனிதர்களிடம் பளிச்சிட்டதெல்லாம் அவர்கள் தனக்கானதைத் தேடவில்லை என்பதுதான்! எல்லாப் பாவங்களுக்கும் மூலகாரணமான ''தனக்கானதைத்தேடும்'' வேரைத் தகர்க்கவே இயேசு கோடாரியுடன் வந்தார்!!**

ஓர் உண்மையான தேவமனிதனின் அடையாளம், ஓர் குறிப்பிட்ட உபதேசத்தைப் பற்றியிருக்கிறார் என்பதில் இல்லை! மாறாக, அவர் தனக்கானதைத் தேடாதவர் என்பதில்தான் உள்ளது!! பிலிப். 2:19–21–ல் பவுல் கூறும்போது, தன் உடன் ஊழியர்களில் அனேகர்

இன்னமும் தனக்கானதைத் தேடுபவர்களாய் இருக்கிறபடியால் அவர்களைப் பிலிப்புப் பட்டணத்திற்கு அனுப்ப முடியவில்லை எனக் கூறினார். இருப்பினும், இக்குழுவில் இருந்த தீமோத்தேயுவோ ஓர் விசேஷித்த மாதிரி!! பவுலின் உடன் ஊழியர்கள் எல்லோரும் சரியான உபதேசத்தைப் பற்றியிருந்தார்கள் என்பதில் சந்தேகமேயில்லை. ஆனால் அவர்களோ தனக்கானதைத் தேடினார்கள். இவர்கள் தங்களை நீதியுள்ளவர்களாகவும், தங்களைச் சுற்றியுள்ளவர்களைக் காட்டிலும் மேலான ஆவிக்குரியவர்கள் என்றும்கூட எண்ணியிருந்திருப்பார்கள். ஆனால் இந்தப் பவுலின் கண்கள், அவர்கள் நீதியின் ஆழமற்ற ''பொக்குத்தன்மையை'' ஊடுருவக் கண்டது. இன்றும் இதுபோன்ற அவலநிலைதானே காணப்படுகின்றது. இது பரிதாபம்!

பல நூற்றாண்டுகளாகத் தொடரும் கிறிஸ்தவ சரித்திரத்தில் இடம் பெற்ற எல்லா உண்மையான தேவ மனிதர்களிடமும் காணப்பட்ட ஓர் பொதுவான பண்பு யாதெனில் ''அவர்கள் தனக்கானதைத் தேட வில்லை'' என்பதுதான். ஆம்! மார்ட்டின் லூத்தர், ஜான் வெஸ்லி, சார்லஸ்ஃபின்னி, ஜோஹன் ஓ.ஸ்மித், வாட்ச்மென் நீ ஆகியோரின் சுயசரிதை துல்லியமாக எழுதப்பட்டிருக்கும் பட்சத்தில், அவர்களைத் தேவ மனிதர்களாக நிலை நிறுத்தியதெல்லாம்.......... எண்ணிப்பார்த்து கணக்கிடும் உபதேசங்கள் அல்ல! மாறாக, அவர்கள் யாவரும் தங்களுக்கானதைத் தேடவில்லை என்றப் பொதுவான உண்மையே ஆகும். வெவ்வேறு காலங்களில் வாழ்ந்த இவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கு முன்பான நூற்றாண்டுகளில் வாழ்ந்தவர்களைக் காட்டிலும் அதிகமான ''சுத்த உபதேசத்தை'' அறிந்திருந்தார்கள் என்பது உண்மைதான், அதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இருப்பினும், அவர்களின் ஆவிக்குரிய தன்மையானது, தங்கள் சந்ததியில் அவர்கள் வாழ்ந்த நாட்களில் பெற்ற வெளிச்சத்தின்படி தேவனுடைய ராஜ்ஜியத்தை ''சுயநலமின்றித்'' தேடினார்கள் என்பதில் மாத்திரமே அடங்கியிருக்கிறது!!

கோபம், பாலிய இச்சை முதலானவைகளைச் ஜெயிப்பதில்தான் நீதி அடங்கியிருக்கிறது என நீங்கள் எண்ணுவீர்களென்றால், நீங்களும் மாபெரும் அபாயத்தில் இருக்கிறீர்கள் என்பதை அறிந்து கொள்ளுங்கள். பௌத்த பிட்சுகள்கூட இப்பாவங்களை (வெளிப்பிரகாரமாக) ஜெயித்து வாழ்கிறார்கள். ஒரு சமயம், புத்தர் ஒருவரிடம், ''என்னை யாரேனும் தூண்டி, என்னைக் கோபம் கொள்ளச்செய்வது ஒருக்காலும் முடியவே முடியாது'' எனக் கூறினார். பாருங்கள், இதுதானா கிறிஸ்துவின் நீதி? நிச்சயமாய் இல்லை! இது ஓர் நல்ல புத்த சன்மார்க்கம்!! அவ்வளவுதான்.

நம் மாம்சத்தில் குடிகொண்டிருக்கும் எல்லாப் பாவங்களையும், இஸ்ரவேலுக்கு எதிராகத் தன் தலைவன் கோலியாத்தோடு நின்ற பெலிஸ்தியர்களுக்கு ஒப்பிடலாம். ஆம், இந்த கோலியாத்தே ''தனக்கானதைத் தேடும்'' ராட்சதன்! தாவீது, இப்பெலிஸ்திய வீரர்களை ஒருவர்பின் ஒருவராகக் கொல்ல ஆரம்பித்திருப்பானென்றால், அதற்கு

முடிவில்லாத பல வருடங்கள் ஆகியிருக்கும். அவன் ஜெயம் பெற்றிருக்கவே முடியாது. ஆனால் நடந்த விந்தை யாதெனில், தாவீது கோலியாத்தைக் கொன்றவுடன், மற்ற எல்லா பெலிஸ்தியர்களும் ஓடிப்போனார்கள் என்று வாசிக்கிறோம்! *(1 சாமு. 17:51)*. இதுதான் ரகசியம்!! நாம் உண்மையான ஜெயம் பெறவேண்டுமென்றால், நம் முழு தாக்குதலையும் இந்த ''தனக்கானதைத் தேடும்'' ராட்சதன் மீதே தொடுத்திட வேண்டும். அப்போது, மற்ற எல்லாப் பாவங்களும் தானாகவே ஜெயிக்கப்பட்டுவிடும்.

கோடாரியை, மரத்தின் வேர்மீது வீதி வெட்டும்படியே இயேசு வந்தார். இம்மரத்தின் கனிகளோ, பொய் சொல்லுதல்; திருடுதல்; இச்சித்தல்; கோபம்; கசப்பு... இப்படி ஏராளம், ஏராளம்! ஆனால், இவை எல்லாவற்றிற்கும் வேராக இருப்பதெல்லாம் ''தனக்கானதை தேடுதல்'' என்ற ஒன்று மாத்திரமே!! இங்குதான் கோடாரியானது வலிமையாய் வீசப்படவேண்டும். இல்லாவிட்டால், நாம் நிச்சயம் வஞ்சிக்கப்படுவோம்.

3. **கிறிஸ்துவைப் பற்றும் தியான வாழ்விலிருந்து விலகி, தன் வீடு–மனைவி–பிள்ளைகள் போன்ற தியானத்திற்கு(ஈடுபாட்டிற்குத்) திரும்பிடுவோர்களின் 'உபதேசம்' (Doctrine) சரியாக இருந்தாலும் அவர்கள் தங்களைத் தாங்களே வஞ்சித்துக்கொண்டவர்களாவர்!**

நான் கோபப்படாமல் இருப்பதைத் தொகையிட்டும், மற்றவர்கள் பேசும் உபதேச மொழிகளையே நான் பேசிக்கொண்டிருப்பதாலும், இப்போது நான் இயேசு நடந்த புதிதும் ஜீவனுமான மார்க்கத்தில் நடக்கிறேன் என நீங்களாகவே கற்பனை செய்து வைத்திருக்கலாம். ஆனால் அதேசமயம், நீங்களோ உங்கள் வீட்டிற்காக மேலும் மேலும் உலகப் பொருட்களை வாங்கிக் குவிப்பதற்கும், உங்கள் மனைவியைப் பிரியப்படுத்துவதற்கும், உங்கள் பிள்ளைகளை மகிழ்ச்சிப்படுத்துவதற்கும், ஓர் நல்ல வசதியான நடுத்தரமான வாழ்க்கையாவது வாழவேண்டுமே என்பதற்கும், உங்கள் மனதையும், சக்தியையும், நேரத்தையும் செலவு செய்கின்றீர்களே!? இப்படியொரு வாழ்க்கையை வாழ்ந்து கொண்டு, நீங்களும் ''இயேசு நடந்தது போல் நடப்பதாக'' நினைத்துக்கொள்ளுவது வஞ்சகத்தின் உச்சகட்டமேயாகும்!

கொரிந்தியர்கள் கிறிஸ்துவைப்பற்றும் தியானத்திலிருந்து வழிவிலகுவார்களோ என பவுல் அஞ்சினார். இப்போது நம்மைக்குறித்து என்ன? நாம் கிறிஸ்துவைப் பற்றும் தியான வாழ்விலிருந்து விலகி, நம் மனைவிமீது அதிக தியானம்(பற்றுதல்) கொள்வதற்குத் திரும்பிவிடும் பெருத்த அபாயம் நம் ஒவ்வொருவருக்கும் இருக்கத்தான் செய்கின்றது. முதலாவது கற்பனை, நம்மை நேசிப்பதுபோல் பிறரையும் நேசிக்கவேண்டும் என்பதில் இல்லை! தேவனையே நம் முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் முழு பெலத்தோடும் முழு மனதோடும் முதலாவது அன்புகூர வேண்டும். இதை நாம் முதலாவது நிறைவேற்றும்போது தான், நம் மனைவி உட்பட பிறரையும் சரியான

முறையில் நேசித்திட முடியும்.

ஓர் கடிகாரத்தின் ஊசல் குண்டைப்போலவே (Pendulam) கிறிஸ்தவர்கள் நீதியைப் பின்பற்றுகிறார்கள்! ஒரு கோடிக்கு ஓடும் இந்த ஊசல் குண்டு, தான் தவறு செய்வதைக் கண்டதும், இக்குண்டு உடனே அதன் மறு கோடிக்கு ஓடுகின்றது. ஜீவனுக்கு நேராக நடத்தும் குறுகலான பாதையின் இருமருங்கிலுமே அபாயக் குன்றுகள் உள்ளன. நீங்கள் இந்தப்பாதையின் நடுவழியை விட்டு விலகிய பின்பு, எந்தக் குன்றின் பாதாளத்தில் நீங்கள் வீழ்ந்தாலும் சாத்தானுக்குக் கொண்டாட்டம்தான்! ஆனால், நாம் இந்த நடுவழியைவிட்டு வலது, இடதுபுறம் சாயும் போது, ''நில்! இதுவே சரியான வழி, இதில் நட!!'' என நம் பின்னே கூறி, நம்மைச் சரியான பாதையில் நடத்தும் பரிசுத்தாவியானவரின் பொறுப்புள்ள ஊழியத்திற்காய் கர்த்தருக்கே ஸ்தோத்திரம்!

வெளியரங்கமான கிரியைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துத் தங்கள் சொந்தக் குடும்ப வாழ்க்கையை உதாசினப்படுத்தும் இன்றைய கிறிஸ்தவ உலகின் உண்மையற்ற தன்மையைக் கண்ட நாம், இப்போது குன்றின் மறுமுனைக்கு ஓடி, கிறிஸ்தவம் என்பது மனைவியையும் பிள்ளைகளையும் சிநேகித்து; ஒரே உபதேசம் பேசும் சபை மக்களை மாத்திரம் அன்புகூர வேண்டும் எனத் தீர்மானிக்கும் குன்றின் பாதாள வீழ்ச்சிக்குச் சென்று விட முடியும்! நம் குடும்பத்தாரையும், நம் சபை மக்களையும் அன்புகூர்ந்து வாழவேண்டும் என்பது உண்மைதான். அது போல், நம் தனிப்பட்ட வாழ்வில் பாவத்தை ஜெயிக்க வேண்டும் என்பதும் உண்மைதான். ''ஆனால்'' அதேசமயம், அவருடைய இராஜ்ஜியத்தின் வளர்ச்சியை வாஞ்சித்து, நம்மையே செலவு பண்ண அர்ப்பணித்து, தியாகம்புரிந்து, அதன்மூலம் கிறிஸ்துவைப்பற்றிய நம் தியானமும் (அன்பும், அர்ப்பணமும்) வெளிப்பட வேண்டுமே! மெய்யானஅந்தரங்கத்தின் பரிசுத்தமும், வெளியரங்கமான தியாகமும் ஒன்றை ஒன்று எப்போதும் தழுவிக்கொள்ளும்!! இயேசுவின் வாழ்வில் இந்த இரண்டும் இருந்ததே!!

4. தன் பணம், வசதி, சரீர சுகத்தை இழந்து கர்த்தரைச் சேவிக்கும் தியாகம் எங்கே?

அப்போஸ்தலனாகிய பவுல், ''தன் ஜீவியத்தில்'' புதிதும் ஜீவனுமான மார்க்கத்தில் நடந்துகொண்டு தர்சுப்பட்டணத்தில் ஓர் மதிப்பிற்குரிய கிறிஸ்தவ வியாபாரியாக அங்கேயே நிம்மதியான கிறிஸ்தவ ஜீவியம் செய்திருக்க முடியும். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. அவர் கிறிஸ்துவைப் பற்றும் தியானத்தால் உந்தப்பட்டு, இவ்வாழ்விற்குரிய அருமையானதையெல்லாம் விலைக்கிரயமாகக் கொடுத்து, தன் முழுமையும் தன்ஆண்டவருக்கு அர்ப்பணித்தார்.

200–ஆண்டுகளுக்கு முன்பு, இரண்டு மொரேவியன் சகோதரர்கள், வெஸ்ட் இன்டீஸில் (West Indies) ஓர் அடிமைகளின்–காலனி (Slave Colony) இருப்பதைக் கேள்விப்பட்டார்கள். அந்தத் தீவுக்குச் சென்று

அங்குள்ள அடிமைகளுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்காக, தங்களின் எஞ்சிய வாழ்நாள் முழுவதையும் அவர்களாகவே முன்வந்து தங்களை இந்த சகோதரர்கள் அடிமைகளாக விற்றுவிட்டார்கள்! இது போலவே, ஆப்ரிக்காவில் ஓர் குஷ்டரோகிகளின் காலனி இருப்பதாக வேறு இரண்டுபேர் கேள்விப்பட்டார்கள். அக்கொடிய நோய் பரவி விடும் என்ற அச்சத்தால் அங் கிருந்து ஒருவரும் வெளியே போகவோ அல்லது உள்ளே வரவோ அனுமதிக்கப்படுவதில்லை. இந்த இரு சகோ தரர்களோ கிறிஸ்துவை அக்காலனி மக்களுக்கு வழங்குவதற்காகத் தங் களின் மீதியான வாழ்க்கை முழுவதையும் அக்குஷ்டரோகிகளின் காலனிக்கென்று தங்களை அர்ப்பணித்துவிட்டார்கள்! ஆம், நித்தியத் தில் நாம் இப்படிப்பட்ட புருஷர்களைக் கண்டு, அவர்களைக் கிறிஸ்து வின் மணவாட்டியாவதற்குத் தகுதிப்படுத்தியதெல்லாம் அவர்களிடம் காணப்பட்ட கிறிஸ்துவின் சுபாவமாகிய ''தங்களுக்கானதைத் தேடா திருந்தார்கள்'' என்ற உண்மையை அறிந்துகொள்ளப்போகிறோம்.

இத்தியாகப் புருஷர்களோடு ஒப்பிடும்போது, நம் வாழ்க்கை யும் பிரயாசங்களும் எவ்வளவு ஆழமற்றதாய் இருக்கிறது என்பதைக் காண்கின்றோமே! இவ்வித புருஷர்களைக் காட்டிலும் நாம் ''அதிக மான சத்தியங்களை'' அறிந்ததினிமித்தம், அவர்களைக் காட்டிலும் நாம் இயேசுவை மேன்மையாகப் பின்பற்றுகிறோம் என எண்ணிக் கொள்வதெல்லாம் பெருமையின் மதியீனம் அல்லவா? தேவாதி தேவ னை சேவிப்பதற்கு நீங்கள் இதுகாறும் என்னத்தை செலவு செய்துள் ளீர்கள்? உங்கள் பணம், வசதி, சரீர சுகங்களை இழந்து அவரை சேவித்தது உண்டா? உங்கள்பதில், ''அனேகமாய் ஒன்றும் இல்லை'' அல்லது ''மிகவும் கொஞ்சம்'' என்பதாய் இருக்கிறதா? இது உங்களைத் தாழ்மைப்படுத்தி சிந்திக்கத்தூண்டுவதாக!!

ஆங்கிலம் படிக்கத்தெரிந்த ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஹட்சன் டெய்லர், C.T.ஸ்டட், டேவிட் பிரெய்னார்டு, வில்லியம்கேரி, வில் லியம் பூத், ஜிம் இலியட் ஆகியோர்களின் சுய சரிதையைக் கண்டிப் பாக வாசிக்கவேண்டும். சவால் நிறைந்த இவர்களின் வாழ்வு உங்கள் உள்ளத்தை இறுகப்பற்றட்டும்! பரிசுத்தாவியானவரும் நம் விசு வாசத்தை ஊக்குவிப்பதற்காகவே அனேக தியாக புருஷர்களை மாதிரி யாகக் காட்டி எபிரேயர் 11-ம் அதிகாரத்திலும், பவுலின் வாழ்க்கையை 2 கொரி 11-ம் அதிகாரத்திலும் எழுதிவைத்துள்ளார். இவ்வித அனேக உத்தம சாட்சிகள், சுயத்தையும்-தன் குடும்பத்தையும்-சுக ஜீவியத்தை யும் மையமாகக் கொண்டதோர் கிறிஸ்தவ ஜீவியத்திலிருந்து நம்மை விடுதலையாக்கி, கிறிஸ்துவைப் பற்றும் தியான (அர்ப்பண) வாழ் விற்குள் நம்மைத் தீவிரித்து நடத்தட்டும்!!

5. பெலிஸ்தியர்களுக்கெல்லாம் (பாவங்களுக்கெல்லாம்) தலைமையான ''தனக்கானதைத் தேடும்'' ராட்சதன் கோலியாத்தின் தலையைக் கொய்வதே உண்மை வெற்றி! இவ்விதம் தேவனுக்கானதை தேடுவோர்களைக் கொண் டே பாதாளத்தின் வாசல்களும் மேற்கொள்ளாத சபை கட்டப்படுகிறது!!

''விலையுயர்ந்த முத்தை'' வாங்கும் கிரயமானது, ஒருவன் தனக்குண்டானவைகள் எல்லாம் வெறுத்துவிடும்போது மாத்திரமே கிட்டும் என இயசேு கூறினார் (மத். 13:46; லூக் 14:33). இந்த உலகம் எவைகளை அருமையானது எனப் பற்றிக்கொண்டிருக்கிறதோ அவைகளை எல்லாம் விட்டுவிடுவதுதான் இயேசுவுக்கு உண்மையான தேவ பக்தியாய் இருந்தது. பவுலும் (விலையுயர்ந்த முத்தாகிய) ''கிறிஸ்துவை ஆதாயம்'' கொள்ளும்படி எல்லாவற்றையும் நஷ்டமென்றுவிட்டார்.

அங்கொன்றும் இங்கொன்றுமாக சிறுசிறு பெலிஸ்தியர்களை நீங்கள் வீழ்த்தியதற்காக வீண்பெருமை கொண்டமைக்கு இனிமேலாவது முற்றுப்புள்ளி வையுங்கள்! அங்கே கொக்கரித்து நின்றுகொண்டிருக்கும் கோலியாத்தைப் பாருங்கள்!! ''தனக்கானதைத் தேடும்'' இந்தக் கொடூர ராட்சதன் மீது குறிவைத்து, உங்கள் 'கவண்கல்' சுழலட்டும்!! ஆம், 'உண்மையான வெற்றியே' உங்கள் தேவையென்றால், இக்கோலியாத்தின் தலை நிச்சயமாய்க் கொய்யப்பட வேண்டும். இந்த உலகத்தில் நாம் வெறுக்கும்படி இயேசு குறிப்பிட்ட ஜீவியம், இந்தத் ''தனக்கானதைத் தேடும்'' ஜீவியமே! (யோ. 12:25).

உங்களின் ஏராளமான கிரியைகளையும், நீங்கள் முடிவுசெய்யும் தீர்மானங்களையும் கறைப்படுத்தும் ''சுயம்–மையம்'' கொண்ட (தனக்கானதைத் தேடும்) வாழ்வை காணவேண்டுமே என வாஞ்சித்து ஒளியில் நடவுங்கள்! அவ்வெளிச்சத்தில் நீங்கள் கண்டுபிடிக்கும் இவ்வித சுயவாழ்விற்கு தயவு தாட்சண்யமின்றி கடுமையாய் நியாயதண்டனை வழங்குங்கள்!! அப்படியென்றால், இந்த ராட்சதன் கொஞ்சம் கொஞ்சமாய் ஜெயிக்கப்பட்டு முடிவில் முழுமையாக வெட்டப்பட்டு போவான்!!

''என் சபையைக் கட்டுவேன்!'' என இயேசு பேசியபிறகுதான், பேதுருவிடம், நீ தேவனுக்கேற்றதை சிந்தியாதபடியால், எனக்கு இடறலாயிருக்கிறாய் என்று கூறினார் (மத். 16:18–23). ஆம், கிறிஸ்து மாம்சத்தில் வெளிப்பட்டார் என்ற சத்தியத்தை மூளை அறிவில் ஏற்றுக்கொண்டு, அற்பமான கொஞ்சம் பெலிஸ்தியர்களைக் கொன்றவர்கள் அல்ல! தனக்கானவைகளைத் தேடாமல் தேவனுக்கானவைகளைத் தேடுவோர்களைக் கொண்டே பாதாளத்தின் வாசல்களும் மேற்கொள்ளாத அவரின் சபை கட்டப்படுகிறது!!

கேட்பதற்கு காதுள்ளவன் எவனோ
அவன் கேட்கக்கடவன் !

– சகரியாபூணன்

8

"அன்பின் தயை நிறைந்த நாவு !"

(A TONGUE FULL OF KINDNESS)

"'தயையுள்ள போதகம்'' (LAW OF KINDNESS) அவள் நாவின் மேல் இருக்கிறது'' என குணசாலியான ஸ்திரீயின் நாவைக் குறித்து நீதி.*31:26*– பூரிப்புடன் கூறுவதைப் பாருங்கள்! ஆங்கில வேதாகமத்தின்படி கூறவேண்டுமென்றால், குணசாலியான ஸ்திரீயின் நாவு ''அன்பின் பிரமாணத்திற்கே'' கட்டுப்பட்டிருக்கிறது என இன்னும் சற்று மேன்மையாகக் கூறுவதைக் காணலாம். அதாவது, தயையுடன் கூடிய அன்பின் வார்த்தைகளைத் தவிர வேற்றுமையான ''கரடு முரடான'' வார்த்தைகளை அவள் நாவில் எக்காலத்தும் காண முடியாது என்பதே அதன் பொருளாகும்!

அதேபோல், உன்னதப்பாட்டில் நாம் காணும் சூலமித்தியாளைக் குறித்து அவள் மணவாளன் கூறும்போது ''என் மணவாளியே! உன் நாவின் கீழ் தேனும் பாலும் இருக்கிறது'' என வியந்து கூறினான் (உன்ன.*4:11*). ஆனால் இதற்கு நேர்மாறாக ''அவர்களுடைய உதடுகளின் கீழே பாம்பின் விஷம் இருக்கிறது. அவர்கள் வாய் சபிப்பினாலும் கசப்பினாலும் நிறைந்திருக்கிறது'' என தேவனை அறியாதவர்களைக் குறிப்பிட்டுக் கூறும்போது பவுல் வேதனையுடன் எழுதினார் (ரோ.*3:13,14*). சூலமித்தியாள் மீது அவளுடைய மணவாளன் கொண்டிருந்த காதலுக்கும், ஈர்ப்புக்கும் அவளின் ''வாயின் மொழிகள்'' தான் காரணமாகும்! எனவேதான் இப்புத்தகத்தின் கடைசி அதிகாரத்தில், தன் கடைசி வார்த்தைகளால் தன் மணவாளியை அழைக்கும் போது, ''தோட்டங்களில் வாசம் பண்ணுகிறவளே! தோழர் உன் சத்தத்தைக் கேட்கிறார்கள்; நானும் அதைக் கேட்கட்டும்!!'' என கூறி முடித்தான் (உன்.*8:13*).

அன்று ஏதேன் தோட்டத்தில், தன் கணவனாகிய ஆதாம் ''அமைதியாய்'' அருகில் இருக்க, சர்ப்பமாகிய சாத்தானோடு ''நீண்ட சம்பாஷணை'' செய்து கீழ்ப்படியாமைக்குள் பிரவேசித்தவளே இந்த

ஏவாள் என்பதை நாம் அறிவோம். இவ்வாறு தன் கீழ்ப்படியாமையின் உரையாடலினால் ஏவாளே ''முதலாவது'' வஞ்சிக்கப்பட்டபடியால், அவள் சபையில் ''உபதேசம்'' செய்யக் கூடாது எனவும், சபையில் ஏதேனும் தங்களுக்குத் தெரியாத ஒன்றை விசாரித்துக் கற்றுக்கொள்ள விரும்பினால், அதை வீட்டிற்குச் சென்று தன் புருஷரிடத்தில் விசாரித்துக் கொள்ளட்டும். இதை மீறி ஸ்திரீகள் சபையில் பேசுவது ''அயோக்கியமானது!'' எனவும் பவுல் கட்டளையிட்டார் (1தீமோ. *2:12; 1*கொரி. *14:34,35*). இவ்வளவு பின்தங்கிய நிலையிலுள்ள இந்த ஸ்திரீயின் ''நாவு'' நேசரின் விருப்பத்திற்குரிய அன்பின் பிரமாணத்திற்கு கட்டுப்பட்டதாய் மறுரூபமடைந்து ''உன் சத்தத்தை நான் கேட்கட்டும்'' என மணவாளன் ஆர்வமுடன் கூறும்படி மாறிவிட்டதே! இது நம் யாவருக்கும், மிகுந்த சவாலாய் இருக்கிறதல்லவா!! இன்று, மணவாளனாகிய கிறிஸ்துவுக்கு நாம் யாவருமே (கிறிஸ்துவுக்குள் ஸ்திரீகளும், புருஷர்களும்) மணவாளியாய் உருவகப்படுத்தப்பட்டிருப்பது உண்மையிலேயே சுவிசேஷம் நமக்களித்த ''சமத்துவத்தின்'' மகிமையென்றே கூறலாம்.

எந்தச் சூழ்நிலையானாலும், எவ்வித மனிதர்கள் மத்தியிலும் மேற்கண்ட ''அன்பின் தயை நிறைந்த நாவு'' எப்போதும் வேண்டும் என்ற தாகம் உங்கள் உள்ளத்தில் இருக்கிறதா? எந்த ஆவிக்குரிய நற்பலனையும் பெறுவதற்கு இந்த ''தீராத தாகமே'' முதல் படியாய் இருக்கிறது!

இவ்வாறு தங்கள் ஆவியின் தரித்திரத்தை உணர்ந்து தேவ நீதியின் மேல் பசிதாகம் கொண்டவர்களை இயேசு பாக்கியவான்கள் என்றார்.

''நல்ல நாவைப்'' பெறும்படி இயேசு கற்பித்த ''வழி'' மிக முக்கியமான புதிய ஏற்பாட்டுப் போதகங்களில் ஒன்றாகும். இதை மத்தேயு *12:33,34,35* வசனங்களில் இயேசு கூறும்போது, ''மரம் நல்லதென்றால், அதின் கனியும் நல்லதென்று சொல்லுங்கள்; மரம் கெட்டதென்றால், அதின் கனியும் கெட்டதென்று சொல்லுங்கள். மரமானது அதின் கனியினால் அறியப்படும்... இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்... நல்ல மனுஷன், இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக் காட்டுகிறான்... பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக் காட்டுகிறான்'' எனக் கூறினார்.

பார்த்தீர்களா? ''நல்ல இருதயமே'' நாம் கவனம் கொள்ள வேண்டிய பகுதியென இயேசு சுட்டிக்காட்டினார். மாறாக, ''உங்கள் நாவை'' நீங்கள் கட்டுப்படுத்துவதால், ''நல்லவைகளைப் பேசும் நாவை'' நீங்கள் பெற்றுவிட முடியாது. உங்கள் ''இருதயத்தின் நிறைவு'' என்னவோ அதைத்தான் உங்கள் நாவும் பேசும்! எனவேதான் ''நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க நலமானவைகளை எப்படிப் பேசுவீர்கள்?'' என இயேசு வினவினார் (வசனம்.*34*).

ஒரு சகோதரன், தன் வீட்டிற்கு வந்த சகோதரனிடம் தன் குடும்பப் படத்தைக் காட்டினான். அந்தப் படத்தைக் கண்ட அந்த சகோதரன் ''இது என்ன, உங்கள் சின்ன மகளின் மூக்கு சப்பையாய் இருக்கிறதே'' எனக் கூறினார். உண்மையிலேயே அந்த மகளின் மூக்கு சப்பையாய் தான் இருந்தது. ஆனால் அவர் சென்ற பின்பு, சற்று நேரம் கழித்து வந்த மற்றொரு சகோதரனிடமும் இவர் தன் குடும்பப்படத்தைக் காட்டினார். இந்த சகோதரனோ, ''உங்கள் சின்ன மகளின் கண்கள் நட்சத்திரம் போல் பிரகாசமாய் உள்ளதே! என்ன கருகருவென்ற சுருட்டை முடி!'' எனக் கூறினார். இந்த இரு சகோதரர்களில்தான் எத்தனை வித்தியாசம் இருக்கிறது! ஒருவன் ''நல்ல மனுஷன்'' மற்றொருவன் ''பொல்லாத மனுஷன்!'' ஆம், இவர்களின் ''கனியை'' வைத்துத்தான் (வாயின் வார்த்தைகளை வைத்துத்தான்) ''நல்லமரம்'' ''கெட்ட மரம்'' (நல்ல மனுஷன், கெட்ட மனுஷன்) என இயேசு வகை பிரித்தார்!

பல ஆண்டுகளுக்கு முன்பு ஒரு ஊரில் வாழ்ந்த பக்தியுள்ள சாதுவைக் குறித்து நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த ஊரில் யார் மரித்தாலும், அவர்களிடமுள்ள ''நல்லவைகளை'' இந்த சாது தன்னைச் சுற்றியுள்ளவர்களிடம் கூறுவது வழக்கம். ஒரு சமயம் இந்த சாதுவுக்கு நேரடியாகவே தீமைகள் செய்த ஒரு மனிதன் இறந்தபோது, அவரைச் சுற்றியுள்ளவர்கள், இச்சமயம் சாது அவனுடைய தீமைகளைக் கண்டிப்பாய் பேசுவார் என எதிர்பார்த்தார்கள். அவர்கள் கணிப்பின்படி, இறந்த அந்த மனிதனிடம் ஒரு நன்மைகூட இல்லவே இல்லை. அந்த சாதுவோ, இறந்த அந்த மனிதனைப் பற்றிக்கூறும்போது ''அதிகாலமே, அவன் இக்குளத்தில் வந்து குளிப்பான். தன் ஆடையை அவனே சுத்தமாகத் துவைத்து உடுத்துவான்! அவன் உடலிலிருந்து ஒருநாள்கூட துர்நாற்றம் வீசி நான் பார்த்ததேயில்லை!!'' என்றெல்லாம் கூறிக்கொண்டே சென்றார். இவ்வாறு தாங்கள் காணமுடியாத ''நல்லவைகளை'' இந்த சாது கண்டிருக்கிறாரே என்பதையறிந்த அங்கிருந்தவர்கள் தங்கள் நிலையைக் குறித்து வெட்கமடைந்தார்கள். இதில் ரகசியம் என்னவென்றால் அந்த சாதுவின் இருதயம் ''நல்லதாய்'' இருந்தது, அவ்வளவுதான்!

நாம் எல்லோருமே அவ்வப்போது ''இனிமையாயும்'' அவ்வப்போது ''தயவாயும்'' அவ்வப்போது ''அன்பாயும்'' பேசுகிறவர்கள்தான். ஆனால் இவ்வித ''அவ்வப்போது'' உள்ள நிலை, இன்று எல்லா மானிடரும் கொண்டுள்ள ''நல்லவனுக்கு நல்லவன்.... கெட்டவனுக்கு கெட்டவன்'' என்ற சூத்திரத்தை மையமாய் வைத்துத்தான் உள்ளது என்பதை நாம் ஒத்துக்கொள்வதற்கு கடினமாயிருக்காது என்றே நம்புகிறேன். இந்த ''அவ்வப்போது'' அன்பின் தயை பொருந்திய நாவை இயேசு நமக்குப் போதிக்கவேயில்லை! எப்போதும் ''நல்ல மரமாய்'' இருந்து ''நல்லகனி'' கொடுப்பதையே இயேசு நமக்குப் போதிக்கிறார்.

இதை யாக்கோபு கூறும்போது ''ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமோ?'' என்று கேட்டார் *(யாக்3:11)*.

ஆகவே, அவ்வப்போது ''தித்திப்பும்'' அவ்வப்போது ''கசப்பும்'' சுரக்கும் உங்கள் ஊற்றுக்கண் பொல்லாதது என்பதை ஒத்துக் கொள்ளுங்கள்!

இருதயமே ''ஊற்றுக்கண்'' என்றும் இங்கிருந்துதான் 'கசப்பானவைகள்' வருகிறது எனவும் தொடர்ந்து 14–ம் வசனத்தில் யாக்கோபு கூறினார்.

இந்த இடத்தில், ''ஜென்ம சுபாவமான ஞானம்'' கொண்டிட மானிடர்கள் முயலுவார்கள் என்பதையும் யாக்கோபு குறிப்பிடத் தவறவில்லை. சில குறிப்பிட்ட மார்க்கத்தினர் தங்கள் வாயில் ''பிளாஸ்டர்'' போட்டுக் கொள்வார்கள் என்பது நமக்குத் தெரியும். இப்படிச் செய்துவிட்டால், தீமை பேசாமல் நம்மைக் காத்துக் கொண்டதாக அர்த்தமா? ஒருவேளை உங்களைக் கட்டுப்படுத்தி நீங்கள் ''தீய வார்த்தைகளை'' பேசாதிருந்தது உண்மையாய் இருக்கலாம். ஆனால் ''உங்கள் இருதயத்தின்'' கசப்பை உங்களால் அடக்கிவிட முடியாதே! அல்லது, இருதயத்தில் கசப்பும் விரோதமும் வைத்துக்கொண்டு, நாவில் இனிய வார்த்தைகளை வைத்துகூட நீங்கள் கட்டுப்பாடோடு பேசிவிட முடியும். இதை சுட்டிக்காட்டி யாக்கோபு கூறும்போது, இருதயத்தில் கசப்பு வைத்துக் கொண்டு, வாயில் 'தித்திப்பான' வார்த்தைகளைப் பேசிய நீங்கள் ''சத்தியத்திற்கு (உண்மையான உங்கள் இருதயத்திற்கு) விரோதமாய்ப் பொய் சொல்லிவிட்டீர்கள்'' *(யாக் 3:14)* என்றே கூறினார்.

''பரத்தின் ஞானமோ'' மாயமற்றதாயிருக்கும் (வசனம் 17). அது முதலில் உங்கள் இருதயத்தையே சுத்திகரிக்கும்! இந்த செயலை நாமாகவே செய்திட முடியாதே! ஆகவேதான், ''பரிசுத்த ஆவியானவரை'' கிறிஸ்து நமக்குத் தந்திருக்கிறார். அவருடைய உதவியினால் நம்முடைய இருதயமாகிய ஊற்றுக்கண் ''நல்ல இருதயமாய்'' மாறிட தேவன் கிருபை செய்கிறார். இப்போது, நாம் எவ்வளவாய் பரிசுத்தாவியின் அபிஷேகத்தை நாள்தோறும் சார்ந்திருக்க வேண்டியதாய் இருக்கிறது என்பதைப் பாருங்கள்!

இயேசுவின் அங்கத்தைக் குறித்து பரிசுத்தாவியானவர் வியந்து குறிப்பிட்டது அவருடைய ''வாய்'' மட்டுமே! கனி நல்லதென்றால் மரமும் நல்லதுதானே!! ஏசாயா 53–ம் அதிகாரம் முழுவதும் இயேசுவின் பாடுகளைக் குறித்தே எழுதியிருக்கிறது. அதில், ''அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார்...... ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை'' (வசனம் 7) ''அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்'' (வசனம் 7) ''அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை'' (வசனம் 9) என மூன்று தடவை அவர் ''வாயை'' வியந்து எழுதியிருப்பதைப் பாருங்கள்.

இயேசுவின் அன்பு மாயமற்றது! அவர் வாயில் மௌனமாய் இருந்ததுபோலவே, ''இருதயத்திலும்'' அமைதியாகவே இருந்தார்.

அதே சமயம், தன் பாடுகளின் நேரத்தில் அவர் வாய்திறந்த போதெல்லாம் ''பிதாவே இவர்களுக்கு மன்னியும்'' என்றேதான் கூறினார். தன்னையும், தன் சொந்த வாழ்வையும் பொறுத்தவரையில் ''பிறரை மன்னிப்பதும், ஆசீர்வதிப்பதுமே'' அவர் வாயிலிருந்து புறப்பட்டுவந்தது. ''அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும்.....'' இருந்ததைக் குறிப்பிட்டே ''அவர் பாவம் செய்யவில்லை! அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை'' என பேதுரு வியந்து எழுதினார் (1பேதுரு 2:22,23).

என்னிடம் தீமை பேசியவர்களிடம் பதிலுக்குத் தீமை பேசவில்லை என்பதில் மாத்திரம் பூரண மகிமையில்லை. ''உங்களைச் சபிக்கிறவர்களை நீங்கள் ஆசீர்வதித்திட'' உங்களால் முடிகிறதா? இப்படிச் செய்பவர்களே, ஒரே பேரனா குமாரன் இயேசு கிறிஸ்துவைப்போல், நீங்களும் ''பிதாவுக்குப் புத்திராயிருப்பீர்கள்'' என இயேசு கூறினார் *(மத்.5:44,45)*. இவ்வாறு நீங்கள் பிறரை ஆசீர்வதிப்பது ''உதட்டில்'' அல்ல ..... இருதயத்தின் ஊற்றுக்கண்ணிலிருந்து வரவேண்டும்! அதுவே, இயேசு குறிப்பிட்ட''பிதாவின் பூரண சற்குணம்'' ஆகும்!! *(மத்.5:48)*.

''தீமைக்குத் தீமை சரிக்கட்டாமல்... நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி அழைக்கப்பட்டவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள்'' என 1பேதுரு *3:9*–ல் வாசிக்கிறோம். கர்த்தர் ஆபிரகாமிடம் ''நான் உன்னை ஆசீர்வதித்து ..... நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்'' *(ஆதி.12:2)* எனக் கூறிய வசனத்தை நாம் யாவருமே அறிந்திருக்கிறோம். ஆனால் இங்கு பேதுரு ''பிறரை ஆசீர்வதித்து (குறிப்பாய் தீமை செய்தவர்களை ஆசீர்வதித்து) அதன் மூலம் ஆசீர்வாதத்தைச் சுதந்தரிக்கும்'' வழியை நமக்குக் கற்றுக் கொடுப்பதை உங்களால் காண முடிகின்றதா? இவ்வுலகத்தில் உள்ள பொன்னும் பொருளும் அல்ல,''கர்த்தரின் ஆசீர்வாதமே'' மெய்யான ஐசுவரியம் (நீதி.10:22) என்பதை அறிந்தவர்கள் அவரின் ஆசீர்வாதத்திற்காய் நிச்சயம் ஏங்குவார்கள். இந்த ஏக்கம் கொண்டவர்கள், அவரின் ''ஆசீர்வாதத்தைச்'' சுதந்தரிக்க ''பிறரை ஆசீர்வதிப்பதை'' வழியாகக் காணும்போது, அவர்கள் உள்ளம் பரவசம் கொள்ளாதா? இந்தப் பரவசம் உங்களிடம் உள்ளதா? ஆம், நம் இருதயம் நன்மையினால் நிறைந்து பிறரை..... அது யாராயிருந்தாலும் மனப்பூர்வமாய் அவர்களை ஆசீர்வதித்து வாழ தீவிரம் கொள்வோமாக!

''கிறிஸ்துவின் தயவு'' (GENTLENESS OF CHRIST) என பவுல் குறிப்பிட்டார் (2கொரி.10:1). இதை கிறிஸ்துவின் மென்மையான நற்குணம் என ஆங்கில வேதாகமம் கூறுகிறது. இந்த 'மென்மையான' நற்குணத்தை, நம் நாவின் மொழிகளையும், நம் முகபாவனையையும்

வைத்தே கண்டுகொள்ள முடியும்.

வீட்டிற்கு வரும் உறவினர் அல்லது விருந்தாளிகளிடம் 'இனிய' வார்த்தைகளைப் பேசி 'புன்னகை' முகம் காட்டும் நாம், நம்மோடு பலகாலமாய் வாழ்ந்து கொண்டிருக்கும் மனைவியிடமும், புருஷனிடமும், பிள்ளைகளிடமும் .... இன்முகம் காட்டி இனிய வார்த்தைகளைப் பேசுவதில்லையே?

அல்லது, உறவினர் வீட்டில் இருக்கும்போது புருஷனிடமும் மனைவியிடமும் இன்முகம் காட்டி இனிய வார்த்தைகளைப் பேசிய நாம், உறவினர் சென்றவுடன் முகபாவனை மாறி கடுஞ்சொல் பேசுகிறோமல்லவா? இவ்வித நம் செயல், நம் ஆவியில் உள்ள தரித்திரத்தை நமக்குச் சுட்டிக்காட்டுகிறதல்லவா? நாம் துயரம் கொண்டு, இருதயத்தின் ஆழத்தில் மனம் திரும்பக்கடவோம்.

பிள்ளைகளிடம் நாக்கைத் துருத்திப் பேசுவதும், அநாகரீக மொழியில் திட்டுவதும், ''நறுக்கென்று'' குத்தும்படி வார்த்தைகளை அம்புபோல் எய்வதும், முறைத்துப் பேசுவதும், நெற்றியை சுருக்கிப் பேசுவதும்.... கிறிஸ்துவின் மென்மையான நற்குணத்திற்கு நேர்விரோதமானதல்லவா? இவ்வாறெல்லாம் நடந்து, நம் மனைவி, புருஷன், பிள்ளைகள், அலுவலகத்திலுள்ளவர்கள், உற்றார் உறவினர்கள்... போன்ற அனேகரை நாம் எவ்வளவாய் மனம் நோக வைத்து தீமை செய்துவிட்டோம் என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள்.

நம்முடைய பிள்ளைகள் வீட்டில் ஒருவருகொருவர் பேசிக்கொள்ளும்போது அல்லது பிள்ளைகள் நம்மிடம் பேசும்போது ஒருவித அன்பற்ற முகச்சுளிப்போடு பேசுவதைக் கண்டால் நாம் என்ன செய்ய வேண்டும்? ஒவ்வொருநாளும் உங்களை நியாயம் தீர்த்து வாழ்கின்ற சகோதரனாய் அல்லது சகோதரியாய் நீங்கள் இருப்பீர்களென்றால், பிள்ளைகள் பிரதிபலித்த முகச்சுளிப்பு உங்களிடமிருந்து அவர்கள் கற்றுக்கொண்டது தான் என்பதைத் துரிதமாய் கண்டுகொள்வீர்கள். நீங்கள் தெய்வபயத்தோடு வாழ்கின்றவராய் இருந்தபோதும், உங்கள் முகபாவனைகளை நீங்களே காணாதவராய் இருக்க முடியும். அதைக் 'கண்ணாடிபோல்' நம் பிள்ளைகள் பிரதிபலிப்பதைக் காணும் எந்த உத்தம கணவனும், மனைவியும் துரிதமாய் மனந்திரும்பி திவ்விய சுபாவத்தில் வளருவார்கள்.

''இயேசுகிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளி'' என 2கொரி 4:8-ல் வாசிக்கிறோம். அதேபோல், ஸ்தேவானை ஆலோசனை சங்கத்திற்கு முன்பாக நிறுத்தி, அவன் மீது பொய்க்குற்றங்களை சுமத்தியபோது ''அவன்முகம் தேவதூதன் முகம் போலிருக்கக் கண்டார்கள்'' எனவும் அப்.6:15-ல் வாசிக்கிறோம். ஆகவே நம் ''முகபாவத்தில் திவ்விய சுபாவம்'' அடைந்திட நாடுவதும் ''பூரணத்தை நோக்கி'' கடந்து செல்லும் வாழ்க்கையில் மிகவும் முக்கியமாகும்.

உங்கள் ''கடுஞ்சொல்லைவிட'' உங்கள் ''முகச்சுளிப்பு'' அல்லது உங்கள் ''நெற்றியை சுருக்குதல்'' அதிகக் கொடிய தென்றே கூறலாம்.

ஒரு பக்தன் கூறும்போது, இயேசு கிறிஸ்து நம் கைகள் செய்த பாவங்களுக்காய் கைகளில் ஆணியடிக்கப்பட்டார், கால் செய்த பாவங் களுக்காய் கால்களில் ஆணியடிக்கப்பட்டார்.... அதேபோல் நம் ''நெற்றியைச் சுருக்கும்'' பாவங்களுக்காய் நெற்றியில் முள்முடி சூட்டப்பட்டார்! எனக் கூறினார். உண்மைதான், நாம் இன்றிலிருந் தாவது இக்கொடூர முகபாவத்திலிருந்து விடுதலைபெற பரிசுத்தாவி யின் உதவியை நாடுவோமாக!!

''ஒருவனையும் தூஷியாமல்'' என்ற தீத்து 3:2 வசனத்தை நாம் யாவருமே அறிந்திருக்கிறோம். ஆனால் எவ்வளவு சீக்கிரத்தில் பிறரைக் குறித்து தீமையாய் அவர் முதுகுக்குப்பின்னால் பேசிவிடுகிறோம். 'புறங்கூறுதல்' என்ற வார்த்தை ஆங்கிலத்தில் BACK BITE என்றே கூறப் படுகிறது. அதாவது, ஒருவரின் முதுகுக்குப் பின்னால் சென்று அவரைக் கடித்துக் குதறுவதே அதன் பொருளாகும். ஒருவன் தவறு செய்யும் போது அவனைத் தனியே சந்தித்து ''நேருக்கு நேராய்'' நின்று அவன் தவற்றை உணர்த்தும்படியே இயேசு கட்டளையிட்டார் (மத்.18:15). அப்படிச்செய்வது பாவமல்ல... மாறாக, உண்மை சிநேகிதனே இவ் வாறு நேருக்குநேராய் நின்று தவறுகளை உணர்த்துவான். ஆனால் அவர் முதுகுக்குப் பின்னால் அதே காரியத்தை நீங்கள் மற்றவரிடம் பேசுவது 'கொடிய செயல்' என்பதை அறியக்கடவோம். அக்காலத்தில், போர் களத்தில் சண்டை நடந்துகொண்டிருக்கும்போது ஒரு வீரனை எதிராளி வீரன் முதுகுக்குப்பின்னால் குத்தினால், அவ்வாறு குத்தியவன் ''கோழை'' என அழைக்கப்படுவது மரபு! இன்றும் சபையில் இவ்வித ஆவிக்குரிய கோழைகள் அநேகர் இருப்பது கொடுமையன்றோ!!

''கர்த்தத்துவத்தை அசட்டைபண்ணி, மகத்துவங்களைத் தூஷிக் கிறார்கள்'' என யூதா.8-ம் வசனத்தில் வாசிக்கிறோம். பிள்ளைகளுக்கு பெற்றோர்களும், மனைவிக்கு கணவனும், வேலைக்காரர்களுக்கு எஜமானும், சபை மக்களுக்கு மூப்பர்களும், அரசாங்கத்திற்கு அதிகாரி களும் மந்திரிகளுமென...... இவ்வாறு தேவன் நியமித்த ஆளுகை களுக்கு அடங்கி கீழ்படிந்திருக்கும்படி தேவன் கட்டளையிட்டிருந்தும், அவர்களுக்கு அடங்கியிராதது மாத்திரமல்லாமல் அவர்களை தூஷிப் பவர்கள் தங்களையே கெடுத்துக்கொள்ளுகிறார்கள் என 10-ம் வசனம் கூறுகிறது.

ஆளுகையை கர்த்தரே நியமிக்கிறார் என வாசிக்கிறோம். ஒரு காலத்தில் மிகாவேல், காபிரியேல் ஆகிய பிரதான தூதர்களுக்கு 'மேலாக' லூசிபரை தேவன் தலையான தூதனாய் வைத்திருந்தார். அவன் பிசாசாய் மாறி, தன் அபிஷேகத்தையும் இழந்தான். இருப்பினும் ''மோசேயினுடைய சரீரத்தைக் குறித்து'' பிசாசுடன் மிகாவேல் தூத

னுக்கு தர்க்கம் வந்தபோது, தனக்கு மேலாய் தேவன் ஒருகாலத்தில் வைத்திருந்த பிரதான தூதன் என்ற உணர்வுடன் அவனை மிகாவேல் குற்றப்படுத்த துணியாமல் ''கர்த்தர் உன்னைக் கடிந்து கொள்வாராக'' என்றே உரைத்தான் என யூதா.9–ம் வசனத்தில் வாசிக்கிறோமே!!

காரியம் இவ்வாறாய் இருக்க, வீட்டிலும் சபையிலும் வெளியிலும் தேவன் நியமித்த ஆளுகைக்கு நாம் கனம் தரவும், நாவினால் தீதுபேசா திருக்கவும் ஜாக்கிரதை கொண்டிருக்கக்கடவோம் [2தெச. 5:12,13].

''எல்லோரையும் கனம் பண்ணுங்கள்'' என்றே வேதம் நமக்குப் போதிக்கிறது (1பேதுரு 2:17). ''பிச்சைக்காரன் ஒருவன் வந்திருக்கிறான்'' என உங்கள் பிள்ளைகள் கூறும்போது ''பிச்சைகேட்டு ஒரு ஐயா வந்திருக்கிறார்'' என உங்கள் பிள்ளைகள் கூறும்படி நீங்கள் திருத்தலாமே! 'ஜெபத்திற்கு' ஆங்கிலத்தில் PRAYING என கூறுகிறோம். அதற்கு பொருள், பணிவுடன் கேட்கும் பிச்சையைப்போல்தான்! தேவனிடம் அதிகம் ஜெபித்து (பிச்சைக்கேட்டு) பதில் பெற்ற பக்தன், தன்னிடம் கேட்பவனுக்கு (ஜெபிப்பவனுக்கு) உடனடியாக பதில் செய்வான்! அதுவும், மிகுந்த அன்போடும் மரியாதையோடும்.... தான் தேவனிடம் பிச்சைகேட்டு பெற்ற நன்றியின் உணர்வோடு செய்வான்!!

''மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள்'' (VAIN WORDS) என இயேசு குறிப்பிட்டார். ஆம், அன்பையும் ஐக்கியத்தையும் கட்ட உதவாத எந்த வார்த்தைகளும் உபயோகமற்ற வீண் வார்த்தைகள்தான். உங்கள் சம்பாஷணை, ஒரு குடும்பத்தில் பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும், கணவனுக்கும் மனைவிக்கும், எஜமானனுக்கும் வேலைக்காரனுக்கும், மூப்பருக்கும் சபை மக்களுக்கும்.... ஐக்கியத்தையும் நம்பிக்கையையும் வளர்க்கும்படியே இருப்பதாக! ஒருவருக்கொருவர் கசப்பையும், விரோதத்தையும், பிரிவினையையும் உண்டாக்கும் அன்பற்ற வீண் வார்த்தைகளுக்குத் தூர தூர விலகியிருக்கக்கடவோமாக!

நாவை அடக்க ''ஒரு மனுஷனாலும்'' கூடாது என்ற வசனம் நூற்றுக்கு நூறு உண்மையானதுதான் (யாக்.3:8). ஆனால்,அதேசமயம் மனுஷனால் கூடாதது, தேவனால் கூடும் என்பதும், விசுவாசிக்கிறவர்களால் எல்லாம் கூடும் என்பதும் நூற்றுக்கு நூறு உண்மையானதேயாகும்! பரிசுத்தாவியின் அபிஷேகத்தால் ஒவ்வொரு நாளும் நிறைந்து, அந்த ''அக்கினிமய நாவுகள்'' நம் நாவை சீர்திருத்தி எப்போதும் அன்பின் தயை நிறைந்த நாவாய் நம் அனைவரையும் மாற்றுவதாக!! ஆமென்.

– T. ரத்தினக்குமார்

9

அந்நியபாஷை பேசுவதைக் குறித்த சத்தியங்கள் !

(THE TRUTH ABOUT SPEAKING IN TONGUES)

''நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்து உண்டாகி, ஜோதிகளின் பிதாவினடத்திலிருந்து இறங்கி வருகிறது. அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமை நிழலுமில்லை''என யாக்கோபு 1:17 கூறுவதை நாம் யாவரும் அறிந்திருக்கிறோம்.

தேவன் ஒரு போதும் தவறு செய்வதே இல்லை! அவர் ஒன்றைக் கொடுத்தால் அது ''பூரண வரமாய்த்தான்'' (Perfect Gift) எப்போதும் இருக்கும். இந்த அவருடைய குணாதிசயங்கள் என்றென்றும் நிலைத்திருக்கும். அதில் அவர் மாறுவதில்லை என யாக்கோபு கூறினார். ஆகவே பெந்தெகொஸ்தே நாளில் தேவன் சபைக்கு ''அந்நியபாஷை பேசும் வரத்தை''(TONGUES – டங்க்ஸ்) அளித்தபோது, தான் சபைக்கு செய்திருக்கும் செயலை நன்கு அறிந்திருந்தார்.''இப்படி, இந்த வரத்தைத் தந்துவிட்டோமே!'' என சிந்தித்து அவர் தன்னுடைய மனதை மாற்றிக் கொள்ளவேயில்லை! ஆம், அவர் என்றென்றும் மாறாதவராகவே இருக்கிறார். ஆகவே அந்நியபாஷை வரம், திட்டமும் தெளிவுமாக ''பூரணமான வரமேயாகும்!!''

இந்த வரத்தின் பின்னணியில், அதுவும் குறிப்பாக நாம் வாழும் இந்த இருபதாம் நூற்றாண்டில் ஏராளமான குளறுபடிகள் இவ்வரத்தினிமித்தம் உண்டாகும் என்பது தேவனுக்கு நன்றாகத் தெரியும். இருப்பினும், சபை தன்னுடைய ஊழியத்தை நிறைவேற்றுவதற்கு இந்த வரம் மிகவும் தேவையானது என்பதையும் தேவன் அறிந்திருந்தார்!

பிரதான சத்தியங்களாகிய திரித்துவம், கிறிஸ்துவின் தெய்வத்தன்மை, கிறிஸ்துவின் மனிதத்தன்மை, பரிசுத்தாவியின் ஆள்தன்மை... போன்ற சத்தியங்கள் கிறிஸ்தவ சரித்திரத்தில் பல விதத்தில் எதிர்க்கப்

பட்டு குளறுபடிகளைச் சந்தித்திருக்கிறது. ஆகவே, தேவன் தந்த வரமாகிய ''நவநாவுகளும்'' (TONGUES) குளறுபடியாகியிருப்பது, எந்த ஆச்சரியத்தையும் நமக்குத் தந்துவிட நாம் அனுமதிக்கவே கூடாது.

இதுபோன்ற எல்லா உபதேச சத்தியங்களிலும், அவைகளைக் குறித்து வேதாகமம் என்ன சொல்லுகிறது என்பதில் மிகுந்த கவனம் செலுத்துவதே மிக முக்கியமானதாகும். ஆகவே, ''அந்நியபாஷை பேசுவதைக் குறித்து'' இதுவரை நீங்கள் கொண்டிருந்த மனப்பான் மையைச் சற்று தள்ளி வைத்துவிட்டு, இதைக்குறித்து வேதாகமம் சொல்லும் ஒவ்வொரு வசனத்தையும் மிகுந்த கவனமாய் இப்போது பார்க்கக் கடவோம்!

சத்தியம் எண் :– 1

மாற்கு 16:17 ஆம் வசனத்தில் இயேசு கூறும்போது, *''விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்... வியாதியஸ்தர்கள் மேல் கைகளை வைப்பார்கள் அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்''* எனக் கூறினார்.

இவ்வசனத்தில் இயேசு குறிப்பிட்டது என்னவென்றால், ''சில அடையாளங்கள் விசுவாசிக்கிறவர்களால் -Those who have believed நடைபெறும்'' என்பதுதான். இவ்வாறு நடைபெறும், பிசாசுகளைத் துரத்துதல், வியாதியஸ்தர்களை சொஸ்தமாக்குதல் போன்ற அடையாளங்களில் நவமான பாஷைகளை (NEW TONGUES) பேசுவதும் ஒன்றாகும். இங்கு இயேசு குறிப்பிடும் போது, இந்த எல்லா அடையாளங்களும் **ஒவ்வொரு விசுவாசியினிடத்திலும்** -EVERY BELIEVER நடைபெறும் எனக்கூறவேயில்லை. அதற்கு மாறாக, இந்த அடையாளங்கள் ''**விசுவாசிக்கிறவர்களால்**'' நடைபெறும் என்றே கூறினார்.

ஆகவே இங்கு குறிப்பிடப்பட்ட எல்லா வரங்களையும் ஒவ்வொரு விசுவாசியும் பெற்றிருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. அதேபோல், ஒவ்வொரு சபையும் இந்த எல்லா வரங்களையும் பெற்றிருக்க வேண்டியதும் அவசியமில்லை. ஆனால், இந்த வரங்கள் யாவும் ''உலகம் தழுவிய'' முழுசபையிலும் காணப்படும் என்பது உறுதி! எந்தவரத்தை யாருக்குத் தரவேண்டும் என்பதை பரிசுத்த ஆவியானவரே தம்முடைய சர்வ ஞானத்தின்படி தீர்மானிக்கிறார்.

சத்தியம் எண் :– 2

''அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத்தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்.... எல்லாரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு, ஒருவரையொருவர் பார்த்து.... நாம் நம்முடைய பாஷைகளிலே இவர்கள் தேவனுடைய மகத்துவங்களைப் பேசக்

கேட்கிறோமே என்றார்கள்'' என அப் 2:4,7,11 வசனங்களில் காண்கிறோம்.

முதல் தடவையாய் விசுவாசிகள் பரிசுத்த ஆவியினால் நிரப் பப்பட்டபோது அவர்கள் ''எல்லாரும்'' (ALL) நவமான பாஷைகளைப் பேசினார்கள். இங்கு குறிப்பிடப்பட்ட நவமான பாஷைகள்–TONGUES, அதைக்கேட்ட மற்றவர்கள் புரிந்துகொள்ளக்கூடிய வெவ்வேறு மொழி களாகவே – LANGUAGES இருந்தது. ஆகவே இந்த இடத்தில் ''வியாக் கியானம் செய்யும் வரம்'' அவசியமாய் இருக்கவில்லை!

நான்காம் வசனத்தில் ''அவர்களெல்லாரும்... வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்'' எனக்குறிப்பிடப்பட்டிருப் பதைப் பாருங்கள். அதாவது ''அவர்கள் தான்'' அந்நியபாஷைகளில் பேசத் தொடங்கினார்கள்... பரிசுத்த ஆவியானவர் அல்ல! ஆம், பரிசுத்த ஆவி அவர்களுடைய நாக்குகளைப் பிடித்து அசைக்கவில்லை!! அதற்கு மாறாக, ஆவியானவர் வரத்தைத்தந்தருள... ''அவர்கள்'' வெவ்வேறு பாஷைகளில் பேசத்தொடங்கினார்கள்.

எந்த வரத்திலும், ''தெரிந்து கொள்ளும் சுயாதீனத்தை'' பரிசுத்த ஆவியானவர் நம்மிடமிருந்து எடுத்துக் கொள்வதேயில்லை. இன்னமும் சொல்லப்போனால் ஆவியின் கனியானது ''சுய இடக்க மே–SELF CONTROL'' ஆகும் (கலா 5:23). தமிழில் இச்சையடக்கம் எனக் கூறப்பட்டிருப் பது ஆங்கிலத்தில் ''சுயஅடக்கம்'' என்றே கூறப்பட் டுள்ளது. பிசாசின் ஆவி பிடித்த ஜனங்கள் மாத்திரமே தங்கள் சுய அடக்கத்தை இழக்கிறார்கள். பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டவர் களோ, யாரைக்காட்டிலும் தங்களை அடக்கியாளுவதற்கு அதிக திறன் பெற்றிருப்பார்கள். ''தீர்க்கதரிசிகளுடைய ஆவிகள் தீர்க்கதரிசிகளுக்கு அடங்கியிருக்கிறது'' என்றே வேதம் கூறுகிறது (1கொரி. 14:32).

சத்தியம் எண் :– 3

''அவர்கள் பல பாஷைகளைப் (TONGUES) பேசி தேவனைப் புகழ்ந்தார்கள்'' என அப் 10:46 –ல் வாசிக்கிறோம்.

கொர்நேலியு வீட்டில் கூடியிருந்த அனைவரும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றார்கள். இவர்கள் மனந்திரும்பிய அதே சமயத் தில் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும் பெற்று விட்டார்கள். இவர்கள் தாங்கள் பெற்ற அந்நியபாஷையினால் –TONGUES தேவனைத் (தேவனிடத்தில்) துதித்து புகழ்ந்தார்கள் என்று காண்கிறோம். அதா வது, அன்று பெந்தேகொஸ்தே நாளில் அபிஷேகம் பெற்ற நிகழ்ச்சி யைப்போல் ''ஜனங்களிடத்தில் அந்நிய பாஷையினால் பேசவில்லை'' என்பதைக் கவனியுங்கள்!

சத்தியம் எண் :– 4

''பவுல் அவர்கள் மேல் கைகளை வைத்தபோது, பரிசுத்த ஆவி

அவர்கள் மேல் வந்தார்; அப்பொழுது அவர்கள் அந்நியபாஷைகளைப் பேசித் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்'' என வாசிக்கிறோம் (அப் 19:6)

பவுல் எபேசு விசுவாசிகளின் மீது கைகளை வைத்தவுடன் அவர்கள் மீது பரிசுத்த ஆவியானவர் வந்து இறங்கினார். இங்கு குறிப்பிடப் பட்ட அந்நியபாஷை ''தீர்க்கதரிசனம் சொல்லுவதாய்'' இருப்பதை நாம் காண்கிறோம்.

(மேற்கண்ட அப்போஸ்தலர் நடபடிகளின் சம்பவங்களில் கீழ் காணும் உண்மைகளை நாம் கவனிப்பது நல்லது).

(i) அப்போஸ்தலர் 2-ஆம் அதிகாரத்தில், தண்ணீர் ஞானஸ்நானத் திற்கு பிறகு பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள் அப்போஸ்தலர் 10-ஆம் அதிகாரத்தில் தண்ணீர் ஞானஸ்நானத்திற்கு முன்பே பரிசுத்த ஆவியைப் பெற்றுவிட்டார்கள்.

(ii) அப்போஸ்தலர் 2-ம், 10-ம் அதிகாரங்களில் யாரும் கைகளை வைக்காமலே பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டார்கள். அப்போஸ் தலர் 19-ஆம் அதிகாரத்திலோ பவுல் அவர்கள் மீது கைகளை வைத்த பிறகு பரிசுத்தஆவியைப் பெற்றுக் கொண்டார்கள்.

(பரிசுத்த ஆவியைப் பெறுவதற்கு, இப்படித்தான் பெற வேண்டு மென்ற ஓர் நிலையான வரைமுறை எதுவும் இல்லை என்பதையே இவ் வசனங்கள் நிரூபிக்கின்றன. அதாவது, தண்ணீர் ஞானஸ்நானத்திற்கு முன்போ அல்லது பின்போ; கைகளை வைத்தோ அல்லது வைக்காம லோ பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ள முடியும்.)

(iii) அப் 8:16-18 வசனங்களில் சமாரியா சீஷர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டபோது, அந்நிய பாஷையைப் பேசிய தாக குறிப்பிடப்படவில்லை. ஆனால் இவ்வாறு பரிசுத்தஆவி தந் தருளப்படுவதை மாயவித்தைக்காரனான சீமோன் கண்டான் என வாசிக் கிறோம்.. அப்படி அவன் ''எதைக் கண்டான்'' என்பதை வேதம் குறிப்பிடவில்லை. ஆனால் தான் கண்ட ஒன்று, தானும் அந்த வரத்தைப் பேதுருவைப் போல பெறவேண்டுமென்ற ஆவலை அவனுக்குள் தூண்டியது என நாம் காண்கிறோம், அவ்வளவுதான்!

சத்தியம் எண் :- 5

''ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோ ஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது. எப்படியெனில் ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும் ...... வேறொரு வனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்கு வியாக்கியானம் பண்ணுதலும் அளிக்கப்படுகிறது'' என 1கொரி 12:7,8,10 வசனங்களில் வாசிக்கிறோம்.

இவ்வசனங்களில் ''அவனவனுடைய பிரயோஜனம்'' என்பது ஆங்கிலத்தில் COMMON GOOD- ''பொது நன்மை'' என கூறப்பட்டிருக்

ஆகவே, அந்நியபாஷைவரம் ''சபையின் நன்மைக்காகத்'' தரப்பட்டிருக்கிறது என்பதே இதன் பொருளாகும். கொரிந்தியர்களுக்கு எழுதப்பட்ட இந்த நிருபம் பெந்தெகொஸ்தே நாளிலிருந்து இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு எழுதப்பட்டதாகும். இன்றும் ஆவியானவரால் தரப்படும் அந்நியபாஷை வரம் ''சபையின் பொது நன்மைக்காகவே'' தரப்படுகிறது.

சத்தியம் எண் :— 6

''இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்'' என 1கொரி. 12:11-ல் வாசிக்கிறோம்.

அந்நியபாஷை வரம் உட்பட ஒவ்வொரு வரத்தையும் யார் யாருக்குத் தர வேண்டுமென்பதை ஆவியானவரே தம்முடைய சர்வ ஞானத்தின்படி தீர்மானிக்கிறார் என்பதை இந்த வசனம் தெளிவாக எடுத்துரைக்கிறது. ஆகவே, யார் யாருக்கு எந்தெந்த வரத்தைக் கொடுக்க வேண்டுமென்பதை நாம் ஆவியானவருக்கு ஒருபோதும் கட்டளையிட முடியவே முடியாது!

சத்தியம் எண் :— 7

''தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும்..... பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார்'' என 1 கொரி 12:28-ல் வாசிக்கிறோம்.

ஆகவே, குறிப்பிட்ட தம் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக சபையில் அந்நியபாஷை பேசும் வரத்தை தேவனே ஏற்படுத்தினார் என்பதை அறிந்து கொள்ளுங்கள். எனவே நாம் தேவனுக்கு எதிர்த்து நிற்காதபடி, இந்த வரத்தையும் நாம் ஒருபோதும் எதிர்த்து நிற்கவே கூடாது! நம்மைவிட தேவனுக்கு அதிக ஞானம் உண்டு என்பதை ஒருபோதும் மறந்து விடாதீர்கள்!!

சத்தியம் எண் :— 8

''எல்லாரும் குணமாக்கும் வரங்களுடையவர்களா? எல்லாரும் அந்நியபாஷை பேசுகிறார்களா? எல்லாரும் வியாக்கியானம் பண்ணுகிறார்களா?'' என 1கொரிந்தியர் 12:30-ல் வாசிக்கிறோம்.

இந்த வசனம் கூறுகிறபடி எல்லா விசுவாசிகளுக்கும் குணமாக்கும் வரங்கள் தரப்படாதது போலவே.... எல்லா விசுவாசிகளும் அந்நிய பாஷையில் பேசுவதுமில்லை!

ஆகவே, பரிசுத்த ஜீவியத்திற்கோ அல்லது அவருடைய ஊழியத்திற்கோ ''அந்நிய பாஷையை'' ஓர் அத்தியாவசியமான வரமாக தேவன் கருதவில்லை என்பதை இந்த வசனம் வெளிப்படையாக நமக்கு கூறுகிறது. அதற்கு மாறாக, இதை முக்கியமான வரமாக தேவன் கருதி

யிருந்தால் இந்த வரத்தை தேவன் ஒவ்வொரு விசுவாசிக்கும் கொடுத்திருப்பார்!

சத்தியம் எண்:– 9

"நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன்" என 1கொரிந்தியர் 13:1–ல் வாசிக்கிறோம்.

அன்பில்லாமல் அந்நியபாஷை பேசுவதில் ஒரு பிரயோஜனமும் இல்லை! அந்நியபாஷை பேசுபவர்களிடத்தில் காணப்படும் பெருமையும், அந்நியபாஷை பேசாதவர்களை இவர்கள் தாழ்வாக காணும் மனப்பான்மையும்... இவர்களின் அன்பின் தாழ்ச்சியையே காட்டுகிறது. பேரோசை கொண்ட வெண்கல சப்தத்திற்கு நாம் காதைப் பொத்திக் கொள்வதைப்போலவே, தேவனும் இவ்வித அன்பற்ற விசுவாசிகள் பேசும் அந்நியபாஷை சப்தத்திற்கு தன் காதைப் பொத்திக் கொள்கிறார்!!

சத்தியம் எண் :– 10

"தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நியபாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம். நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும் குறைவுள்ளது. நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்" என 1 கொரிந்தியர் 13:8–10 வசனங்களில் வாசிக்கிறோம்.

கிறிஸ்துவின் வருகையில் நிறைவானது வரும்போது, அந்நியபாஷை பேசவேண்டிய அவசியமேயிருக்காது. பரலோகத்தில் வேத அறிவும், தீர்க்கதரிசனமும் எவ்வாறு தேவையில்லையோ அதைப் போலவே "அந்நியபாஷையும்" தேவையாய் இருக்காது!

ஆகவே இந்த பூமியில் நிலவும் குறைவான நிலைமைக்காக, அந்நியபாஷை தற்காலிகமாகத் தரப்பட்ட ஓர் வரமேயாகும். இந்த அந்நியபாஷை வரம் ஏன் இயேசுவிற்கு ஒருபோதும் தேவையாயிருக்கவில்லை என்பதற்கு இந்த வசனமே தெளிவான பதில் அளிக்கிறது. அவருடைய மனம் நிறைவான பரிசுத்தம் கொண்டதாயும், அவருடைய ஜீவியம் பிதாவோடு நிறைவான ஐக்கியம் கொண்டதாயும் எல்லா நேரங்களிலும் இருந்தபடியால்.... குறைவான சூழலுக்குத் தேவையான அந்நியபாஷை இயேசுவிற்குத் தேவையற்றதாயிருந்தது!

சத்தியம் எண் :– 11

"அந்நியபாஷையில் பேசுகிறவன், ஆவியினாலே இரகசியங்களைப்பேசினாலும், அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினாலே, அவன் மனுஷரிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான்" என 1கொரிந்தியர் 14:2 ஆம் வசனத்தில் வாசிக்கிறோம்.

இங்கு குறிப்பிடப்பட்ட அந்நியபாஷை வரம், பெந்தெ கொஸ்தே நாளில் வெளிப்பட்ட வரத்திற்கு முற்றிலும் வித்தியாசமானது என்பதை வெளிப்படையாகவே காண்கிறோம். பெந்தெகொஸ்தே நாளில் அவர்கள் அந்நியபாஷையில் ஜனங்களிடத்தில் பேசினார்கள், அதை அவர்கள் விளங்கிக் கொண்டார்கள். ஆனால் இங்கு குறிப்பிடப் பட்ட அந்நியபாஷை வரமோ, மனுஷரிடத்தில் பேசுவதாயிராமல் தேவனிடத்தில் பேசுவதாயிருக்கிறது. இவ்வாறு தேவனிடத்தில் பேசு கிறபடியால், அவன் என்ன பேசுகிறான் என்பதை ஒருவனும் அறிந்து கொள்ள முடியாது!

சத்தியம் எண் :– 12

''அந்நியபாஷையில் பேசுகிறவன் தனக்கே பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்'' என 1கொரிந்தியர் 14:4 ஆம் வசனத்தில் வாசிக்கிறோம்.

ஒரு விசுவாசி ஆவிக்குரியத்தன்மையில் ஸ்திரப்படுவதற்கு அந்நியபாஷை வரம் அவனுக்கு உதவுகிறது.

சத்தியம் எண் :– 13

''நீங்களெல்லாரும் அந்நியபாஷைகளைப் பேசும்படி விரும்புகிறேன்; ஆகிலும், அந்நியபாஷைகளில் பேசுகிறவன் சபைக்குப் பக்திவிருத்தி உண்டாகும்படிக்கு அர்த்தத்தையும் சொல்லா விட்டால், தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவன் அவனிலும் மேன்மை யுள்ளவன்... சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்து உங்களுக்கு இரக சியங்களை வெளிப்படுத்துவதற்காவது, அறிவுண்டாக்குவதற்காவது, தீர்க்கதரிசனத்தை அறிவிக்கிறதற்காவது, போதகத்தைப் போதிக்கிற தற்காவது ஏதுவானதைச் சொல்லாமல், அந்நியபாஷைகளில் பேசினால் என்னாலே உங்களுக்குப் பிரயோஜனம் என்ன?'' என 1கொரிந்தியர் 14:5,6 வசனங்களில் வாசிக்கிறோம்.

எல்லோரும் அந்நியபாஷை பேசும்படியே பவுல் விரும்பினார்! அதாவது, எல்லா விசுவாசிகளும் அந்நியபாஷை பேசவில்லை என்பதையே இந்த வசனம் மீண்டும் நமக்கு உறுதிப்படுத்துகிறது!

இதே போன்ற விருப்பத்தை 1 கொரி 7:7–ல் பவுல் குறிப்பிடும் போது ''எல்லா மனுஷரும் என்னைப்போலவேயிருக்க (திருமணமா காதிருக்க) விரும்புகிறேன்'' எனக் கூறினார். இவ்வாறு திருமணமா காமல் தனித்திருப்பதில் உள்ள சில நன்மைகளைப் பவுல் கண்டி ருந்தார். அதேபோல், அந்நியபாஷை பேசுவதாலுண்டாகும் நன்மை களையும் பவுல் கண்டிருந்தார். ஆனால், தேவன் தன்னுடைய சர்வ ஞானத்தின்படி சில விசுவாசிகளுக்கு மட்டுமே ''திருமணமாகாமல் தனித்திருக்கும் வரத்தைத்'' தந்ததுபோல்.... ''அந்நியபாஷை பேசும் வரத்தையும்'' இவ்விதமே சில விசுவாசிகளுக்கே தேவன் தந்திருக் கிறார் என்பதை பவுல் நன்கு அறிந்திருந்தார்.

எல்லா விசுவாசிகளும் ''பிரம்மச்சாரியாய்'' இருக்கும்படி எதிர் பார்ப்பது எவ்வளவு மதியீனமோ.... அதேபோல, எல்லா விசுவாசி களும் அந்நியபாஷை பேசும்படி எதிர்பார்ப்பதும் மதியீனமேயாகும்!!

சபைக்கூட்டங்களில் தீர்க்கதரிசனம் சொல்லுவதே அதிக பயனுள்ளதாயிருக்கும். தீர்க்கதரிசனம் சொல்லுவதென்பது, ஒருவன் தேவனுடைய வார்த்தையின் மூலமாய் பிறருக்கு ''பக்திவிருத்தியும், புத்தியும், ஆறுதலும் உண்டாக'' பேசுவதேயாகும் *(1கொரி 14:3)*. இருப் பினும் சபையில் பேசப்படும் அந்நியபாஷை, வியாக்கியானம் செய்யப் பட்டால், அதுவும் தீர்க்கதரிசனத்தைப்போலவே சபைக்கு பக்திவிருத்தி யுண்டாக்கும் என பவுல் கூறினார்.

சத்தியம் எண் :- 14

''நீங்கள் தெளிவான பேச்சை நாவினால் வசனியாவிட்டால் (நீங்கள் பேசிய அந்நிய பாஷைக்கு அர்த்தம் சொல்லப்படாவிட்டால்) பேசப்பட்டது இன்னதென்று எப்படித் தெரியும்? ..... அந்தப்படி அந்நியபாஷையில் பேசுகிறவன் அதின் அர்த்தத்தையும் சொல்லத்தக்க தாக விண்ணப்பம் பண்ணக்கடவன்'' என 1கொரிந்தியர் 16:9,13 வசனங் களில் வாசிக்கிறோம்.

எனவே சபைக் கூட்டங்களில் பயன்படுத்தும் ''அந்நிய பாஷைகள்'' கண்டிப்பாய் வியாக்கியானம் செய்யப்படவேண்டும்.

சத்தியம் எண் :- 15

''நான் அந்நியபாஷையிலே விண்ணப்பம் பண்ணினால், என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி, என் கருத்து பயனற்றதா யிருக்கும். இப்படியிருக்க, செய்ய வேண்டுவதென்ன? நான் ஆவி யோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன், நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடு வேன்'' என 1 கொரிந்தியர் 14:14,15 வசனங்களில் வாசிக்கிறோம்.

ஒருவன் அந்நியபாஷையில் ஜெபிக்கும்போது, அவன் என்ன ஜெபிக்கிறான் என்பதை மற்றவன் அறிந்துகொள்ள முடியாது. அவ் வாறிருப்பினும், ஒருவன் தன் சொந்த பாஷையில் எந்தளவிற்கு கருத் தோடு ஜெபிக்கிறானோ அல்லது பாடுகிறானோ.... அந்தளவிற்கு ஆவி யோடு (அந்நியபாஷையில்) ஜெபிக்கவும், பாடவும் வேண்டுமென பவுல் உணர்ந்தார்!

சத்தியம் எண் :– 16

''உங்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பாஷைகளைப் பேசுகிறேன், இதற்காக என் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்'' என 1கொரிந்தியர் 14:18ல் வாசிக்கிறோம்.

தான் பெற்ற இந்த வரத்திற்காக பவுல் தேவனுக்கு நன்றியுள்ளவராயிருந்தார். ஆகவே, இந்த வரம் எவ்வளவாய் பவுலுக்கு உதவியிருக்கிறது என்பதைத் தெளிவாய் நாம் காண்கிறோம்.

சத்தியம் எண் :– 17

''அப்படியிருந்தும், நான் சபையிலே அந்நிய பாஷையில் பதினாயிரம் வார்த்தைகளைப் பேசுகிறதிலும், மற்றவர்களை உணர்த்தும்படி என் கருத்தோடு ஐந்து வார்த்தைகளைப் பேசுகிறதே அதிக விருப்பமாயிருக்கும்'' என 1கொரிந்தியர் 14:19ல் வாசிக்கிறோம்.

சபைக் கூட்டத்தில், நமக்குத் தெரிந்த பாஷையில் பேசுவதே எப்போதும் நல்லது!

சத்தியம் எண் :– 18

''அந்நிய பாஷைகள் விசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல், அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது'' என 1கொரிந்தியர் 14:22ல் வாசிக்கிறோம்.

அன்று பெந்தெகோஸ்தே நாளைப் போலவே–இன்றும், அந்நிய பாஷைகள் அவிசுவாசிகளுக்கு ஓர் அடையாளமாகவேயிருக்கிறது.

சத்தியம் எண் :– 19

''ஆகையால், சபையாரெல்லாரும் ஏகமாய்க் கூடிவந்து, எல்லாரும் அந்நியபாஷைகளிலே பேசிக்கொள்ளும்போது, கல்லாதவர்களாவது, அவிசுவாசிகளாவது உள்ளே பிரவேசித்தால், அவர்கள் உங்களைப் பைத்தியம் பிடித்தவர்களென்பார்களல்லவா?'' என 1கொரிந்தியர் 14:23ல் வாசிக்கிறோம்.

ஆகவே, சபைக் கூட்டத்தில் நாம் எல்லோரும் சேர்ந்து அந்நிய பாஷை பேசுவது பைத்தியக்காரத்தனமேயாகும்! ஏனெனில், இவர்கள்

என்ன பேசுகிறார்களென ஒருவராலும் புரிந்து கொள்ள முடியாது. (சபையில் ஜனங்கள் ஒன்றாய்ச் சேர்ந்து தனித்தனியாய் அந்நியபாஷை பேசுவதையே இந்த வசனம் தவறு என சுட்டிக் காட்டுகிறது. ஆனால் அதற்கு மாறாக, எல்லோரும் அந்நியபாஷையில் ஜெபித்துக் கொண்டிருப்பதை இந்த வசனம் குறிப்பிட்டுக் கூறவில்லை. ஏனெனில் அறிந்த பாஷையில் ஒருவர் ஜெபிப்பதைக்கூட நாம் கவனிப் பதில்லையே!).

சத்தியம் எண் :– 20

''நீங்கள் கூடி வந்திருக்கும் போது, உங்களில் ஒருவன் சங்கீதம் படுகிறான், ஒருவன் போதகம் பண்ணுகிறான், ஒருவன் அந்நியபாஷை பேசுகிறான். ஒருவன் இரகசியத்தை வெளிப்படுத்துகிறான். ஒருவன் வியாக்கியானம் பண்ணுகிறான். சகோதரரே, இது என்ன? சகலமும் பக்திவிருத்திக்கேதுவாக செய்யப்படக்கடவது. யாராவது அந்நிய பாஷையிலே பேசுகிறதுண்டானால், அது இரண்டு பேர் மட்டில், அல்லது மிஞ்சினால் மூன்று பேர் மட்டில் அடங்கவும், அவர்கள் ஒவ் வொருவராய்ப் பேசவும், ஒருவன் அர்த்தத்தைச் சொல்லவும் வேண்டும்'' என 1 கொரிந்தியர் *14:26,27*ல் வாசிக்கிறோம்.

இவ்வசனம் கூறுகிறபடி, நாம் சபை கூடிவரும் போது இரண்டு அல்லது மூன்று பேருக்கு மேல் அந்நியபாஷை பேசக்கூடாது. மேலும் அவ்வாறு இரண்டு அல்லது மூன்று பேர் பேசினால் ''ஒவ்வொரு அந்நியபாஷையும் வியாக்கியானம் செய்யப்பட வேண்டும்!'' வியாக்கி யானம் செய்வதென்பது ''மொழிபெயர்ப்பிற்கு'' ஒப்பானது அல்ல, மொழிபெயர்ப்பு ''வார்த்தைக்கு வார்த்தை'' அப்படியே எடுத்துச் சொல்வதாகும். ஆனால் வியாக்கியானமோ ''ஒருவருடைய வார்த்தை களுக்குப் பின்னால் அடங்கியிருக்கும் சிந்தைகளை'' வெளிப்படுத்து வதேயாகும்.

சத்தியம் எண் :– 21

''இப்படியிருக்க, சகோதரரே, தீர்க்கதரிசனஞ்சொல்ல நாடுங் கள், அந்நியபாஷைகளைப் பேசுகிறதற்கும் தடை பண்ணாதிருங்கள். சகலமும் நல்லொழுக்கமாயும், கிரமமாயும் செய்யப்படக்கடவது'' என 1கொரிந்தியர் *14:39, 40* ல் வாசிக்கிறோம்.

இந்த வாக்கியங்களை ''முடிவுரையாக'' பவுல் எழுதியிருப்பதை நாம் காண முடிகிறது. இவ்வசனம் நமக்கு எச்சரிக்கிறபடி அந்நிய பாஷை பேசும் வரத்தை அப்பியாசப்படுத்துகிறவர்களை நாம் ஒரு போதும் தடைசெய்யக்கூடாது. ஆனால், நீங்கள் வரத்தை விரும்பினால் அந்நியபாஷை வரத்தை விட தீர்க்கதரிசனம் சொல்லும் வரத்தையே நாடுங்கள் என வேதம் நமக்கு ஆலோசனையாகக்கூறுகிறது.

அந்நியபாஷை பேசுவதில் உண்மையும்.... போலியும்!

அந்நியபாஷை வரத்தின் பின்னணியில், நம் கண்களுக்குப்புலப் படாத ''ஓரளவு'' இரகசியம் இருக்கத்தான் செய்கிறது. இன்று இந்த வரத்தைப் பெற்றிருப்பவர்கள் நேர்மையுள்ளவர்களாயிருந்தால், இந்த உண்மையை அவர்கள் அனைவரும் ஒத்துக்கொள்வார்கள். வேதம் கூறு கிறபடி நாம் எல்லாவற்றையும் அறிந்திட முடியாது! நாம் யாவரும்

குறைவாய்த்தான் அறிந்திருக்கிறோம் (1கொரி 13:12).

கடந்த 22-ஆண்டுகளாய் அந்நியபாஷை பேசும் நான், இந்த வரத்தைக்குறித்து என் சொந்த அனுபவத்திலிருந்து கற்றுக் கொண்டதைக் கூற விரும்புகிறேன் :

ஒருநபர் அந்நியபாஷை பேசும்போது, அவருடைய ஆவி (இருதயம்) ஏதோ பாஷைகளை நேரடியாக இருதயத்திலிருந்து தன் வாய்மூலம் பேசுவதையே அறிகிறோம். அதாவது இவ்வாறு பேசுவது அவருடைய மனதைத்தள்ளிவைத்துவிட்டுப் பேசுவதாகவேயிருக் கிறது. இதனிமித்தமாய் அவன் தன் இருதயத்திலிருக்கிற யாவற்றையும் தேவனிடத்தில் ஊற்றி கொட்டிவிடுகிறான்! அது அவனுடைய மகிழ்ச்சி யின் பெருக்கமாகவோ அல்லது ஏதோ துக்கத்தினாலோ அல்லது மனச் சோர்வினாலோ ஏற்பட்ட பாரமாகவோ இருக்கலாம்!! இதன் மூலமாய், அவனுடைய இருதயத்திலிருந்த பாரமான அழுத்தம் அவனை விட்டுப் போய்விடுகிறது. இவ்வாறாகவே அவன் பக்திவிருத்தியடைகிறான்.

நாம் ஏற்கனவே அப் 2:4 ல் கண்டதுபோல் ஒருவன் அந்நிய பாஷை பேசும் போது, அந்த நபர்தான் பேசுகிறாரேயல்லாமல் பரிசுத்த ஆவியானவர் பேசுவதில்லை. ஒருவன் எப்படி தனக்குத் தெரிந்த பாஷையைப் பேசுவதற்கு வார்த்தைகளை அமைக்கிறானோ, அதைப் போலவே அந்நியபாஷை பேசும் விசுவாசியும் வார்த்தைகளைக் கூட்டிச் சேர்த்துப் பேசுகிறான்!

இங்குள்ள ஒரே வித்தியாசம் யாதெனில், அந்நியபாஷை பேசு பவர் தனக்குத் தெரிந்த பாஷையை பேசாததினால், ஆண்டவர் மீது தன் முழுகவனத்தையும் வைத்து, தன் மனதை (MIND) உதறிவிட்டு தன் இருதயத்திலிருந்து நேரடியாக வார்த்தைகளைத் தன் வாயின் மூலமாய் பேசுகிறார்.

அவ்வாறு அவன் பேசுவதின் அர்த்தம் அவனுக்குப் புரியாவிட்டாலும், தன்னுடைய இருதயத்திலுள்ள ஏக்கங்களையும், பாரங்களையும் தேவன் இச்சமயத்தில் அறிந்துகொண்டார் என்பதை நன்றாய் உணர்ந்திருப்பான்.

நெஞ்சத்தில் பாரம் உண்டாகும் சமயமெல்லாம், அந்தச் சுமையை நாம் மேற்கண்டதுபோல் தேவனிடத்தில் இறக்கிவைப்பது ஒரு விசுவாசிக்கு மிகுந்த பெலனுள்ள நேரமாகும்! குறிப்பாய், ஒரு விசுவாசியின் மனம் (MIND) தன்னுடைய சொந்த பாஷையில் ஜெபிப் பதற்கு களைப்படைந்திருக்கும் சமயமே, அந்நியபாஷையின் ஜெபம் அவனுக்கு மிகுந்த ஆறுதலாயிருக்கிறது. இது எவ்வாறு கிரியை செய் கிறது என்பதை நம்மால் விளக்கமுடியாவிட்டாலும், அந்த கிரியையை நாம் உணர முடியும்!

இப்போது **வியாக்கியான வரத்தைக்** குறித்துப் பார்ப்போம். நாம் ஏற்கனவே கண்டதுபோல் அந்நியபாஷையை வியாக்கியானம் செய்தல், தீர்க்கத்தரிசனம் சொல்லுவதற்கு சமமாகும். ஆகவே ஏற்கன வே தீர்க்கதரிசன வரம் பெற்ற ஒருவனுக்கு ஆவியானவர் இந்த வரத்தை யும் சேர்த்துத் தருவதைப் பொதுவாய் கண்கிறோம். ஒருசபைக் கூட்டத் தில், யாரேனும் ஒருவர் அந்நியபாஷை பேசும்போது, தீர்க்கதரிசன

வரம் பெற்ற ஒருவர் (அது அநேகமாய் மூப்பர்களில் ஒருவராய் இருக்கக் கூடும்), அவர் தேவனுடைய வெளிச்சத்தில் உண்மையாய் நடந்து வருபவராயிருந்தால், அந்த அந்நியபாஷை தேவனிடமிருந்து புறப் பட்ட மெய்யான தொன்றாயிருக்கும் பட்சத்தில், அதைக்குறித்த எண்ணங்களின் பிரதிபலிப்புகள் தன் மனதில் பளிச்சிடுவதை அந்த மூப்பர் காண்பார். உடனே அவர், அவ்வேளையில் தான் பெற்ற எண்ணங்களை தன் சொந்த பாஷையினால் பேசி வெளிப்படுத்துவார்! ஏனெனில் இது ஓர் மொழி பெயர்ப்பாயில்லாமல் வியாக்கியானமாக வேயிருக்கிறது!!

இவ்வேளையில், வியாக்கியான வரத்தைப் பெற்ற இன்னொரு மூப்பர் இதே அந்நியபாஷையை வியாக்கியானம் செய்தால், அதுவும் முதல் வியாக்கியானத்திற்கொப்பானதாகவே இருக்கும்! சபையிலுள்ள இரண்டு மூப்பர்கள் தேவனோடு கொண்ட தொடர்பில் அனல் கொண்ட வர்களாயிருந்தால் இவ்வாறு சம்பவிப்பதை நாம் காணலாம்!!

தேவனிடத்திலிருந்து உண்டாகும் எந்த வெளிச்சமும் வேதத்தில் எழுதப்பட்ட சத்தியங்களுக்கு ஒருபோதும் முரணாயிருக்காது. எல்லா உண்மையான தீர்க்கதரிசனங்களும் வேத வாக்கியங்களுக்கு ஒத்திருப் பதைப்போலவே, உண்மையான எல்லா வியாக்கியானமும் வேத வசனத்திற்கு ஒத்ததாகவேயிருக்கும்.

ஆவிக்குரிய வரங்களைக் குறித்து மாறுபாடான கருத்துக் கொண்ட சிலர் கீழ்க்கண்ட கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள்: ''ஒரு கூட்டத்தில் நடந்த அந்நியபாஷை வியாக்கியானத்தை ஒரு ஒலிநாடா வில் பதிவுசெய்து, இதே வரத்தைப்பெற்ற வேறொரு இடத்திலுள்ள நபரைக்கொண்டு வியாக்கியானம் செய்யச் சொன்னால், அந்த வியாக் கியானம் முதலில் வியாக்கியானம் செய்ததற்கு ஒப்பாகவே இருக்குமா?'' இந்தக் கேள்விக்கு விடையாதெனில் ''வியாக்கியானம் செய்த இரண்டு நபர்களும் ஒரே விதமாய் கர்த்தரின் சிந்தையைக் கொண்டிருந்தால், அவர்களின் வியாக்கியானம் ஒரே செய்தியாகத்தான் இருக்கும்'' என்பதேயாகும். ஆனால் இவர்களின் வியாக்கியானம் ஒன்றுக்கொன்று வித்தியாசமாயிருந்தால், கர்த்தரின் சிந்தையைப் பூரண மாய் அறிந்து கொள்வதற்கு, வியாக்கியானம் செய்த ஒருவரோ அல்லது இரண்டு பேருமோ தங்கள் ஆண்டவரோடு பூரணமான தொடர்பு கொண்டவர்களாய் இல்லை என்பதையே சுட்டிக்காட்டுகிறது. இது ஒன்றும் நூதனமான பெரிய காரியம் அல்ல! ஏனெனில், ஆண்டவரின் சிந்தையை பூரணமாய் அறிந்து கொள்ளும் அளவிற்கு இந்த உலகிலுள்ள எந்த விசுவாசியும் அவரோடு அனல்கொண்ட பூரண தொடர்புடைய வர்களாயில்லை என்பதேயாகும்!!

இந்த உண்மையை, கீழ்க்காணும் உதாரணம் உங்கள் சந்தேகத்தை முற்றிலும் அகற்றி நிரூபித்துக்காட்டும் என நம்புகிறேன்: ஒரு கூட்டத் தில் நீங்கள் செய்தி தர வேண்டியதிருப்பதாக எண்ணிக்கொள்ளுங்கள். அவ்வேளையில் ஒரு குறிப்பிட்ட செய்தி உங்கள் இருதயத்தை நிரப்ப.... நீங்களும், அக்கூட்டத்திற்கு அந்தச் செய்தியே கர்த்தருடைய பாரம் என ஊர்ஜிதம் செய்கிறீர்கள். ஆனால் திடீரென்று ஏற்பட்ட சூழ்

நிலையினால், உங்களால் அந்தக் கூட்டத்திற்குச் செல்லமுடியால் வேறொருவர் அங்கு செய்தி கொடுத்துவிட்டார். இங்கு துல்லியமாய் சொல்ல வேண்டுமென்றால், அந்த சகோதரன் வேறொரு வேத வாக்கியத்தை வைத்தே பேசியிருந்தாலும், உங்கள் இருதயத்திலிருந்த ''அதே செய்தியைத்தான்'' பிரசங்கித்திருக்க வேண்டும்! அவ்விதமாய் அந்த சகோதரன் பேசியிருக்கவில்லையென்றால், ''உங்களில் ஒருவர்'' கர்த்தருடைய மனதைப் பூரணமாய் அறிந்து கொள்ளும் இடத்தில் இல்லை என்பதையே சுட்டிக்காட்டுகிறது. ஆகவே, விசுவாசிகள் தங்கள் சொந்த பாஷையில் செய்தி கொடுக்கும் இந்தப் பரீட்சையில்கூட தோல்வியடைவதை நாம் காண்கிறோமே!

ஆகவேதான், ஒரு தீர்க்கதரிசியின் செய்தியைக்கூட நிதானித்துச் சோதிக்கும்படி வேதம் நமக்குப் போதிக்கிறது (1கொரி 14:29). இதைப் போலவே, அந்நியபாஷையின் எல்லா செய்திகளையும் அதன் வியாக்கியானங்களையும் நாம் நிதானித்துச் சோதித்துப்பார்க்கவேண்டும். இங்கு நாம் எதை நிதானித்துச் சோதிக்க வேண்டும்? கூட்டத்தில் பேசப்பட்ட தீர்க்கதரிசனமோ, அந்நியபாஷைகளோ அல்லது வியாக்கியானங்களோ ''வேதத்தின் படியும்'' ''கர்த்தரிடத்திலிருந்தும்'' உண்டானது தானா? இல்லையா? என்பதை என்னுடைய ஆவி சாட்சி கொடுக்க வேண்டும்! என்பதேயாகும்.

1யோ 4:1–ஆம் வசனத்தில், ''எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்து அறியுங்கள்'' என்ற எச்சரிக்கையை நாம் காண்கிறோம். ஆகவே, அந்நிய பாஷைகளையோ அல்லது வியாக்கியானங்களையோ கூட்டங்களில் நாம் எப்போதெல்லாம் கேட்கிறோமோ, அப்போதெல்லாம் அவைகளை நம்முடைய ஆவியின் சாட்சியோடு சோதித்துப்பார்க்க வேண்டும்! அநேக சமயங்களில், நாம் கேட்கும் ''எழுச்சி மிகு இயற்கைக்கு அப்பாற்பட்ட அந்நியபாஷைகள்'' அநேகமாய் தேவனிடமிருந்து வராததாயிருக்கக்கூடும். ஏதோ சில காரணத்தினிமித்தம், ஒரு தீர்கத்தரிசனம் அல்லது அந்நியபாஷை அல்லது வியாக்கியானத்தின் ஒருபகுதியையோ அல்லது முழுவதையுமோ ஏற்றுக் கொள்வதற்கு நம்முடைய ஆவியில் ஒரு விதமான தயக்கம் ஏற்பட்டால், அவைகளை ஏற்றுக்கொள்ளாமல் உதறித்தள்ளுவதற்கு நாம் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்!

இவ்வாறு இல்லாமல், '' இயற்கைக்கு அப்பாற்பட்ட எழுச்சியான யாவற்றையும் எந்தக் கேள்வியும் கேட்காமல் அப்படியே ஏற்றுக் கொண்டதின்'' விளைவுதான், நாம் வாழும் இந்த நூற்றாண்டு கிறிஸ்தவ உலகில் ஏற்பட்டிருக்கும் ஏராளமான குழப்பங்களுக்குக் காரணமாயிருக்கிறது. அதுமாத்திரமல்லாமல், ஆண்டவருடைய நாமம் சொல்லி முடியா அளவிற்கு கனவீனமடைந்துமுள்ளது!

அப்போஸ்தலர் நடபடிகளின் காலத்தில் அந்நியபாஷை பேசிய எல்லத்தருணங்களிலும் நாம் கண்ட, கீழ்க் காணும் உண்மைகளை எப்போது மனதில் வைத்திருப்பது நல்லது:

1) அவர்கள் அந்நியபாஷை பேசியபோதெல்லாம், வலுக்

கட்டாயமாயில்லாமல் "தானாகவே" (SPONTANEOUS) பேசினார்கள்.

2) அவர்கள் அந்நியபாஷை பேசியபோதெல்லாம், ஒருவர் பாக்கியில்லாமல் எல்லோரும் (ALL) பேசினார்கள்.

3) அவர்கள் அந்நியபாஷை பேசியபோதெல்லாம், எவ்வாறு அந்நியபாஷை பேச வேண்டுமென்ற பயிற்சியோ அல்லது வற்புறுத்தலோ அல்லது எந்தக் குறிப்புகளோ அவர்களுக்குத் தரப்படவில்லை!

ஆனால் இன்று, அநேக இடங்களில் மேற்கண்ட குணாதியங்களில் ஒன்றுகூட காணப்படுவதில்லை. எங்கெல்லாம் அந்நியபாஷை வரம் எந்தப் பயிற்சியுமில்லாமல் தானாகவே பேசப்படுகிறதோ, அதுவே "உண்மையானதாயிருக்கக்கூடும்" என நாம் முடிவு செய்யலாம்.

இன்றைய நாள் வரை நான் கேட்ட "அந்நியபாஷையில்" மிகவும் அற்பமான சதவீதமே "உண்மையானது" என என்னுடைய ஆவி சாட்சி கொடுத்திருக்கிறது! மற்ற அனைத்தும், இந்த வரத்தை அப்படியே "காப்பியடிக்க" முயற்சித்ததாகவே நான் உணருகிறேன். தங்கள் குழுவினரால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கோ அல்லது அவர்களை கவர்ச்சிப்பதற்கோ இந்த வரத்தைக் காப்பியடிக்கவே ஜனங்கள் உந்தப்படுகிறார்கள்!! இன்னும் கணிசமான சதவீதத்தினரின் அந்நியபாஷை "சாத்தானின் ஆவியிலிருந்து" உருவானதாயிருக்கக்கூடும் என்று கூட நான் கருதியிருக்கிறேன்!! இவ்வித என்னுடைய கண்ணோட்டம், பல தேசங்களில் நான் கண்ட அநேக ஜனங்களின் வாழ்க்கையிலுள்ள கனியையும் அவர்களின் முடிவையும் ஆதாரமாய்க் கொண்டவைகளேயாகும்!

இன்றைய அநேக சபைகளில், அந்நியபாஷையில் பேசி... அந்நியபாஷையில் பாடும் நிகழ்ச்சிகள் "காட்சி அரங்கேற்றமாகவே" இருப்பதை நாம் காண்கிறோம். இவ்வித காட்சி அரங்கேற்றத்தில் பரவசமடைவது "சிறுகுழந்தைகளின்" குணாதிசயமேயாகும்.

நாம் வாழும் இக்காலத்தில், விசுவாசிகளிடம் அதிகபட்சமான பொருளாதார லாபத்தைச் சுரண்டுபவர்கள் "அந்நியபாஷை பேசுகிறோம்" என தங்களை மேன்மை பாராட்டும் பிரசங்கிகளும் பாஸ்டர்களுமே என்பதை நாம் அனைவருமே நன்கு அறிந்திருக்கிறோம்! இந்த இருபதாம் நூற்றாண்டில் தோன்றியுள்ள அநேக "மார்க்க கண்மூடிகள்" (Cults), இந்த அந்நியபாஷை பேசும் குழுவினரிடமிருந்தே உருவெடுத்திருக்கிறார்கள்!

ஆகவே, விசுவாசிகளாகிய உங்கள் யாவருக்கும் நான் கூறும் புத்திமதியாதெனில்: "அந்நியபாஷை பேசுதல் மற்றும் சுகமளிக்கும் வரங்களை எந்த சபையிலெல்லாம் முக்கியத்துவப் படுத்துகிறார்களோ, அந்த சபைகளை விட்டு விலகி வந்துவிடுங்கள்! ஏனெனில் இது போன்ற சபையினர் அபாயகரமான எதிர்முனைக்குச் செல்வது மாத்திரமல்லாமல், இங்குள்ள தலைவர்கள் ஆவிக்குரிய சிந்தை கொண்டவர்களாயும் இருப்பதில்லை. இவர்களுக்குப்பதிலாய், எந்த சபை பரிசுத்தத்தையும், சீஷர்களை உருவாக்குவதையும் முக்கியப்படுத்தி.... அதோடு, உண்மையான அந்நியபாஷை பேசும் வரத்தை ஏற்றுக்

கொண்டு,... உங்கள் பணத்தை இச்சிக்காமலும் உங்கள் வாழ்க்கையை ஆட்டிப்படைக்க விரும்பாமலும் இருக்கின்றதோ, அந்த சபையோடு ஐக்கியப்படுவதற்கே நாடுங்கள்''.

காரியத்தின் கடைத்தொகையாய் ''அந்நியபாஷையைக் குறித்த'' முடிவான ஆலோசனைகளைக் கேளுங்கள்:

''தேவன் உங்களுக்கு அந்நியபாஷை கொடுத்திருந்தால், அதைப் பெற்றுக்கொண்டு அப்பியாசப்படுத்துங்கள். நீங்கள் தேவனோடு தனித்திருக்கும் போது, குறிப்பாக உங்கள் இருதயம் மகிழ்ச்சியினால் பொங்கும் போதோ அல்லது உங்கள் இருதயம் பற்பல சோர்வினால் பாரமடையும் போதோ, இருதயத்திலிருந்து தேவனிடத்தில் அந்நிய பாஷையினால் பேசுங்கள். இவ்வாறு பேசும்படியான வரம் உங்களிடத்தில் இல்லையென்றால் அதைக்குறித்து சஞ்சலம் அடையாதிருங்கள். கர்த்தரிடத்திலிருந்து இந்த வரத்தைப்பெறுவதற்கு எந்த நேரத்திலும் ஆயத்தமாயிருங்கள். இந்த வரத்திற்கு விரோதமாகவோ அல்லது எப்படியும் இதைப்பெற்று விட வேண்டுமென்ற வேகத்தினாலோ ஒருபோதும் செயல் படாதிருங்கள். எப்படியும் பெற வேண்டும் என்ற பதட்டம் இல்லாத பட்சத்தில் இந்த வரத்தை நீங்கள் பெற வேண்டுமென தேவன் விரும்பினால், அவர் அதை நிச்சயம் உங்களுக்குத் தருவார். மேலும் கிறிஸ்த உலகிலே நீங்கள் காண்கின்ற அல்லது கேட்கின்ற எதையும் பரிசுத்த ஆவியினால் அருளப்பட்டது என அப்படியே நம்பி விடாதிருங்கள்! ஒவ்வொன்றையும் சோதித்துப் பாருங்கள். தேவன் உங்களுக்குத்தந்த பகுத்தறியும் ஐம்புலன்களையும் பயன்படுத்துங்கள். உங்களுக்கு அந்நியபாஷை வரம் இல்லையென்றால், அதைப் பெற்றிருப்பவர்களைவிட நீங்கள் தாழ்வானவர்கள் என எண்ணாதிருங்கள். இந்த வரத்தை நீங்கள் பெற்றவராயிருந்தால், இந்த வரம் இல்லாதவர்களைக் காட்டிலும் உங்களை உயர்வாகவும் அல்லது ஆவிக்குரியவர்களாயும் எண்ணாதிருங்கள். பவுலும் கொரிந்திய கிறிஸ்தவர்களும் அந்நிய பாஷை பேசினார்கள். ஆனால், பவுலோ ஆவிக்குரிய வல்லவராயிருந்தார்! கொரிந்தியக்கிறிஸ்தவர்களோ மாம்ஷீகமாய் இருந்தார்களே!!''

இங்கு அதிக முக்கியத்துவமானது எது?

நம் யாவருக்குமே இங்கு அதிக முக்கியத்துமாய் இருக்கவேண்டியது ''பரிசுத்த ஆவியின் வல்லமையினால் நிரம்பி இருப்பதே'' ஆகும். பரிசுத்த ஆவி அபிஷேகத்தின் அடையாளம் ''வல்லமை'' (POWER) மாத்திரமேயாகும்! அந்நியபாஷை பேசுவது அல்ல!! (அப்1:8)

நாம் எவ்வாறு நம்முடைய பாவ மன்னிப்பை நம்முடைய சொந்த தகுதியின்படியல்லாமல், கிறிஸ்துவின் தகுதியின்படி விசுவாசத்தினால் பெற்றோமோ, அதைப்போலவே பரிசுத்த ஆவியையும் விசுவாசத்தினாலேயே நாம் பெற வேண்டும் (யோ 7:37–39). அதாவது, பரிசுத்த ஆவியின் வரத்தை அல்லது பரிசை (GIFT) நம்முடைய உபவாசத்தினாலோ அல்லது நீடிய ஜெபத்தினாலோ அல்லது வேறெந்த கிரியையினாலோ பெற முடியாது. ஏனெனில், அவர் நமக்கு ஒரு

பரிசாகவே (GIFT) இருக்கிறார்! *(அப் 2:38).*

பசியுள்ள தன் மகனுக்கு இவ்வுலகத்தின் எந்தத் தகப்பனும் உடனடியாக உணவு தருவதைப் போலவே, தன்னிடத்தில் கேட்பவர்களுக்கு உடனடியாகப் பரிசுத்தாவியைத் தருகிறார் என்பதையறிந்து, தேவனிடம் பரிசுத்தாவியைக் கேட்டு–உடனடியாக விசுவாசத்தில் பெற்றுக் கொண்டு–அவருடைய வாக்குத்தத்தத்தை விசுவாசித்தவர்களாய் நாம் கடந்து செல்லவேண்டும் *(லூக் 11:13)*. நாம் பரிசுத்தாவியைப் பெற்றதைக் குறித்த நிச்சயம் இல்லாதிருந்தால், அந்த நிச்சயத்தை தேவன் நமக்குத் தரும்படி ஜெபித்தால்... அந்த நிச்சயத்தை நமக்கு தேவன் தர ஒருபோதும் மறுக்கவே மாட்டார்!

இவ்வுலகத்தில் உன்னதமான கிறிஸ்தவர்களாய் திகழ்ந்தவர்கள், அந்நியபாஷை பேசினார்களோ இல்லையோ...... ஆனால், இவர்கள் தங்கள் ஆண்டவராகிய இயேசுவின் மீது முழுஇருதயமான சொல்லி முடியா நேசம் கொண்டிருந்தார்கள்! பேதுரு, யாக்கோபு, யோவான், பவுல் போன்ற சீஷர்கள் அந்நியபாஷை பேசினார்கள்! ஆனால், நமக்குத் தெரிந்தவரை ஜான்வெஸ்லி, சார்லஸ் பின்னி, D.L. மூடி, A.B. சிம்ஸன், வில்லியம் பூத், C.T. ஸ்டட், வாட்ச்மேன் நீ போன்ற தேவமனிதர்கள் ஒருபோதும் அந்நியபாஷை பேசியதேயில்லை! ஆனால், அவர்கள் அனைவரும் பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற்றிருந்தார்கள்! அவர்கள் அனைவரும் தங்கள் ஆண்டவரை முழுஇருதயமாய் அன்புகூர்ந்தார்கள்! அவர்கள் அனைவரும் சிலுவையின் வழியில் நடந்து சென்றார்கள்! ஆம், இவைகள்தான் அவர்கள் வாழ்வின் ''மையமாய்'' இருந்தது... மற்ற அனைத்தும் அவர்களுக்கு இரண்டாவதாகவே இருந்தது!!

இந்த உத்த தேவமனிதர்களின் நல்ல மாதிரியை நாம் பின்பற்றினால், நாம் ஒருபோதும் தவறாய் சென்றுவிடவே மாட்டோம்.

கேட்பதற்கு காதுள்ளவன் எவனோ, அவன் கேட்கக்கடவன்!!

– சகரியாபூணன்

10

நாம் மரித்தபின்பு நம்மை சூழ்ந்துகொள்ளும் ஞாபக நினைவுகள்...!

(WHAT WE SHALL REMEMBER AFTER WE DIE)

வில்லியம் பூத்தாகிய நான் கிறிஸ்தவ ஊழியங்களில் மிகுந்த சுறுசுறுப்போடு ஊழியம் செய்பவனாயிருந்தேன். இவ்வாறு அநேகருக்கு நான் ஒளியை தாங்கிச்செல்கிறேன் எனவும் எனக்கு நானே எண்ணியிருந்தேன். நான் கிறிஸ்தவக் கூட்டங்களுக்குப் பேராவலோடு செல்லுவேன். ஓய்வுநாள் பள்ளியின் ஆசிரியராகவும் இருந்தேன். அவ்வப்பொழுது வியாதியஸ்தரையும் சந்தித்து அவர்களுக்காக ஜெபிப்பேன். இதுபோன்ற எல்லாக் கிரியைகளிலும் நான் மிகுந்த உண்மையுள்ளவனாகவே இருந்தேன். என் கிரியைகளின் பின்னணியில் மாய்மாலத்தின் தடயம் சிறிதும் இருந்ததில்லை!

இவ்வாறிருக்கையில், எவ்வித எச்சரிக்கையுமின்றி நான் திடீரென்று நோய்வாயுற்று மரணத்தின் விளிம்பிற்கு வந்துவிட்டேன். ஆகிலும், நான் உண்மையாகவே மறுபடியும் பிறந்த கிறிஸ்தவன் என்பதையும்.... என் இரட்சகரின் இரக்கம் எனக்கு கிட்டும் என்பதையும் நன்றாய் அறிந்திருந்தேன். இவ்வித சிந்தையிலிருந்த சமயத்தில்... என் சுயநினைவை இழந்தேன். இப்போது... நான் பரலோகத்திலிருப்பதைக் கண்டேன்! ஆஹா, பரலோகில் தேவனுடைய பரிசுத்தவான்களைக் காண்பது எத்தனை பரவசமாயிருக்கிறது!!

பரலோகில் நான் சுகமாய் வந்து சேர்ந்துவிட்டேன் என்ற எண்ணமும், என்னில் பாவமேதும் இல்லாதிருந்த நிலையும் எடுத்த எடுப்பிலேயே என்னை மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்தியது. ஆனால்..... திடீரென்று, நான் தனிமையாய் இருப்பதையும் எனக்குள் சிறிது துக்கம் பிரவேசித்ததையும் கண்டேன். பரலோகில் இருந்த தூய்மை நிறைந்த பரிசுத்தவான்களோடு கலந்து உறவாடுவதற்கு நான் தகுதியற்றவனாயிருப்பதை எனக்குள் உணர்ந்தேன். இவ்வாறு அலைமோதிய என் சிந்தைகளுக்குமுன் என் கடந்தகால வாழ்க்கை ஓர் திரைப்படம் போல என் முன் காட்சியளித்தது. ஆகிலும் என்வாழ்வின் எத்திக்கிலும் ''மன்னிக்கப்பட்டது'' என்ற வார்த்தை எழுதப்பட்டிருந்ததைக்

கண்டேன். ஓ, தேவனுக்கே மகிமை! அப்பாடா....... என் பாவங்களின் பட்டியல் ஒன்றுகூட இல்லை!! என மனநிம்மதி கொண்டேன்.

இருப்பினும் நான் தொடர்ந்து என் ஜீவியக்குறிப்புகளை உற்று நோக்கியபோது அது எனக்குள் கலக்கத்தை உண்டுபண்ணியது! அக் குறிப்புகள் என் மறைவான சிந்தைகளையும், உணர்ச்சிகளையும், செய் கைகளையும்..... பகிரங்கமாகக்காட்டியது. மேலும், என் பூலோக ஜீவியகாலத்தில் தேவன் எனக்கு ஒப்புவித்த நேரங்களையும், தாலந்து களையும், பணத்தையும் எப்படி–எதற்காக உபயோகித்தேன் என்பதை அவைகள் வெட்ட வெளிச்சமாகக் காட்டியது.

இச்சமயத்தில், தேவன் உலகத்தை எங்ஙனம் காண்கிறாரோ அதைப்போலவே நானும் காணும்படி உலகத்தின் காட்சிகள் என் கண் களுக்கு முன்பாகத்தோன்றின. நான் கண்ட உலகம் இச்சையாலும், விபச்சாரத்தாலும், பகையினாலும், பில்லி சூனியத்தாலும், சண்டை யினாலும், பொய்யினாலும், புறங்கூறுதலினாலும், முரட்டாட்டத் தினாலும், பேராசையினாலும், பெருமையினாலும், மாய்மாலத்தி னாலும்...... துர்நாற்றம்பிடித்து புரையோடிருந்தது. ஆ, இது என்ன.... கோடிக்கணக்கான ஜனங்கள் தங்கள் பாவங்களால் குருட்டாட்டம் பிடித்து நிலைதடுமாறி நரகத்தின் படுகுழிக்குள் விழுகிறார்களே! இக் கோர சம்பவத்தில் மாயும் ஜனங்களுக்காக ஒருவர்கூட அக்கறை கொண்டதாகத் தெரியவில்லையே!! மேலும், பாவத்தின் கொடிய கண்ணியில் சிக்கியவர்கள் வேதனை தாங்கமுடியாமலிட்ட பயங்கர மான கூக்குரலையும் நான் கேட்டேன். ஆனால், அந்தோ.... ஒருவர் கூட அவர்களுக்கு உதவ ஆர்வம்கொண்டதாகத் தெரியவில்லையே!!

இவ்வேளையில் என்னைக் குறித்து என்ன? அப்போதுதான் சற்று அதிர்ச்சியுடன் என்னைப் பார்த்தேன்! நானோ என் பூமியின் வாழ்க்கை யில் சொகுசாயன்றோ வாழ்ந்துகொண்டிருந்தேன். ஆம், நான் ஈடுபாடு கொண்டிருந்த மார்க்க கிரியைகளில்கூட சொகுசைத்தான் நாடி யிருந்தேன்.

இப்போது நான் வாழ்ந்த வாழ்க்கையை தேவன் எவ்விதம் கண்டார் என்பதை நித்தியத்தில் என்னால் காணமுடிந்தது. ''ஐயோ, முற்றி லும் சுயநலமான வாழ்க்கை அல்லவோ வாழ்ந்திருக்கிறேன்'' என்ற உணர்வு என்னை வாட்டியெடுத்தது. மிகுந்த வியாகுலத் தோடு, ''நான் வீணாக்கிய ஜீவியத்தை மீண்டும் சென்று என்னால் ஜீவிக்க முடியுமென்றால்......'' என ஏங்கினேன்.

ஆனால்.... மறுபடியும் ஒரு வாழ்க்கை வாழ சாத்தியமாகாதே! பூமியில் நான் பெற்றிருந்த சந்தர்ப்பங்கள் அத்தனையும் இழந்து போனேனே என தவிப்புற்றேன். என் தவிப்பின் குமுறல், ''ஓ, என் தேவனே! நான் கிறிஸ்துவுக்காய் முற்றிலுமாய் அர்ப்பணம் செய்து வாழும் வாழ்விற்கென என்னிடம் எதைக்கேட்டிருந்தாலும் (ANYTHING) கொடுத்திருப்பேனே....'' என்ற தாமதமான ஜெபமாய்ப் பொங்கிவந்தது.

இவ்வேளையில் திடீரென, மகிமையான பரிசுத்தவான்களில் ஒருவர் என்னிடம் வந்தார். என்னை நெருங்கிய அவர், ''வில்லியம்பூத், நீங்கள் பூலோக வாழ்க்கையில் பெற்ற ஜெயத்தைக் குறித்தும்; நீங்கள்

கிறிஸ்துவுக்குள் நடத்திய ஆத்துமாக்களைக் குறித்தும் எனக்கு கூறுங்கள்'' என வினவினார். எனக்கோ தொண்டை அடைத்தது: என்னால் என்ன பதில் சொல்ல முடியும்? நான் வாழ்ந்த சொகுசான ஜீவியம் ஒன்றுதான் என் நினைவிற்கு வந்தது! சற்று தாமதித்து, அப் பரிசுத்தவான் தன் மகனைக்குறித்து என்னிடம் கேட்டார். அவருடைய மகன் என் வீட்டிற்கு அருகில்தான் ஜீவித்தான். பூமியில் ஓர் முரட் டாட்டமான ஜீவியத்தை அவன் செய்துவந்தான். சற்று தயங்கிய குரலில் அப்பரிசுத்தவான், ''கிறிஸ்துவைக் குறித்து என் மகனிடம் நீங்கள் சொன்னீர்களா? அவன் இரட்சிக்கப்படுவதற்கு ஏதேனும் நம்பிக்கை உண்டா?'' என்றெல்லாம் வினவினார்.

இக்கேள்விகளைக் கேட்டவுடன் என் இருதயம் எனக்குள் அமிழ்ந்தேபோனது. இவருக்கு நான் என்ன பதில் சொல்லமுடியும்? எனக்கு அவருடைய மகனைக் குறித்தும், அப்பையனுக்கிருந்த பிரச்சனைகள் குறித்தும் நன்கு தெரியும். ஆனால் நானோ இது போன்ற அவனுடைய கஷ்டங்களிலெல்லாம் தலையிட்டுக்கொள்ள விரும்பா மல் அப்பையனை அலட்சியப்படுத்திவிட்டேன்.

அந்தோ, இங்கே என்னிடம் வந்த பரிசுத்தவானோ, அப் பையனுடைய தகப்பன்! நான் அவருக்குமுன் மௌனம் சாதித்தேன். என் மௌனத்தின் பதிலை அவர் புரிந்துகொண்டார். எனக்காக அனுதாபம் கொண்ட அவர்.....மிகுந்த ஏமாற்றத்தோடு மெதுவாகத் திரும்பி என்னைவிட்டுப்போய்விட்டார்.

இவ்வேளையில் மகிமையால் நிறைந்த வேறொரு நபரைக் கண் டேன். அந்த நபர் பூமியில் ஓர் விதவையாக வாழ்ந்தவர். பூமியில் விதவையாக வாழ்ந்த அவர், மிகுந்த துயரத்தின் மத்தியில் போராடி ஜீவித்துத் தன் கடைசி மகனைத்தவிர, எல்லா பிள்ளைகளையும் கிறிஸ்து வுக்குள் நடத்திவிட்டார்கள். தன் கடைசி மகள் உலகத்தின் மாயையான கவர்ச்சியினால் சர்க்கப்பட்டு வழிதப்பிச் சென்றுவிட்டதாக துயரத் தோடு என்னிடம் கூறினார்கள். ''யாராகிலும் அவளுக்கு கிறிஸ்துவின் அன்பைக் காட்டியிருந்தால் இப்போது அவளுடைய கண்கள் திறந் திருக்கக்கூடும்'' என எதிர்பார்ப்போடுஎன்னிடம் கூறினார். திடீரென்று என்னை உற்று நோக்கி, ''என்மகள்தான் உங்களுக்குத் தெரியுமே! நீங்கள் அவளிடம் நேரம் செலவழித்துப் பேசியதுண்டா?'' என ஆர்வத் தோடு கேட்டார்கள்.

நான் மீண்டும் மௌனமானேன். ஓர் நல்ல பதிலுக்காக என்னை ஆர்வத்தோடு உற்றுநோக்கிய அவரின் பார்வையை என்னால் தாங்கிக் கொள்ளமுடியாமல் தலை கவிழ்ந்தேன்.

''ஓ, என்தேவனே, இது என்ன பரலோகம்தானா? என் கடந்தகால ஜீவியத்தின் சுயநலமான வாழ்க்கை நித்தியத்தின் சதாகாலமும் என்னை உபாதிக்குமோ? ஆண்டவரே, என்னை நான் தகுதி யற்றவனாகவும் மகா இழிவுள்ளவனாகவும் காண்கின்றேன்! நான் வீணாக்கிய ஜீவியத்தை மீண்டும் சென்று என்னால் ஜீவிக்க முடியுமென்றால்.....'' எனத் தவியாய் தவித்தேன்.

இவ்வாறு கடும் சோகத்தில் மூழ்கியிருந்த என்னிடம், இன்

னொரு பரிசுத்தவான் வந்தார். மகிமையின் பேரொளியால் சூழப்பட்டிருந்த அப்பரிசுத்தவானின் ரூபம் உள்ளங் கவருவதாய் இருந்தது. ஆனால் அவரோ பூமியில் ஓர் 'நீக்ரோவாக' ஜீவித்தவர். அவர் முதலாவது தன்னை என்னிடம் அறிமுகப்படுத்திக் கொண்டார். பின்பு அவர் பூமியில் ஊழியம் செய்து பிரயாசப்பட்ட கிறிஸ்தவ குழுவைக் குறித்தும் அவர் விட்டுவந்த தன் தோழர்களைக் குறித்தும் வினவினார். ''வில்லியம்பூத் நான் ஊழியம் செய்த குழுவினருக்கு நீங்கள் உதவி செய்ய முற்பட்டதுண்டா?'' எனக் கேட்டார். மேலும், ''உங்கள் ஜீவியம் அவர்களுக்கு ஓர் மாதிரியாக இருந்திருக்குமல்லவா...?, அங்கிருந்த மனந்திரும்பாத தோழர்களை இரட்சிப்பிற்குள் நடத்த நீங்கள் ஏதேனும் முயற்சி செய்ததுண்டா? தயவுசெய்து எனக்கு இவைகளைக் குறித்து பதில் கூறுங்கள்'' என ஏக்கத்தோடு கேட்டார். இந்த பரிசுத்தவான் கூறிய குழுவினர் எனக்குத் தெரியும். ஆனால் நானோ அவர்களுக்கு எவ்வித உதவியோ அல்லது உற்சாகமோ செய்யவில்லை. அவர்கள் என் குழுவை சார்ந்தவர்களல்ல...... நான் விசுவாசிப்பதை அவர்கள் விசுவாசிப்பதில்லை...... என்னிலிருந்து பல காரியங்களில் அவர்கள் வேறுபட்டிருக்கிறார்கள்.... என்றெல்லாம் காரணங்களைக்கூறி சும்மா இருந்து விட்டேன். ஆனால், இப்போது பரலோகத்தின் மிகத்தெளிவான பிரகாசம் நிறைந்த ஒளியில் நான் எவ்வளவு ஆவிக்குரிய பெருமையினால் நிறைந்திருந்தேன் என்பதைக் கண்டேன். இனி நான் என்ன செய்ய முடியும்? துயரம்.... துயரம்! அது ஒன்றே என்னை கவ்விக் கொண்டது. ''தெய்வமே, உம் பரலோகத்தில் நான் எவ்வித ஆறுதலும் பெறமுடியாதோ?'' என மனம் துவள வியந்து கேட்டேன். பரலோகத்தின் உயர்ந்த லட்சியங்களை மனதில் ஏந்தி, என் ஜீவியகாலமெல்லாம் அந்த லட்சியத்திற்காகவே என் கிரியைகளின் விதைகளைத் தூவி, அவைகள் நித்திய நித்தியமான பரலோக கனிகளின் அறுவடையாய் எனக்கு நேருவதற்குப் பதிலாக... ஒன்றிற்கும் பிரயோஜனமில்லாத உலக லட்சியங்களுக்காகவும் வெகு அற்பமான சொகுசு வாழ்விற்காகவும் என் ஜீவியத்தை வீணாக்கி விட்டேனே என உள்ளம் வெகுவாய் குமைந்துபோனேன்.

இவ்வேளையில், திடீரென மகா ஆச்சரியமான வெளிச்சத்தைக் கண்டேன்! என்ன ஆச்சரியம்!! ஆயிரமாயிரமான தேவனுடைய உத்தமமான ஊழியர்கள் என்னைக் கடந்து சென்று கொண்டிருந்தார்கள். அவர்களுடைய ரூபம் தெய்வத்தைப் போலிருந்தது. அவர்களிடம் பொங்கி வழிந்த மகிழ்ச்சியையும்... அழகையும் நான் எப்படி வார்த்தைகயாகச் சொல்ல முடியும்? ''தெய்வமே, அவைகளை நானும் பெறுவதற்கு என்னிடம் எதைக் கேட்டிருந்தாலும் (ANYTHING) கொடுப்பேனே!'' என ஏங்கித் தவித்தேன். நான் என்னவென்று சொல்லுவேன்..... இங்கே இன்னொரு மகா அற்புதமான காட்சியைக் கண்டேன்!! ஆம், ராஜாதி ராஜாவான இயேசுவையே என் கண்கள் கண்டுவிட்டது!! அங்கே பவனியாய் சென்றுகொண்டிருந்த அவருடைய உத்தமமான ஊழியர்களை, பாராட்டுதல் நிறைந்த தன் அன்பெனும் பார்வையால் கடாட்சித்தார். மோட்சானந்தம் பொங்கி வழிந்த அவரின் பார்வை,

''நல்லது! என் உத்தமமான சகோதரர்களே!!'' எனக் கூறுவதுபோலிருந்தது! ஐயோ..... அத்தெய்வீக இயேசுவின் பார்வையை நான் என்னவென்று விவரிப்பேன். சொல்லிலடங்கா அன்பினால் அவர் கடாட்சித்த பார்வை, அவனை அவர் அப்படியே கட்டித்தழுவிக் கொண்டதுபோலிருந்தது!! அந்த ஒரு பார்வையைப் பெறுவதற்கு நான் நூறுதடவை மரித்தாலும் தகுமே! என புளுங்கித்தவித்தேன். ஆ.... அவர் இப்போது என்னைப் பரிதாபத்தோடு பார்த்து, ''வில்லியம்பூத், நீ பவனியில் கண்ட என் சகோரர்கள் எனக்கு மகிமை சேர்க்கும்படி தங்கள் ஜீவனையும் அருமையாய் எண்ணாமல் என்னைப் பின்பற்றியவர்கள்! ஆனால், நீயோ..... உன்னால் இவர்களோடு இசைந்திருப்பது கூடாத காரியம்!!'' எனக் கூறிவிட்டார்.

ஐயகோ, ''என் தேவனே! என் தேவனே! நான் என்ன செய்வேன்'' எனக் கூக்குரலிட்டேன். ''ஆ என்தேவனே, என் வெட்கம் பெரிது. அவைகளை மூடுங்கள்! உம்மைச் சேவிக்கும்படி பூமியில் நீர் எனக்குத் தந்த பொன்னான தருணங்களை மதித்து செயல்பட்டிருந்தால் எவ்வளவு அருமையாய் இருந்திருக்கும். ஐயோ, பாதகனாகிப் போனேனே! ஒன்றுக்கும் உதவா பொக்கான லட்சியங்களையும் உலக சொகுசையும் நான் ஏன்தான் தேடிச் சென்றேனோ தெரியவில்லையே! ஆண்டவரே, எனக்கு உதவக்கூடாதா? மனம் இரங்கமாட்டீரோ?'' என துடியாய்த் துடித்துப் போனேன்.

ஆ.... இது என்ன? நான் தூங்கி விழிப்பதுபோல் கண் திறந்தேன். என்னால் .... என்னால் நம்பவே முடியவில்லை! நான் இன்னமும் பூமியில்தான் இருக்கிறேன்!! அப்படியானால்.... என்ன? ஆம், நான் கண்டது ஓர் தரிசனமே. ''ஐயனே, உம் காருண்யம் பெரிது'' என உள்ளம் உவந்தேன். எனக்காக சகலத்தையும் கொடுத்த என் ஆண்டவருக்காய் மீண்டும் ஒரு வாழ்க்கை வாழ பூமியில் இன்னமும் எனக்கு சந்தர்ப்பம் இருக்கிறதே என பேரானந்தம் கொண்டேன்!! – வில்லியம்பூத்

அறியாது போனேனே !

(I NEVER KNEW)

(ஒருவன் தன் மனைவி இறந்த பின்பு எழுதிய கவிதை)

அவள் என்மீது காட்டிய கரிசனையை அறியாது போனேனே!
அவள் என்மீது எவ்வளவு பொறுமையாய் இருந்திருக்க வேண்டும்
அவள் என்னைவிட்டுச் செல்லும்வரை உணராது போனேனே!
அவள் நாள் தவறாமல் எனக்குச் செய்த உதவி எத்தனை எத்தனை
அத்தனை செய்த அவளை சற்றே சிந்தித்திட அறியாது போனேனே
ஆ... இன்று அவள் மரித்துவிட்டாள்! இனி சிந்தித்துப் பயனேது?
அவள் சுமந்த சிலுவை ஏராளம் ! ஆகிலும் புன்சிரித்தாள்!!
அவள் துக்கங்களை தன் இதய நாணில் வைத்தே மீட்டிவிட்டாள்
ஆ.... இதமில்லாபாவி நான், இதை அன்றே அறியாது போனேனே
அவளிடம் கண்டதோ பூத்த புன்னகை! சுடர்வீசும்மகிழ்ச்சியே!
அதுகண்டு ''அவளுக்கென்ன குறை!'' என்றல்லோ இருந்துவிட்டேன்

''அன்று'' உதவிக்கரம் நீட்டிட அந்தோ அறியாது போனேனே!

இவள் ஏன் அலட்டிக்கொள்கிறாள் என அன்று எண்ணினேன்!
இன்றோ, அவளை பல துக்கங்கள் சூழ்ந்திருந்ததைக் காண்கிறேன்!
இன்னலில் உழன்ற அவள் துக்கத்தை அன்றே அறிந்திருந்தால்
இனிதே நன்மைகள் பல நான் செய்திருக்கக்கூடுமே! ஆனால்....
இனித்த புன்னகையால் இன்னல் எனக்கு மறைத்து விட்டாளே!
இனி நான் என் செய்வேன்! தனிமரமாய் தவிக்கிறேன்!!
இனிய அவள் என் வாழ்விற்கு ''சுமை தாங்கியாய்'' நின்றதை
இளைத்தே என்னைவிட்டு மறையும்வரை அறியாது போனேனே!
இங்கிதம், பொறுமை, முகமலர்ச்சி... அடடா! எத்தனை எத்தனை!!
இத்தனை நற்குணங்களால் என்வாழ்வை செழித்திடவைத்தாளே!
இக்கானக பயணத்தைத் தன் சிறுசிறு செயல்களால்... எனக்கு
கனிவாக்கித் தந்தாளே! பாதகன் நான்.... அறியாது போனேனே!

- Selected

(நீங்கள்? உங்கள் மனைவி மரிக்கும்வரை காத்திருக்கலாமா? வேண்டாம்! இன்றே அவர்களை நன்றியோடு மெச்சிக் கொள்ளுங்கள்!! இன்றே மனைவிக்கு உதவிக்கரம் நீட்டுங்கள்!!)

கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்!?

இயேசுவின் தாய் மரியாளுக்கு, இயேசுவின் பிறந்த நாள் தேதி நிச்சயமாய்த் தெரிந்திருக்கும்! இந்த மரியாள், பெந்தேகொஸ்தே நாளுக்குப் பிறகு அப்போஸ்தலர்களோடு பல ஆண்டுகள் உடன் இருந்தார்கள். அப்படியிருந்தும், ஒரு சுவிசேஷத்தில்கூட இயேசுவின் பிறந்த நாள் தேதியை அவர்களுக்கு மரியாள் கூறவேயில்லை. இது எதைக் காட்டுகிறது? இயேசுவின் பிறந்தநாள் தேதியை தேவனே மறைத்து வைத்துவிட்டார் என்பதையே காட்டுகிறது. ஏனென்றால், இப்பிறந்த நாளைத் தன் சபை கொண்டாடுவதை தேவன் விரும்பவே இல்லை!!

அதிகாரபூர்வ சரித்திரக் குறிப்பேடான ''என்சைக்ளோப்பீடியா பிரிட்டானிக்கா, கிறிஸ்துமஸின் தோற்றத்தை இவ்விதமாய் குறிப்பிடுகின்றது: ''பாபிலோன் மார்க்கத்தார் தொன்று தொட்டு டிசம்பர் 25-ம் தேதி கொண்டாடிய சூரியபகவான் பிறந்தநாளை கிறிஸ்து பிறந்த நாளாக கி.பி.440 -ம் ஆண்டிலிருந்த சர்ச் பாதிரிகள் முன்குறித்தனர்'' (1953-ம் வருடப் பதிப்பு, பாகம்-5, பக்கம் 642 A -613).

கிறிஸ்துமஸ் அடிப்படைபூர்வமாக அஞ்ஞானிகளின் பண்டிகையே என, 'என்சைக்கேளாப்பீடியா பிரிட்டானிக்கா' போன்ற சரித்திர ஆசிரியர்கள்கூட தெளிவாய்ப் புரிந்துகொண்டதை, அனேக விசுவாசிகள் ஏற்றுக் கொள்வதற்கு ஆயத்தமாயில்லை என்பது ஓர் வியக்கத்தகு விந்தையே ஆகும்!!

தேவ வசனமா? மனுஷீக மூடப்பாரம்பரியமா? என்பதே இயேசு பரிசேயர்களோடு தொடர்ச்சியாகப் போராடிய கடும் யுத்தமாகும். அவர், பாவத்திற்கு எதிராய்ப் பிரசங்கித்ததைவிட 'பிதாக்களின்' மூடப் பாரம்பரியங்களை வெளியரங்கப்படுத்தியதாலேயே அதிகமான

எதிர்ப்புக்கு ஆளானார்! அவர் அவ்விதம் உண்மையாய் இருந்ததுபோல வே நாமும் உண்மையாய் இருந்தால், அவர் அடைந்த அதே அனுப வத்தையே நாமும் அடைவோம்!

– சகரியாபூணன்

நிறைவான சந்தோஷம் !

"கனி" உள்ள வாழ்க்கையை "ஆண்டவரின் அன்பில்" நிலைத் திருக்கும் வாழ்க்கைக்கும், "மிகுந்த கனி" உள்ள வாழ்க்கையை "ஒரு வரிலொருவர் அன்புகூரும்" வாழ்க்கைக்கும் இயேசு ஒப்பிட்டுக் கூறியதை யோவான் 15–ம் அதிகாரத்தில் காணமுடியும்.

இதை மேலும் இயேசு விளக்கமாய் கூறும்போது, "என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும் இவைகளை உங்களுக்குச் சொன்னேன். நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாருக்கிறது" எனக் கூறினார் (யோ. 15:11,12).

ஆம், "நிறைவான சந்தோஷத்திற்கு" இயேசு காட்டிய ஒரே வழி, "பிறரை அன்புகூர்ந்து" வாழும் வாழ்க்கையேயாகும். நரகம் எப்படியிருக்கும்? என நாம் பலவிதத்தில் விளக்கம் கூற முற்படலாம். ஆனால், இந்த பூமியில் நரக வாழ்க்கை யாதெனில் "தன்னை நேசித்து" "தனக்காகவே வாழுவதுதான்" நரகம். இதற்கு மாறாக, "பிறரையே நேசித்து" "பிறருக்காக வாழ்வதே" மோட்சானந்தம் எனலாம்! இக்கூற்று, நூற்றுக்கு நூறு உண்மையென்பதை, இவ்வாழ்க்கையை வாழ்ந்து பார்த்தவர்கள் அறிவார்கள்!!

"அன்பு" இன்னதென்பதே நமக்குத் தெரியாது! நம் யாவருடைய 'மாம்சமும்' பகையின் மொத்த ரூபமேயாகும். இதில் நன்மை கொஞ் சம்கூட இல்லை என பவுல் கூறினார். அன்பை நமக்கு முதலாவது இப்பூமியில் வெளிப்படுத்தியதே ஆண்டவர் இயேசுதான்! "பாவியாக யிருந்த நம்மை கிறிஸ்து அன்புகூர்ந்ததினிமித்தம்" அன்பு இன்ன தென்பதை நாம் விளங்கிக் கொண்டோம். அவரே "முந்தி" (முதலாவது) நம்மிடத்தில் அன்புகூர்ந்தார் என 1யோவான் 4:19–ல் வாசிக்கிறோம். ஆகவே பிறரை அன்புகூர்வதற்கு முன்பாக, நாம் "முதலாவது" தேவனிடத்தில் அன்புகூர்ந்து..... "இரண்டாவதாகத் தான்" பிறரிடத்தில் அன்புகூர முடியும் என வேதம் நமக்கு கற்றுத் தருகிறது! (மத். 22:37–39).

நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக் கொள்ளுங்கள் என இயேசு கூறினார். இதன்படி இயேசு கற்பித்து சுட்டிக்காட்டிய இருதயத்திலே செய்யும் விபச்சாரத்தைக் குறித்தும், கோபத்தைக் குறித்தும், பொய்சொல்லுவதைக் குறித்தும், பலிவாங்கும் செயலைக் குறித்தும்... இன்னும் இதுபோன்ற ஏராளமான தீமைகளை விட்டு தேவ கிருபையால் ஜெயித்து வாழ்பவன், நாளடைவில் அன்பைப் படிப்படியாய் தேவனிடத்தில் கற்று பிறரை நேசிக்கும் இடத்தை அடைவான் என்பது திண்ணம்!

"முதலாவது" தேவனையும் "இரண்டாவது" பிறரையும்

நேசித்துவிட்டால், தன்னை நேசிப்பதற்கு அங்கு இடமில்லையே! ஆனால் நம் மானிடமோ ''நம்மை'' நேசிப்பதற்கல்லவா எப்போதும் தூண்டுகிறது. ஆகவேதான் இயேசுகிறிஸ்து ''சிலுவையின் உபதேசத்தை'' நமக்குத் தந்தருளி, அனுதினமும் சிலுவையை எடுத்து அவரைப் பின்பற்றிவர அழைத்தார். அதைப்பவுல் கூறும்போது, ''கிறிஸ்துவுடனேகூட சிலுவையிலறையப்பட்டேன்.... நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்'' என்றும், தனக்குள் பிழைத்திருக்கும் கிறிஸ்து யார் என்பதையும் கூறினார். அந்த கிறிஸ்து ''என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தவர்'' அவரே என்னில் பிழைத்திருக்கிறார் என்றார் (கலா.2:20). ''தன்னை'' சிலுவையில் புறக்கணித்துவிட்டு, கிறிஸ்து நம்மை நேசிப்பதுபோல், நாமும் சிலுவையின் வழியைப் பின்பற்றி பிறரை நேசிப்பதே உண்மை கிறிஸ்தவமாகும்!

ஏழை எளியவர்க்கு ''கிறிஸ்துமஸ்'' அன்று உதவிசெய்வதே ''அர்த்தமுள்ள கிறிஸ்துமஸ்'' எனக் கூறுபவர்கள் உண்டு. உங்களைவிட அன்னதானம் வழங்கும் புறஜாதிகள், வருடத்தில் ஒருமுறை அல்ல பலமுறை செய்கிறார்கள்! பிறரை அன்புகூர டிசம்பர்–25 முடிந்துவிட்டால், அடுத்த வருடத்தில்தான் இவர்கள் பிறரை நினைப்பார்கள் போலும்! வேதம் கற்றுத்தரும் கிறிஸ்துமஸ் (!) ஒவ்வொரு நாளும் சிலுவை சுமந்து, தன்னைப் புறக்கணித்து பிறரை நேசிக்கும் (உங்கள் கணவன், மனைவி தொடங்கி..... சத்துருக்களையும் இடைவிடாது நேசிக்கும்) கிறிஸ்துமஸ் ஆகும்!! டிசம்பர் 25–ம் தேதியல்ல, வருடத்தின் 365– நாட்களும் ''நிறைவான சந்தோஷம்'' அடைந்து வாழும் வாழ்க்கையையே இயேசு நமக்கு கற்றுத்தந்தார். நாம் அந்த அடிச்சுவட்டையே பின்பற்றக்கடவோம்!! இந்த சிலுவையின் வழிசெல்லும் எந்த உத்தமசீஷனும் தன் ''எஜமானின் சாயலை'' கண்டடைவான் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை!!

– **T. ரத்தினக்குமார்**

சகரியா பூணனின் . . . . .

வெற்றியின் இரகசியங்கள்	--	ரூ.	10.00
தேவனை மையமாகக் கொண்டு ஜெபித்தல்	--	ரூ.	15.00
நல்லதோர் அஸ்திவாரம்	--	ரூ.	15.00
யார் இயேசுவின் உண்மை சீஷன்?	--	ரூ.	20.00
பரிபூரண ஜீவன்	--	ரூ.	20.00
முத்துக்குவியல்	--	ரூ.	18.00
இதுவே மெய்யான சத்தியம்	--	ரூ.	8.00
உங்கள் சத்துருவை அறிந்து கொள்ளுங்கள்	--	ரூ.	10.00
சிலுவை இல்லாத இயேசுவா?	--	ரூ.	18.00
ஆழத்தின் அழைப்பு	--	ரூ.	20.00
வியப்பூட்டும் உண்மைகள்	--	ரூ.	5.00
நீங்கள் எப்படியிருக்க தேவன் விரும்புகிறார்?	--	ரூ.	6.00
புதிய உடன்படிக்கை ஊழியன்	--	ரூ.	20.00
பாவத்தின்மேல் பரிபூரண வெற்றி	--	ரூ.	1.00
தேவ ஆசீர்வாதமா? தேவ அங்கீகாரமா? (10 பிரதிகள்)	--	ரூ.	5.00
சோதனையில் தேவ அங்கீகாரம்	--	ரூ.	9.00
மண்ணிலே வான் எக்காளம்	--	ரூ.	20.00
நல்லதோர் குடும்பம்	--	ரூ.	40.00

சுவிசேஷ கைப்பிரதி : "உங்களுக்குள் ஓடிக்கொண்டிருக்கும் வீடியோ டேப்" 10 பிரதிகளின் விலை ரூ. 1.50

சகரியா பூணனின் தமிழாக்க செய்தி கேஸட்டுகள் விற்பனைக்குள்ளன. கேசட் விபர அட்டவணை ரூ. 4.00

அனைத்து விபரங்களுக்கும் தொடர்பு முகவரி :

T. RATHNAKUMAR
24 - V.O.C. NAGAR
VALLUVAR COLONY BUS STOP
MADURAI - 625 017.
S. INDIA.

நீங்கள் தொடர்ந்து ஆவிக்குரிய வளர்ச்சி பெறவேண்டும் என்பதற்காகவே "***பரலோக பொக்கிஷங்கள்***" என்ற தமிழ் மாதாந்திர பத்திரிக்கை வெளியிடுகின்றோம்.

வருட சந்தா ரூ. 40.00

தொடர்பு முகவரி :

T. RATHNAKUMAR
24 - V.O.C. NAGAR
VALLUVAR COLONY BUS STOP
MADURAI - 625 017.
S. INDIA.
Ph. 640202

'வான் நிலவை' கண்டு மயங்கிய மனிதன்
''சிறகிருந்தால்'' பறந்துவந்து
உன்னைத் தழுவுவேன் என்றான்!
இன்று அந்த நிலவை மெய்யாகவே
கண்டடைந்து விட்டான்!!

'எஜமான்' இயேசுவின் சாயலைக்
கண்டு மயங்கும் அவரின்
'அடிமை' அச்சாயலை அடைவான்
என்பதில் என்ன சந்தேகம்?

தன் சாயலைக் கண்டு
அருவருத்தவனன்றோ
'எஜமானின் சாயலை'
நாடிட முடியும்.... !

நம் சாயலின்
இழிநிலையைக் காணவும்....
'எஜமானின் சாயலைக்' கண்டடையவும்...
இப்புத்தகம் உங்களுக்கு உதவும்
என்பதில்
சந்தேகமேயில்லை!!

ரூ. 20.00